AIR MAIL

www.padippakam.com

விலை ரூ. 3-00 LICENCE No. TN/MS(N) WPP-100


# ஈழ சுதந்திரன்

ELA SUTANTIRAN




திருவள்ளுவராண்டு
உ0உகூ

வைகாசி-ஆனி

ஜூன்-1998

புத்தகம்: 11 இதழ்: 7

∴ அமிர்தலிங்கம் முதல் திருமதி யோகேஸ்வரன்வரை எத்தனை எத்தனை கொலைகள்!

∴ எதிரி கொல்வது போதாதா? இனத்திற்குள்ளுமா படுகொலைகள்?

∴ கருத்து வேறுபாட்டுக்கெல்லாம் கதையை முடித்தால் ஈழத்தமிழினத்தில் யார்மிஞ்சுவார்?

# ஈழப் போராளிகளே! இந்திய விடுதலைப்போரை நோக்குவீர்

## ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகம் அறிக்கை

**அகிம்சை வழியோ, ஆயுதப் போராட்ட வழியோ அவரவர் பாதையில் சென்று விடுதலைக்குப் பாடுபட்டதும், கருத்து வேறுபாட்டுக்காக ஒருவரையொருவர் கொலை செய்ய முற்படாததும் இந்திய விடுதலைப்போர் ஈழப்போராளிகளுக்குப் புகட்டும் பாடமாகும். அந்தப் பாடத்தைப் புரிந்து கொண்டு, ஈழத் தமிழரே ஈழத்தமிழரைக் கொல்லும் அவலத்தைக் கைவிட்டு, சிறிலங்கா சிங்களப் பேரினவாதச் சதியை முறியடிக்க தமிழினம் ஒன்றுபட வேண்டும் என்று ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகம் அனைத்து ஈழப்போராளிகளையும் கேட்டுக்கொண்டுள்ளது.**

### அப்பர் தந்தைக்கு அன்பான வாழ்த்து!



தாயுமாகித் தந்தையுமாகி
தம்நிலமிழந்த எம்ஈழத் தமிழர்க்குச்
சற்குருவானவரே! சந்திரகாசரே!
நீவிர் வாழிய பல்லாண்டு!
சோதனை மண்டி வேதனை கொண்டு
சோர்ந்திட்ட போதெல்லாம்
ஆழியைத் துளைத்திடும்
குருளைகள் நீங்களென்று
அறிவாற்றல் ஊட்டியவரே நீவிர்
விரிவான்போல் வாழ்க நீடு!
காரிருள் எமைச் சூழ்ந்து வந்தாலும்
கடலும் வானும் கூடச் சுட்டாலும்
தொண்டர்களாய் எமை வளர்த்து விட்டவரே
என்றும் நீர் வாழிய பல்லாண்டு!
ஐம்பூத மூலங்கள் ஒன்றாகி
செம்மலே உம்உயிர்பூத்த நன்னாளை
செல்வா அளித்த செல்வமே
உம் சிறப்போங்கும் பிறந்ததினப் பொன்னாளை
திருநாளாய்க் கொள்வோம் யாம்!
எம் நிறுவனத் தந்தையே
உம்பாதையில் தவழும் கிள்ளைகள் நாங்கள்
வாழ்த்துதுமே! வாழிய நீடுழி!

என்றும் அன்புடன்
ஈ.த.ம. கழக அனைத்து மண்டலத் தொண்டர்கள்

இது குறித்து வெளியிட்டிருக்கும் அறிக்கை வருமாறு:

இருதலைக்கொள்ளி எறும்புபோல இன்று ஈழத் தமிழினம் தத்தளிக்கும் நிலைமை நாட்டில் ஏற்பட்டு உள்ளது. ஒரு புறத்தில் சிறிலங்கா சிங்களப் பேரினவாத அரசு, அரச வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டு தமிழ்மக்களைக் கொன்று குவித்து வருகிறது. மறுபுறம் புலிகள் இயக்கம் ஆயுத வன்முறைமூலம் தனது கருத்துக்கு முரண்படுவோரை யெல்லாம் முடித்து வருகிறது.

அமிர்தலிங்கம்
யோகேஸ்வரன்
சாம்தம்பிமுத்து
தங்கத்துரை

என்று, தமிழர் விடுதலைக்கு ஆதரவானவர்களை-தமிழீழக் கொள்கை உலக அரங்கில் தெரியவரக் காரணமானவர்களையெல்லாம் தீர்த்துக்கட்டி வருகிறது.

கடைசியாக அவர்களுடைய ஆயுதப் பசிக்கு ஆளானவர் அண்மையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்ப்பாண நகர மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி சரோஜினி யோகேஸ்வரன் ஆவார்.

### துணையிருந்தோர்

இத்தனைக்கும் இவர்களில் பலரும் தமிழீழக் கொள்கைக்கு ஆதரவாகப் பாடுபட்டவர்கள் என்பது மட்டுமல்ல, புலிகளுக்கு ஆதரவாக இருந்து அவர்களுடைய வளர்ச்சிக்குத் துணை புரிந்தவர்களும் ஆவார்கள்.

இன்னும் சொல்லப்போனால் தந்தைசெல்வாவின் அகிம்சை வழி இயக்கத்தில் இருந்து கொண்டே இவர்களின் ஆயுத வழியைப் பலமாக ஆதரித்தவர்களுமாவார்கள். ஆரம்பத்தில் அவர்களுடைய ஆதரவு இல்லையென்றால் புலிகளால் இந்த அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்க முடியாது என்பதை ஈழ வரலாற்றை அறிந்த யாவரும் அறிவார்கள்.

புலிகளுடன் கருத்து மாறுபாடு ஏற்பட்டிருந்த போது கூட அவர்களில் பலர் புலிகளை விமர்சித்தது கூட இல்லை.

### கருத்துமாறுபாட்டால் கதையை முடிப்பதா?

உங்கள் பாதை உங்களுக்கு எங்கள் பாதை எங்களுக்கு என்ற அளவில்தான் செயல்பட்டு வந்தார்கள்.

உடைத்துச்சொல்வதென்றால், அவர்கள் மட்டுமல்ல, ஈழத் தமிழினத்தைச் சேர்ந்த எவருமே புலிகளிடம் கருத்து மாறுபாடு கொண்டிருந்தாலும், அவர்கள் போக்கு தவறு என்று நினைத்தாலும், அவர்கள் திருந்த வேண்டும் என்று நினைத்தாலும், அவர்கள் பலவீனப்படுவதை - பலவீனப் படுத்தப்படுவதை விரும்பியதில்லை; விரும்பவில்லை.

அதே நேரத்தில் விடுதலைக்காகப் போராடுகிற எந்த ஒரு தேசிய இனத்திலும், அந்த விடுதலை கிட்டும் வரை அடிமைப்படுத்தி வைத்திருப்பதுதான் என்றாலும் அந்த அரசாங்கத்திடமிருந்து பெற வேண்டிய நன்மைகளையும் மக்களுக்குப்பெற்றுக்கொடுக்க வேண்டியது அவசியமாகிறது. அதைத்தான் அவர்கள் செய்தார்கள்.

அது விடயத்தில் அவர்களிடம் புலிகளுக்கு மட்டுமல்ல, ஈழ விடுதலையை உண்மையாக நேசிக்கின்ற நமக்கும் சில கருத்துமாறுபாடுகள் உண்டுதான். அது எதற்காகவும் கொள்கையை விட்டு கொடுக்காமல் நடந்து கொள்ள வேண்டும் என்பதன்றி வேறல்ல. ஆனால் அப்படிப் பட்ட சிறுசிறு கருத்து வேறுபாடுகளுக்காக ஆளையே முடித்து விடுவது என்று தொடங்கினால் தமிழினத்தில் யார் மிச்சமிருப்பார்?

மேலும் "தமிழ்மக்களுக்கு எல்லா உரிமைகளையும் வழங்கியுள்ளோம்" என்று உலகை ஏமாற்றுவதற்காக சிறிலங்கா சிங்கள அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளில் தேர்தல் போன்ற நாடகங்களை அவ்வப்போது அரங்கேற்ற முற்படுகிறது. தமிழ் மக்களை பங்கு பற்றித்தான் தீரவேண்டும் என்று நிர்பந்திக்கிறது.

தமிழ் மக்களின் முழுப் பாதுகாப்புக்கும் இன்னும் புலிகள் உத்தரவாதம் தரமுன்வராத நிலையில், தனது முழுக்கட்டுப்பாட்டிலிருந்த யாழ்ப்பாணத்தையே திடீரென்று ஒரு நாள் மக்களைக் காலி பண்ணி வெளியேறும் படிப்புலிகள் நடந்து கொண்ட நிலையில். தமிழீழத்தின் பெரும்பகுதி இன்னும் அரசாங்கக் கட்டுப்பாட்டிக் உள்ள நிலையில், உணவுக்கும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களுக்கும் இன்னும் தமிழ் மக்கள் அரசாங்கத்தை எதிர்பார்த்திருக்க வேண்டிய நிலையில், முழு விடுதலை கிட்டாதநிலையில் மற்ற நாடுகள் எதுவும் முன்வந்து தமிழீழ மக்களுக்குக் கைகொடுக்கும் வாய்ப்புத் தோன்றாத நிலையில், எப்படியும் உயிர் வாழ்ந்துதான் ஆக வேண்டும் என்றுள்ள மக்கள் என்ன செய்வார்கள்?

அந்நிலையில் இடைப்பட்ட காலத்தில் அவர்களை வாழ வைக்கச் சிலரேனும் ஏதாவது செய்துதானே ஆக வேண்டும்? அதைச் செய்ய முற்படுபவர்களை யெல்லாம் 'துரோகிகள்' என்று தீர்த்துக் கட்டினால் தமிழீழத்தில் யார் மிஞ்சுவார்கள்?

இந்திய விடுதலைப் போரிலும் கூட அகிம்சைவழி, ஆயுத வழி என்கிற மாறுபாடு இருக்கத்தான் செய்தது. மகாத்மா காந்தியார் தலைமையில் அகிம்சைப் போர் மூலமே இந்திய விடுதலை சாத்தியம் என்று நம்பியோர் திரண்டு

(8ம் பக்கம் பார்க்க)

ஈழத் தேசிய இனத்தின் உரிமைக்குரல்

www.padippakam.com



''பிறர்க்கின்னா செய்தலின் பேதமை இல்லை
பிறர்க்கின்னா தென்றுபே ரிட்டுத் தனக்கின்னா
வித்தி விளைத்து வினைவிளைப்பக் காண்டலின்
வித்தும் உளவோ பிற'' —அறநெறிச்சாரம்

(பிறர்க்குத் துன்பம் செய்வதைக் காட்டிலும் அறியாமை வேறில்லை. ஒரு பாதகத்தைச் செய்து, அதற்குப் பிறர்க்குத் துன்பம் தருவது என்று பெயர் வைத்துக் கொண்டாலும் அது தனக்கே துன்பத்தை விதைத்துப் பயிர் செய்வதேயாகும். இக்குணம் இப்படிக் கேடு பயப்பதைக் கண்டும் இதைத் தொடர்ந்து செய்வதைக் காட்டிலும் அறியாமை வேறு கிடையாது)

# தெளிவு

## என்று மடியும் எங்கள் கொலை வெறி மோகம்?

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட யாழ் நகர மேயர் திருமதி சரோஜினி யோகேஸ்வரன் அவர்கள் 17-5-98 அன்று அவருடைய வீட்டில் வைத்து அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இது மிகக்கொடுமையானது மனிதாபிமானமற்றது. அரக்கத்தனமானது. இதை எப்படிக் கண்டித்தாலும் தகும்.

ஏனெனில், திரு. யோகேஸ்வரனும் சரி, திருமதி யோகேஸ்வரன்ம் சரி; எந்த இயக்கத்திற்கும் எதிராக இருந்தவர்கள் அல்லர். சொல்லப்போனால் அவர்களின் படுகொலைக்கு காரணம்என்று கூறப்படும் அமைப்பிற்கு அவர்கள் இணக்கமாக நடந்து கொண்டவர்களுமாவர். அப்படியிருக்க, ஏன் இந்தக் கொடூரக் கொலை?

ஒரு கூட்டத்தார் இன்றியமையாதவர்களாக இருந்தாலும், அதை ஒப்புக் கொண்டாலும், சனநாயக வாதிகளால் பாசிச உத்தரவுகளுக்கு நூற்றுக்கு நூறும் பணிந்து நடந்திட முடியாது. ஏனெனில் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு மக்களுக்குத் தொண்டு செய்ய முந்துவதே அவர்களுடைய இயல்பாகும். மக்களுக்கு ஏதாவது செய்யலாம்-செய்யவேண்டும் என்பதற்காகக் கிடைக்கும் வாய்ப்புகளை அவர்கள் பயன்படுத்த முற்படுவதாலேயே அவர்கள் எதிரிகளுக்கு விலை போய்விட்டார்கள் என்று சொல்லிவிடவும் முடியாது.

திருமதி யோகேஸ்வரனே அதற்குச் சிறந்த உதாரணமாகும். தமிழ்ப்பகுதியில் சுதந்திரம் இருக்கிறது என்பதாக வெளியுலகை ஏமாற்றுவதற்காகவே சிறீலங்கா அரசு நடத்திய உள்ளூராட்சித்தேர்தலில் அவர் கலந்து கொண்டாலும், அந்த அரசு தர முன்வந்த பாதுகாப்பை அவர் ஏற்றுக் கொள்ளாதது அவர் விலை போகவில்லை என்பதைக் காட்டுவதாகும். மேலும் விடுதலை கிட்டும் வரை, சிறீலங்கா ஆளுமை இருக்கும் வரை அவர்களிடமிருந்து மக்களுக்குப் பெற வேண்டிய நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கச் சிலரேனும் தேவைப்படுகிறார்கள்தானே? அந்தச் சிலர் முழுக்காக்கை வன்னியர்களாக இல்லாமல் நடுநிலைவாதிகளாக இருப்பது நல்லதுதானே?

அப்படிப் பட்டவர்களை முற்றாக முடித்து விடுவது எப்படி மக்களுக்கு நன்மை செய்வதாகும்? முழு விடுதலை கிட்டும் வரை மக்கள் எதுவுமே கிடைக்காமல், யாருமே அவர்களுக்காக நிற்காமல் சாக வேண்டியது தானா?

இலங்கையில் தமிழ்பேசும் இனமே ஒரு சிறுபான்மை இனம். அதிலும் இஸ்லாமியத் தமிழரை விட்டுவிட்டால், மலையகத் தமிழரை விட்டுவிட்டால் இன்னும் சிறுபான்மை. அதிலும் புலம் பெயர்ந்தவர்கள் போக எஞ்சியிருப்போர் மிகமிகச் சிறுபான்மை. அவர்களிலும் போராளிகள் போக வெளியரங்கமாக மக்கள் பிரச்சினைகளுக்காக முகம் கொடுப்போர் விரல்விட்டு எண்ணப்படக் கூடியோரே. அவர்களையும் இப்படி ஒருவர் பின் ஒருவராக முடித்துக் கொண்டிருந்தால் மக்கள் நிலை என்னதான் ஆவது?

உள்ளபடி தமிழினத்தை இலங்கையிலிருந்தே ஒரேயடியாக ஒழித்துவிடக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் சிங்களப் பேரின வாதத்திற்கு இது உதவி செய்வதேயாகும்.

ஆகவே, திருமதி யோகேஸ்வரனோடு இந்தத் தற்கொலை நடவடிக்கையைக் கைவிடவேண்டும் என்று சம்பந்தப்பட்டோரைக் கேட்டுக் கொள்கிறோம்.

"என்று தணியும் எங்கள் சுதந்திரதாகம்
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்''
என்பது பாரதியாரின் பாடல். அதை
''என்று தணுயும் எங்கள் சுதந்திரதாகம்
என்று மடியும் எங்கள் கொலைவெறி மோகம்"
என்று மாற்றிப் பாடவேண்டிய பரிதாப நிலை மாறவேண்டும். ஈழத்தமிழினம் வாழவேண்டும்.

## அகதி முகாம்களில் வாழும் மக்களின் மனநலப் பிரச்சினைகள்

ஆரோக்கியம் என்பது நோய்வாய்ப்படாமல் இருப்பது மாத்திரமல்ல. அது உடல், மனம், மற்றும் சமூகம் அனைத்தின் நல்வாழ்வாகும். உடல் நலம் போன்றே மன நலமும் பேணி பாதுகாக்கப் பட வேண்டும்.

முகாம்களில் அகதி மக்களின் வாழ்விடம், அங்குஅவர்களின் தனித்தன்மைபாதிப்பு, தாரமிழந்தவர்களின் பிரச்சினை, தாய் நாட்டிலும் வதைபட்டு, தஞ்சம் புகுந்த நாட்டிலும் பாதிப்புக்கும், இழிப்புக்கும் ஆளாக்கப்படுதல் இந்த அவல நிலையினால் அவர்களிடையே மனப்பதட்டமும் (ANXIETY) மனச்சோர்வும் (DEPRESSION) மிகுந்து காணப்படுகின்றன. இதுவே பலருக்கு மனவருத்தத்தை உண்டாக்க கூடிய சூழ்நிலையாக அமைந்து விடுகின்றது. விரக்தி வேதனை இவற்றின் உச்ச நிலையில் தற்கொலை செய்து கொள்ளும் போக்கும் முகாம் மக்களிடையே தோன்றியது.

### பயனுள்ள கருத்து

இந்நிலையினைத் தடுப்பதற்கான முதல் முயற்சியாக இலங்கையைப் பிறப்பிடமாக கொண்டவரும் லண்டனில் சேவையாற்றும் மனநல மருத்துவர் டாக்டர் சற்குணநாயகம் அவர்கள் 1993இல் சென்னை தலைமைக் கழகப் பணிமனைக்கு வருகை தந்த போது அவருக்கு முகாம்களில் நிலவும் தற்கொலை நிகழ்ச்சி பற்றி எடுத்துக் கூறப்பட்டது. அவர் அதனை எப்படித் தடுக்கலாம் என்பது பற்றிப் பயனுள்ள கருத்துகளை கூறினார்.

மேலும் முகாம்களில் வாழும் அகதிமக்களின் மனநலப் பாதிப்பைத் தடுப்பதற்கு அன்பும், ஆதரவும், அரவணைப்பும் அத்துடன் அவர்களுக்கு ஆற்றுப்படுத்தலும் தேவைப்பட்டது. கழகத் தொண்டர்களுக்கு ஆற்றுப் படுத்தல் பயிற்சியை பயிற்றுவிப்பதற்குமதுரை இறையியல் கல்லூரி முதல்வர் அருட்திரு கம்பர்மாணிக்கம் அவர்கள் சம்மதம் தெரிவித்தார். பின் வருவோர் ஆற்றுப்படுத்தல் பயிற்சியை முடித்து ஆற்றுப் படுத்தும் உதவியாளராக முகாம்களில் சேவையாற்றி வருகின்றார்கள்.

1. திரு. பி. இலங்கேஸ்வரன்-செட்டிமேடு
2. எஸ். மேரிலுமினா-வெம்பக்கோட்டை
3. ஜி. வியாசர்மணி-தாப்பாத்தி
4. எஸ். நடேசலிங்கம் ஈரோடு
5. எம். தமிழ்ச்செல்வி சென்னை
6. திரு. எம். சுந்தரபாண்டியன்-சென்னை
7. திரு. எஸ், ஜோசப்மார்க்-சென்னை
8. என். செல்வலட்சுமி சென்னை
9. இரா. மாணிக்கவாசகர்-சென்னை
10. எஸ். விஜயபாலன்-சென்னை
11. எம். அன்ரனி-சென்னை
12. பி. கிருஷ்ணகுமாரி-பாலாறு அணைகட்டு
13. வி.ஆர். மல்லிகா-திருச்சி
14. எஸ். மார்ட்டின் தவநாதன்-ஒக்கூர்
15. ஏ. யூட்ரஞ்சனி-அடியனூத்து
16. பி. யேசுநாதன்-தோப்புக்கொல்லை
17. திரு. எல். பிரியந்தன்-ஆழியாறுநகர்
18. எஸ். மரியதாசன்-தோப்புக்கொல்லை
19. எம். தனலெட்சுமி-கோவளம்

மனநல மருத்துவர் டாக்டர் சற்குணநாயகம் அவர்கள் சென்ற ஏப்ரல் மாதம் மீண்டும் லண்டனிலிருந்து இந்தியாவிற்கு வருகை தந்தபோது கழகப் பணிமனைக்கு விஜயம் செய்தார். தற்போது முகாம்களில் நிலவும் மனநலப் பிரச்சினை பற்றிக் கழகத் தொண்டர்களிடம் கேட்டறிந்து தமிழ் நாட்டில் உள்ள சில அகதி முகாம்களுக்கும் சென்று மன நோயாளரை பார்வையிடவும் அதற்குரிய ஆலோசனை அறிவுரைகளை கழகத்தின் நலப் புணியாளருக்கு வழங்கவும் கம்மதம் தெரிவித்தார்.

மண்டல ரீதியாக சில முகாம்களுக்குச் செல்வதற்கு முடிவு செம்யப்பட்டு. பயணத் திட்டத்தின் முதல் கூட்டமாக 8-4-98 அன்று நெல்லை மண்டலம் சென்றடைந்தார். அவருக்கு உதவியாக மருத்துவப் பிரிவின் இணைப்பாளரும் மனிதவள மேம்பாட்டு துறைசெயல் திட்ட இயக்குநருமான இரா. மாணிக்கவாசகர் உடன் சென்றார்.

(தொடரும்)

தொகுப்பு :
இரா. மாணிக்கவாசக

## நோக்குவீர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நின்றதைப் போலவே, ஆயுதப் போராட்டத்தின் மூலம் தான் இந்திய விடுதலையை வென்றெடுக்க முடியும் என்று நம்பியோர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் தலைமையில் திரண்டு நின்றனர்.

அவர்கள் ஒருவரையொருவர் கடுமையாகத் தாக்கிக் கொண்ட போதும், யாரையும் யாரும் கொலை செய்ய முற்படவில்லை. இருபிரிவினருமே வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிராகத்தான் தங்கள் பலத்தைப் பிரயோகித்தனரே தவிர, சகோதர யுத்தத்தில் இறங்கி தம் இனத்தையே அழிக்க முற்படவில்லை.

ஈழப் போராட்டத்திலும் அது போன்ற முறையைக் கடைப்பிடிப்பதுதான்சிங்களப் பேரினவாதத்தை முறியடிக்க உதவுமேயொழிய, எதிரியுடன் யுத்தம் நடத்தும் அதே வேளையில் சகோதர யுத்தத்தையும் மேற்கொண்டு தமிழர் தலைகளை உருளச்செய்வது, எதிரிகளுக்குத்தான் உதவுபடியாக இருக்குமே தவிர, ஈழத்திற்கு உதவும்படியாக நிச்சயம்இருக்காது.

தற்போதைய இயக்க நிலைகளை மறந்து விட்டு, கட்சி நிலைகளை மறந்து விட்டு, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒரே இயக்கமாக எண்ணிப் பாருங்கள். இந்த இயக்கம் ஒரு அமிர்தலிங்கத்தை, ஒரு யோகேஸ்வரனை, ஒருதங்கத்துரையை, ஒரு சாம் தம்பிமுத்துவை உருவாக்க எவ்வளவு காலமாகியிருக்கும்? எவ்வளவு பாடுபட்டிருக்கும்?

ஒவ்வொரு தலைவரும் உருவாக குறைந்தபட்சம் ஒரு ஐம்பதாண்டு காலம் ஆனதல்லவா?

அந்த ஐம்பதாண்டுகால விருட்சங்களை அற்பக் கருத்து வேறுபாடுகளுக்காக அரை நொடியில் வெட்டிச் சாய்த்தால் யாருக்கு நட்டம்?

ஈழத்தமிழ் இனத்திற்கு அல்லவா?

துப்பாக்கியில் தோட்டாக்களைச் சுட்டுத் தீர்த்தால் திரும்ப நிரப்பிக் கொள்ளலாம் சமுதாயத் தலைவர்களையும் அப்படி அழித்து விட்டு உடனே எழுப்பமுடியுமா?

இந்திய விடுதலைப் போராட்டத்தில் இப்படிச் சகோதர யுத்தத்தால் அல்ல, எதிரியுடன் நடந்த யுத்தத்தில் இன அழிவு ஏற்பட்டதற்கே

''தண்ணீர்விட்டா வளர்த்தோம்
சர்வேசா இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம்
கருகத் திருவுளமோ?''

என்று, கொதித்துக் குமுறிப் பாடினான் பாரதி.

ஈழத்திலோ, செந்நீரைப் கொட்டி அப்பயிரைத் தீயை வைத்துக் கொளுத்துகிறோம். எதிரி கருக்குவது ஒருபுறம் நடக்க, நாமே நொறுக்குவது மறுபுறம் நடந்து கொண்டிருக்கிறது.

இந்த அவலம் உடனே நின்றாக வேண்டும்.

இது உள்நாட்டில் இன எதிரிகளுக்கு உதவுவதோடு மட்டுமல்ல, அயல்நாடுகளில் ஈழ ஆதரவையே அழித்துக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக, பக்கத்துத் தமிழகத்திலும் இந்தியாவிலும் ஈழம் என்று பேச்செடுத்தாலே எரிந்துவிழும் நிலையை மக்களிடம் உருவாக்கி வருகிறது.

அண்டை நாட்டு ஆதரவும், உலக நாடுகளின் அனுதாபமும் இல்லாமல் எப்படி ஈழவிடுதலையை வென்றெடுப்பது?

ஆகவே, பாதை வேறு வேறானாலும் பயணம் ஒன்று என்பதை ஒப்புக் கொண்டு, அகிம்சை வழியானாலும், ஆயுத வழியானாலும், ஜனநாயக முறையானாலும், வேறு முறையானாலும், அவரவர் பாதையில் அவரவர் சென்று ஈழத்தை வென்றெடுக்க, ஒருவர் பாதையில் ஒருவர் குறுக்கிடாமல், தமிழீழ விடுதலைப் போர் வெற்றிபெறப் பாடுபட முன்வரவேண்டும் என்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



## செய்திச்சரம்

1-5-1998

திரிகோணமலை மாவட்டம் சேருவில பகுதியில் உள்ள இராணுவ சோதனைச்சாவடி மீது புலிகள் தாக்குதல் நடத்தியதில் 3 இராணுவத்தினர் கொல்லப் பட்டனர்.

(தினத்தந்தி)

90 கோடி ரூபாய் செலவில் இந்தியாவிலிருந்து 500 பஸ்களை வாங்க இலங்கை அரசு முடிவு செய்துள்ளது.

(தினமலர், இந்து)

2-5-1998

புலிகளுக்கும், இராணுவத் தினருக்குமிடையேநேற்று நடந்த சண்டையில் புலிகளின் 2 படகுகள் மூழ்கடிக்கப்பட்டன.

(தினமணி, இந்து)

புலிகள் இயக்கத்தில் சுமார் 10 ஆயிரம் வீரர்கள் உள்ளனர் என்று அமெரிக்க அரசு வருடந் தோறும் வெளியிடும் தீவிரவாத இயக்கங்களைப்பற்றியஅறிக்கையில் தெரிவித்துள்ளது.

(கதிரவன்)

3-5-1998

இலங்கை மாங்குளம் பகுதியில் தேற்று புலிகளுக்கு இராவத்தினருக்குமிடையே நடந்த சண்டையில் 17 புலிகள் கொல்லப்பட்டனர்.

(தினமணி, தினகரன், தினத்தந்தி, கதிரவன், இந்து)

4-5-1998

இலங்கையிலிருந்து, 24 குடும்பங்களைச் சேர்ந்த 86 தமிழ் அகதிகள் நேற்று முன் தினம் தனுஷ்கோடிக்கு வந்தனர்

(தினமணி)

இலங்கையில் 15 ஆயிரம் பள்ளி மாணவர்களை இராணுவத்தில் சேர்க்க அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு பள்ளிக் கூடங்களுக்கும்சென்று இராணுவத்துக்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

(தினமணி, தினத்தந்தி கதிரவன்)

ஐ.நா.சபை மூத்த அதிகாரி ஒருவர் இலங்கை வடக்கு பகுதிக்கு வருவதையொட்டி புலிகள் 6, 7, ஆகிய தேதிகளில் போர் நிறுத்தம் அறிவித்து உள்ளனர்.

(கதிரவன்)

5-5-1998

திரிகோணமலை மாவட்டம் மூத்தூர் நகரிலுள்ள போலீஸ் நிலையத்தின் மீது நேற்று முன் தினம் புலிகள் நடத்திய தாக்குதலில் 11 போலீஸார், ஒரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

(தினமணி, கதிரவன்)

புலிகளின் தாக்குதலுக்கு பயந்து, இலங்கை இராணுவத்தை விட்டு ஓடிய 15 ஆயிரம் இராணுவத்தினர், மீண்டும் பணிக்கு திரும்ப அரசு பொது மன்னிப்பு வழங்கி 5 நாள் அவகாசம் அளித்துள்ளது.

(தினகரன்)

மாதர் சங்கச் செயற்பாடுகள்:

# கொண்டம் மகளிர் அமைப்புக் கூட்டத்தில் விவாதமும் தீர்மானங்களும்

மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முதல் கட்டம் திருவண்ணாமலை மாவட்டம் கொண்டம் முகாமில் 25-4-98 ஆம் திகதி நடைபெற்றது. இதில் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் செயலாளர் செல்வி சி. சூரியகுமாரி, துணைப் பொருளாளர் திருமதி அகிலா, திருவண்ணாமலை வேலூர் மாவட்ட இணைப்பாளர் ஜெயஞானசீலன், மாவட்டத் தொண்டர் கிருஷ்ணபிள்ளை மற்றும் செல்வி தேன்மொழி, வருவாய்ப் பகுதிப் பொறுப்பாளர் இரத்தினராஜசிங்கம், வேலூர் மாவட்டத் தொண்டர் தவராசா, காஞ்சிபுர மாவட்டத் தொண்டர் விஜயபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர். திருவண்ணாமலை மாவட்ட முகாம்களைச் சேர்ந்த 78 மாதர்சங்க உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். அனைவரும் கூட்டத்தில் கருத்துக்கள் தெரிவிப்பதற்கு ஆயத்தமாக வந்திருந்தனர்.

முதலில் செயலாளர் குத்துவிளக்கு ஏற்றியதைத் தொடர்ந்து கழகத்தில் இருந்து வருகை தந்தவர்கள் விளக்கேற்றி அதன் பின் ஒவ்வொரு முகாம் மாதர் சங்கத் தலைவிகளும் ஏற்றியதைத் தொடர்ந்து மாணவர்களினால் இறை வணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டு, 10-30 மணியளவில் கூட்டம் இனிதே ஆரம்பமானது. தொடர்ந்து முகாம் உபதலைவர் சந்திரகுமார் வரவேற்புரை ஆற்றினார். கழகத்தின் திட்டங்கள் பற்றி திருமதி அகிலா கூறுகையில் கழகம் ஆற்றி வரும் சேவையில் முக்கியத்துவம் வாய்ந்தது ஊட்டச்சத்து. இச் சேவையை மேலும் விரிவு படுத்திச் செய்வதற்கு முகாம்களில் பெண்கள் சமுதாயம் ஒருங்கிணையவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

மேலும் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களுக்கு வழங்கும் சத்துணவு பற்றியும், சிறார்களுக்குக் கடலை வழங்குவது பற்றியும் தெளிவுபடக் கூறியதுடன், இதனால் கிடைக்கும் பயன்கள் என்னவென்பதும் கூறி, பெண்களின் பங்களிப்பு இத்துடன் நின்று விடாமல் கல்விச் சேவை, மருத்துவச்சேவை போன்றவற்றிலும், ஆர்வம் காட்ட வேண்டுமெனவும், ஏதேனும் பயிற்சிகள் மற்றும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டால் அங்கு நடந்தவற்றை முகாமில் உள்ள மக்களுக்கு எடுத்துக்கூறி அனைவருக்கும் தெரியப் படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

செல்வி தேன்மொழி பேசுகையில் முகாம் மட்டத்தில் மாதர்களின் சேவையின் முக்கியத்துவம் பற்றி குறிப்பிட்டு, கழகத்தின் சேவைகள் அனைத்து மக்களுக்கும் சிறந்த முறையில் போய்ச் சேருவதற்குச் சிறப்பான நிர்வாகம், மாணவர் மன்றம், விளையாட்டுக்குழு, மாதர்சங்கம் என்பன இயங்கிட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். முகாம் சமுதாயத்தை எடுத்துக் கொண்டால் தனி ஆண் ஒருவரின் வருமானம் போதாத நிலையில் பல குடும்பங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றதைக் காணக்கூடியதாய் உள்ளது. ஆகவே இச்சுமையைக் குறைப்பதற்கு குடும்பப் பெண்களும் முன் வரவேண்டும். கழகம் இதனைக் கருத்திற் கொண்டு பெண்களுக்கென வேலை வாய்ப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகின்றது. தையல் பயிற்சிகளை ஆரம்பித்து பயிற்சிக்கான பொருட்கள் வழங்கி ஊக்குவிக்கின்றது இத் தொழிலினைக் கற்று சிறு வருவாயைப் பெருக்கிக் கொள்ளப் பெண்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

செயலாளர் அவர்கள் உரையாற்றுகையில், இங்கு குத்து விளக்கு ஏற்றிய முறை எமக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. நான் ஒளியாகவும் நீங்கள் என்னுடன் துணை ஒளியாகவும் இருந்து ஒத்துழைப்பீர்கள் என நம்புகிறேன். முகாம் சமுதாயத்தில் பெண்கள் பங்களிப்பு முறையாக முழுமையாகக் கிடைக்குமிடத்துசேவைகள் அனைத்தும், முகாமிற்குள் சென்றடைய இலகுவாக இருக்கும். அதுமட்டுமல்லாமல் நாம் நமது சொந்த நாட்டில் வாழ்ந்த வாழ்க்கையிலும் பார்க்க தற்போது மாறுபாடான வாழ்க்கையிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நமது சமுதாயம் மீண்டும் நாட்டுக்கு திரும்பிப் போகின்ற போது ஒரு உயர்ந்த சமூகத்தினராக நாட்டுக்குச் செல்ல வேண்டும். முகாம் சமுதாயத்தில் வாழ்ந்து வரும் குழந்தைகளின் நலனை நாம் கருத்திற் கொள்ள வேண்டும். ஆண் ஒருவரால் உழைத்துக் கொண்டு வரத்தான் முடியும். அந்தக் குடும்பத்தின் பெரும்பான்மையான பகுதியைப் பெண்கள் தான் கொண்டு நடத்த வேண்டிய நிலையில் உள்ளனர். வருவாய்க்கு ஏற்றவாறு குடும்பம் நடத்த வேண்டும். அதற்குள்ளேயே மருத்துவச்செலவு, கல்விச் செலவுகளைக் கவனித்துக் கொள்ள வேண்டும். இது போன்ற நிலையில் வாழ்ந்து வரும் குடும்பங்களிலுள்ள பெண்கள், தம்மைச் சுற்றியுள்ள பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கு பெண்கள் சமுதாயமே ஒன்றிணைந்து, ஒற்றுமையுடன், மாதர்சங்கங்களை உருவாக்கி அதன் மூலம் கழகம் ஆற்றி வரும் சேவைகளைப் பற்றி கலந்துரையாடுவதுடன், சேவைகள் அனைவருக்கும் சென்றடைய வழிகோல வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

கழகம் சிறார்களுக்கு வழங்கி வரும் ஊட்டச்சத்து மேலும் சிறப்புடன் அமைய பெண்கள் ஒத்துழைக்க வேண்டும். சிறார்களுக்கு மேலதிக ஊட்டச்சத்துக்களைப் பெற்றுக் கொடுக்க ஒவ்வொரு பெண்களும் முன் வர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு, வீட்டிலே பெண்களாகக் கூட தயாரிக்கக் கூடிய சிறுவர்களுக்கான சத்துமாவை அறிமுகம் செய்து வைத்தார்.

நாம் பெரும் செலவில் கடையில் சத்துணவு டின்களை கொள்வனவு செய்வதைப் பார்க்கிலும் குறைந்த செலவில் சுகாதாரமான முறையில் வருவாய் குறைந்த நிலையில் இருக்கும் குடும்பப் பெண்கள் மூலமாகத் தயாரிக்கச் செய்து விநியோகம் செய்யலாம். இதனைத் தயாரிக்கும் குடும்பம் சிறு வருவாயையும் ஈட்டிக் கொள்ள வாய்ப்புண்டு இது போன்ற திட்டங்களை அமுல்படுத்த மாதர்சங்க உறுப்பினர்கள் முன் வர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார் அவர். மதிப்பீட்டாளர்கள் முகாம்கள்சென்று பார்வையிட்ட போது, குழந்தைகளின் பல்வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளதை (பற்சொத்தை) அவதானித்துள்ளனர். இதனால் ஊட்டச் சத்து அடங்கிய உணவுகளை உட்கொள்ளாமல் குழந்தைகளின் வளர்ச்சி நிலை பாதிக்கப்படுகின்றது. இந்நிலையில் பற்சொத்தை கட்டுப்படுவதற்கு பாலர் பள்ளியில் மதிய உணவிற்குப்பின் காலையில் குழந்தைகள் உறங்கிஎழும்பும் போது தாதுப்பு அடங்கிய சிபாகா டூத்பேஸ்ட் மூலம் பல் துலக்கி அதன் பின் கடலை வழங்குவதாகக் கழகம் முடிவு செய்து, ஒரு சில முகாம்களில் இத்திட்டத்தை அமுலாக்கம் செய்து வருகின்றது. அதை அனைவரும் பின்பற்றுமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும் பெண்கள் சிறு சேமிப்புத் திட்டங்களை ஆரம்பித்திட வேண்டும். இத்திட்டத்தின் மூலம் கடன் தொல்லைகளில் இருந்து விடுபடலாம். இங்கு கூறிய கருத்துக்கள் அனைத்தையும் முகாமிற்கு எடுத்துச் சென்று பெண்கள் சமுதாயத்தில் பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்திட இங்கு அமர்ந்திருக்கின்ற மாதர்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். மனிதன் வளர்ந்து வருவதற்கு யாரிடம் வாங்குகிறோமோ அதை திருப்பி கொடுக்க வேண்டும் என்ற மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். முகாம்களில் இருக்கின்ற நலிந்த பிரிவினருக்கு உதவி செய்ய வேண்டும். அதை இனி மாதர்சங்க மூலமாகத்தான் கொடுப்போம் என்று கூறினார். மாதர்சங்க மூலமாக மாதம் 10 ரூபா அல்லது வாரம் இருமுறையோ, சிறுசேமிப்பு போல் சேர்க்கவேண்டும். இத்திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்தினால் நீங்கள் முகாம் மக்களுக்கு செய்த ஒரு சேவையாக இருக்கும்.

நீங்கள் அனைவரும் சேமிக்கப் பழகவேண்டும். எந்த ஒரு கஷ்டம் வந்தாலும் நாங்கள் அனைவரும் சேமித்துப் பழகவேண்டும். ஏன் குழந்தைகளுக்கு சத்துமா வழங்குகிறோம் என்று மாதர்களிடம்கேட்ட அவர், குழந்தைகளை 6 வயதினில் பள்ளிக்கு அனுப்புகிறோம். 5 வயதில் சரியான வளர்ச்சி பெற்ற பின்புதான் 6 வயதில் பள்ளிக்கு அனுப்புகிறோம். தாயின் பராமரிப்பிலேதான் குழந்தைகள் இருக்கிறார்கள். அதனால்தான் சிறுவர்களுக்கான சத்துமாவை பெற்றோரிடம் வழங்குகிறோம். பெற்றோர்கள் வறுமையின் காரணமாக வேலைக்கு சென்றாலும் குழந்தைகளைப் பராமரிக்கத் தவறக்கூடாது. குழந்தைக் காப்பகத்தை ஆசிரியர் கவனிப்பதுடன் ஆசிரியருடன் ஓர் வயதானவரைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். குழந்தைகளை 5 வயது வரை கவனித்து வரவேண்டும் இந்தக் கருத்துக்களை மாதர்சங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும் சேவை செய்கின்ற நாங்கள் அனைவரும் மக்களை அணுகிச்சேவை செய்ய வேண்டும் என்று கூறி தனது உரையை முடித்தார்

அடுத்து கழகத்தின் வருவாய் ஊக்குவிப்புப் பொறுப்பாளர் க.இரத்தினராசசிங்கம் வருவாய்ஊக்குவிப்புத்திட்டம் தொடர்பான சில கருத்துக்களை எடுத்துக் கூறினார்.

### அத்தியந்தல்

மதிய இடைவேளைக்கு பின்பு ஒவ்வொரு முகாம் மாதர் சங்கம் மற்றும் மாதர்சங்கச் செயல்பாடுகள் பற்றிக் கூறுதல் நடைபெற்றது. அத்தியந்தல் மாதர்சங்கத் தலைவி கூறுகையில் நல்ல ஒற்றுமையுடன் எங்களுடைய மாதர் சங்கம் செயல்படுகிறது கழகத்தின் சார்பாகவும் இயலாத

(4-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# மாதர் சங்கச்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களுக்கு உதவிசெய்வோம். நாங்கள் இனி சிறுசேமிப்புத் திட்டத்தை செயல்படுத்த உள்ளோம் என்றார்.

### தென்பள்ளிப்பட்டு

மாதர்சங்கத் தலைவி திருமதி. இந்திராணி பேசும்போது தமது முகாமில் குழுக்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன. சத்துமா திட்டம் நல்லமுறையில் நடைபெற்று வருகின்றது. தையல் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் சேவைகள் சிறப்பாகவுள்ளது. சிரமதானப் பணிகளும் ஒழுங்காக நடந்துவருவதாகவும் தெரிவித்தார்.

### அடியண்ணாமலை

மாதர்சங்கம் சார்பில் கூட்டத்தில் கூறப்பட்ட கருத்துக்களின் பிரகாரம் குழந்தைகள் காப்பகம் உருவாக்கிட முயற்சி மேற்கொள்வதாகத் தெரிவித்தனர்.

### ஆரணி

மாதர்சங்கம் சார்பில் பேசியோர் அநேகமான பெற்றோர்கள் ஆங்கில வழிக் கல்வியை நாடுவதால் முகாமில் பாலர் பள்ளி நடைபெறுவது இல்லை. சிறார்களை, முதலில் ஆங்கில வழிக்கல்விக்கு அனுப்பிவிட்டு, நாட்டுக்கு செல்கின்றபோது தமிழை மறந்து தவிக்கின்ற நிலைக்குத்தள்ளப் பட்டுள்ளதை மாற்றி அமைக்க வேண்டுமென்று கூறினார்.

### கொண்டம்

மாதர்சங்கம் சார்பில் பேசியோர் இங்கு மாதர் சங்கம் சிறப்பாக இயங்கி வருகின்றது. குழந்தைக் காப்பகம் உண்டு. மாதர்சங்கச் சேவையில் பாலர்பள்ளிக் குழந்தைகளுக்கு சீருடை தைக்கப்பட்டுள்ளது என்றனர்.

### ஓசூர்

மாதர் சங்கம் சார்பில் பேசியோர் இங்கு பாலர் பாடசாலை உண்டு. மாதர்சங்க சேவையில் 3 உறுப்பினர்கள் அடங்குவர். மேலும் மாதர்சங்கச் சேவையை விரிவுபடுத்த முயற்சி செய்வதாகத் தெரிவித்தனர்.

### தவசி

தவசி மாதர்சங்கம் சார்பாக அனைவருக்கும் வணக்கம் கூறி, தங்கள் முகாமில் மாதர்சங்கம் இல்லை என்று மன வேதனையுடன் கூறினர். கழகத்தால் மாதர்சங்கம் அமைத்துத்தரும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொண்டு விடைபெற்றனர்.

### பாப்பந்தாங்கல்

பாப்பந்தாங்கல் மாதர்சங்கம் சார்பாக அனைவருக்கும் வணக்கம் கூறி மாதர்சங்கம் இல்லையென்றும், ஆரம்பிக்க வேண்டும் என்றும் கூறினர்.

### குன்னத்தூர்-1

மாதர்சங்கம் சார்பில் பேசியோர் இங்கு மாதர்சங்கம் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. குன்னத்தூர் 2 முகாமிலும் மாதர் சங்கம் இல்லை. இனிமேல் மாதர்சங்கம் ஆரம்பிக்கலாம் என்று உள்ளோம். இங்கு மின்சார வசதி கிடையாது என்றனர்.

காலையில் இருந்து நடந்த விவாதம் பற்றி உங்களின் கருத்து என்ன என்று செயலாளர் கேட்டதற்குதென்பள்ளிப்பட்டு செல்வகுமார் மாதர்சங்கம் இல்லாத முகாம்களில் மாதர்சங்கம் ஏற்படுத்த வேண்டும். சத்துமா வளர்ச்சி, ஆரோக்கியம் கண்காணிக்க வேண்டும். முகாம்களில் சிறு சேமிப்புத் திட்டத்தை ஏற்படுத்தலாம். பெண்கள் தையல் கலையை முகாம்களில் ஏற்படுத்தலாம். பெண்களை தகைமைப்படுத்திட ஒரு பயிற்சி கொடுக்கலாம். சத்துணவை மாதர்சங்கம் ஏற்று நடத்த வேண்டும். தையல் பூப்போடுகின்ற கலையில் ஈடுபாடு இருக்கின்றவர்கள் கழக அளவில் வந்து பழகிக் கொள்ளலாம் என்றார்.

பின் வருகை தந்த மாதர்களால் தீர்மானங்கள் சில எடுக்கப்பட்டது. அவையாவன:

1. மாதர் சங்கம் இல்லாத முகாம்களுக்குச் சென்று மாதர்சங்கங்களை உருவாக்குதல்.
2. சத்துணவு / கடலை தயாரித்து கொட்டகையில் உண்ணவைத்தல்.
3. நோயாளிகளை வீடுகளில் சென்று பார்வையிடல்.
4. குழந்தைகள் காப்பகம் அமைத்தல்.
5. மாதமொருமுறை பெற்றோர்-ஆசிரியர் சங்கக் கூட்டம் கூடுதல்.
6. சிறு சேமிப்புத்திட்டங்களை உருவாக்குதல்.
7. பெண்கள் திறமையினை மேம்படுத்துவதற்காக பயிற்சியளித்தல். (தையல், வயர் கைவேலை)
8. இளைஞர்களை மேம்படுத்துவதற்கான பயிற்சியளித்தல்.
9. மேலதிக துணை சத்துணவு குழந்தைகளுக்குத் தாய்மாரே தயாரித்து வழங்குவதற்கு முகாமிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தல் இவ்வாறான ஒன்பது தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

# ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகமும் ஜே.ஆர்.எஸ். தொண்டு நிறுவனமும் இணைந்துநடத்திய ஆசிரியர்பயிற்சிமுகாம்

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகமும், ஜே. ஆர். எஸ். தொண்டு நிறுவனமும் இணைந்து நடத்திய ஆசிரியர்கள் பயிற்சி முகாம், சென்னையை அடுத்த தாழம்பூர் நத்தம் நல்லாயன் ஆராய்ச்சி மையத்தில் 1998 ஏப்ரல் 29ம் திகதி தொடக்கம் மே 2ம் திகதி வரை நடைபெற்றது.

தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழீழப் பண்ணுடன் தொடக்க விழா நிகழ்ச்சி ஆரம்பமானது. ஜே.ஆர்.எஸ் நிறுவனத்தைச் சேர்ந்த அருட்தந்தை வின்னி ஜோசப் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து லயோலா கல்லூரியின் செயலாளர் அருட்தந்தை ஜோதி குத்துவிளக்கு ஏற்றி சிறப்புரையாற்றினார். கல்வியின் முக்கியத்துவம் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்.

தொடர்ந்து முனைவர் அரு. கோபாலன் உரையாற்றுகையில் மாணவர்கள் சமுதாயமே ஆசிரியர்களின் கையில்தான். நாளை மலரப் போகும் இச் சமுதாயத்தினை அறிஞர்களாக மாற்றுவதும் ஆசிரியர்கள் தான். ஆகவே இதனைக் கருத்திற்கொண்டு அறிவுத்திறனை நல்ல முறையில் வளப்படுத்திக் கொள்ள இப்பயிற்சிதனைச் சிறந்த முறையில் பெற்றுப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

### நிறுவனர் உரை

கழகத்தின் பொருளாளர் சா. செ. சந்திரகாசன் பேசுகையில் தற்போது ஈழ நாட்டின் சூழ்நிலை பற்றிக் கூறியதோடு, பள்ளி மாணவி நிசாந்திக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அங்கு நேர்ந்த கதியையும் தெரிவித்தார். மேலும் தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பிச் செல்லவிருக்கின்ற மாணவர் சமுதாயம் படித்தவர்களாகச் செல்லவேண்டும். இதனைக் கருத்தில் ஏற்று பயிற்சி பெற வந்திருக்கும் ஆசிரியர்கள் அனைவரும் வழங்கப் போகும் பயிற்சியினை நல்ல முறையில் பெற்றுச் செல்வது மட்டும்மல்லாமல், நல்ல ஆசிரியர்களாக இருந்து மாணவர்களை வழிநடத்தக் கூடியவர்களாக மாற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு, வருகை தந்திருந்த அனைத்துப்பிரமுகர்களுக்கும் நன்றி தெரிவித்து உரையை முடித்துக் கொண்டார்.

இப்பயிற்சி முகாமை நடத்துவதற்கு ஜே. ஆர். எஸ். தொண்டு நிறுவனத்தில் இருந்து மூன்று அருட் சகோதரர்கள் வருகை தந்திருந்தனர்.

1. சேவியர் ஆரோக்கியசாமி
2. பேசில்
3. இருதயராஜ்

ஆகியோர் இப்பயிற்சி வகுப்பினை நடத்திட, 67 ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். சென்னை மண்டலத்தைச் சேர்ந்த 1. காஞ்சிபுரம், 2. திருவள்ளூர், 3. விழுப்புரம் 4. கடலூர், 5. வேலூர், 6. திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் இருந்து அந்த ஆசிரியர்கள் வருகை தந்திருந்தனர். பெயர், தங்கியிருக்கும் முகாம் போன்றவற்றைத் தெரிவித்து அறிமுகம் செய்து கொண்டனர். முதலாம் நாள் பயிற்சியின் போது கல்வியின் முக்கியத்துவம் பற்றிக் கூறப்பட்டது. இது போன்ற பயிற்சியின் மூலம் அறிவுத் திறனைப்பெற்று மாணவர்களுக்கு கல்வி புகட்டுவதில் ஆர்வம் காட்ட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. நாளைய நாட்டின் தலைவர்கள் இன்றைய வகுப்பறையில் என்பதைச் சுட்டிக்காட்டியதுடன் நான்கு நாள் பயிற்சியும் ஆசிரியர்களுக்கு எளிதான முறையிலும், விளங்கிக் கொள்ளக் கூடிய வகையிலும், சுயமாகச் சிந்திக்கக் கூடிய வகையிலும் அமைந்திருந்தது. 3ம் நாள் ஆசிரியைகளின் ஆய்வுத் திறன் பரிசீலிக்கப் பட்டது. அன்றைய மாலைப் பொழுதில், ஆசிரியைகளின் கலைத்திறன் வெளிக்கொணர 5 குழுக்களாகப் பங்கு பற்றி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அனைவரின் பங்கேற்பும் பாராட்டுக்குரியது.

தொடர்ந்து இந்நாட்டைச் சேர்ந்தவர்களும், அரசுப் பாடசாலையில் கல்வி கற்பிக்கின்றவர்களுமான இரு ஆசிரியர்கள் திரு. வீரபத்திரன், திருமதி ரேணுகா ஆகியோர் தாம் கல்வி கற்பிக்கின்ற அனுபவத்தை ஆசிரியர்களிடையே பகிர்ந்து கொண்டதுடன், கல்வியைக் கற்கின்ற முறைகளையும் எடுத்துக் கூறினார்கள்.

யாழ். பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய பேராசிரியர் சிற்றம்பலம் அவர்கள் இலங்கை வரலாறு பற்றிய முக்கிய அம்சங்களை விரிவாக எடுத்துரைத்தார்,

1. 4-5-98,7-5-98 திகதி ஈரோடு மண்டலத்திற்கு கீழ் வரும் முகாம் ஆசிரியைகளுக்கும்,

2. திருச்சி மண்டலத்தைச் சேர்ந்த திருச்சி-புதுக்கோட்டை ஆசிரியர்களுக்கும்

இடம்-கிளைவ் இல்லம்
திருச்சி-1.

நாள்-மே 9ம் திகதி காலை 9-00 மணி முதல் 12ம் திகதி மதியம் 1-00 மணி வரை

3. திருச்சி மண்டலத்தைச் சேர்ந்த சிவகங்கை, மதுரை, திண்டுக்கல் மாவட்ட ஆசிரியர்களுக்கும், நெல்லை மண்டலத்தைச் சேர்ந்த நெல்லை, விருதுநகர், தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்ட ஆசிரியர்களுக்கும்

இடம்-தூய மரியன்னை மேல் நிலைப்பள்ளி, மதுரை

நாள்-மே 14ம் திகதி காலை 9 மணிமுதல். 17ம் திகதி 1.00 மணிவரை பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன.

இறுதி நாள் நிகழ்ச்சியில் ஈ.ஏ.ம. கழகச் செயலாளர் அவர்கள் கழகச்சேவைதனில் முக்கியத்துவம் வாய்ந்த ஊட்டச்சத்துச் சேவையை மேலும் விரிவுபடுத்துவதில் ஆசிரியைகளுக்கும் பங்குண்டுஎன்பதை விளக்கி இது தொடர்பான கருத்துக்களை தெளிவாகக் கூறியதோடு, முகாம் மட்டத்தில் இச்சேவையைச் சிறப்பாகச் செய்ய ஆசிரியைகள் ஒன்றிணைய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். கழகப் பாடல் இசைக்கப்பட்டு பயிற்சி முகாம் இனிதே நிறைவு பெற்றது.

தொகுப்பு, வி. தேன்மொழி

# அக்கரைப்பற்று தமிழ் பகுதிகளுக்கு மீண்டும் மின்சார வசதி

இரண்டு மாதங்களுக்குப் பின்பு அக்கரைப்பற்று தமிழ் பிரதேச பகுதிகளுக்கு மீண்டும் மின்சார வசதிகள் கிடைத்து உள்ளன. ஆலையடி வேம்பு பிரதேச சபைத்தலைவர் இ. நடராசா, கிழக்கு மாகாண சிவில் நிருவாக இணைப்பதிகாரி எஸ். கே. த. சில்வா, பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன் தொடர்ச்சியாக எடுத்துக் கொண்ட நடவடிக்கையையடுத்து இப் பகுதியில் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்ட மின்மாற்றிகளை பாதுகாப்பான இடமான பொலிஸ் நிலைய வளவுக்குள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அக்கரைப்பற்று மின்சார பொறியியலாளர் வை. எம். நஜிவுநிசார் பாதுகாப்பான இடத்தில் மின்மாற்றி அமைப்பதற்கான முழு அறிக்கையையும் மின்சாரசபைக்கு சமர்ப்பித்துள்ளார். மின்சாரத்தை நம்பி தொழில் செய்து வந்த தொழிலாளர்கள் மீண்டும் தங்கள் தொழில்களை ஆரம்பிப்பதில் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு தமிழ் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படுவது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏ. இராசாமாணிக்கம், கலாநிதி நீலன் திருச்செல்வம், போக்குவரத்து அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி ஆகியோர் மின்சக்தி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

படிப்பகம்

www.padippakam.com





# சந்தியில் சந்திக்கிறார்கள்

## தமிழன் தலையில் விளையாட்டு!

சுப்பர் : "ராணுவ முகாம்கள் மூலம் வடக்கில் பாஸ் வழங்க ஏற்பாடு"

சோமர் : என்னண்ணை பேப்பரை வச்சு ஏதோ சொல்லுறியள்?

சுப்பர் : இல்லையடா தம்பி யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு செல்ல வேணுமெண்டால் இனி முதலில் இராணுவ முகாம்களுக்குத்தான் போகவேணுமாம்.

சோமர் : ஏன்ணை யாழ்ப்பாணத்திலதான் "நோமல்" நிலமையெண்டு சொல்லியினமே.

சுப்பர் : சொல்லுவினம்...சொல்லுவினம்.உந்த ஆமிக்காரர் கூட்டிக்கொண்டு வாற பேப்பர்காரரும், ரெலிபோனில செய்தி எடுக்கிற பேப்பர்காரரும்தான் உந்த "நோமல்" நிலமையை எழுதுற ஆட்கள் கண்டியோ!

சோமர் : சரி அப்பிடியெண்டா அங்க என்ன தான் நடக்குது?

சுப்பர் : இதுவரை காலமும் யாழ் சிவில் நிருவாக அலுவலகமே பாஸ் வழங்கி வந்தது. இந்த நடைமுறையை மாற்றி இப்ப தமது பகுதியில் உள்ள இராணுவ அலுவலகங்களிலேயே பாஸ் பெறவேண்டுமாம்.

சோமர் : அண்ணை உப்ப விளங்குதே என்ன உண்மை எண்டு. சனம் இல்லாமல் இருந்தால் இவையளுக்கும் உள்ளுக்குள் ஒருவித பயமாம். தங்களுக்கு பாதுகாப்பாக இருக்கட்டும் எண்டுதானாம் இந்த ஏற்பாடு.

சுப்பர் ; அடிசக்கை எண்டானாம். சரியாய்க் கண்டு பிடிச்சிட்ட பார்த்தியே.

சோமர் : யாழ்ப்பாணத்தில இவ்வளவு அடிவிழுந்தும் சனம் செத்தும் எங்கடயாட்கள் இன்னும் திருந்தேல்ல கண்டியோ.

சுப்பர் : என்னண்ணை சொல்லிறியள்?

சோமர் ; தம்பி யாழ்ப்பாண ஆசுப்பத்திரியில மருந்துக்கு மட்டுமல்ல இரத்தத்திற்கும் சரியான தட்டுப்பாடாம். பொதுமக்களை இரத்த தானம் வழங்கச் சொல்லிக் கேட்டதும் அது தங்களுக்கு ஒரு கெடுதியான செயல் எண்டு ஓடிப் போயினமாம்.

சுப்பர்: ஏனெண்ணை உழைக்கத் தெரிந்த சில சனம் ஒரு முறை இரத்தம் கொடுப்பதற்கு 5,000 ருபா வரை விலையும் கேட்கினமாம்.

சோமர் : அட அநியாயமாய்ப் போக.

சுப்பர் : தம்பி எல்லாம் யாழ்ப்பாண நியூசாய் இருக்கு வேறஇடத்தில நியூஸ் இல்லையே?

சோமர் : கொஞ்சம் அவசரப்படாத இப்ப பார் திருகோணமலைப் புறநகர்ப் பகுதிகளில இரவு நேரங்களில் மக்கள் நடமாடுவதற்கு பொலிசார் தடைவிதித்துள்ளனராம் தினசரி இரவு 8-30 மணிமுதல் காலை 5 மணிவரை இந்த தடை உத்தரவாம்.

சுப்பர் ; அப்போது ஏதாவது அவசரத்திற்கு வெளியே எங்காவது போகவேணும் எண்டால் என்ன செய்யிறதாம்?

சோமர் : அப்படித் தேவையென்றால் "அரிக்கன் லாம்பு" அல்லது "ரோச் லைட்" வெளிச்சத்துடன் பொலிஸ் நிலையத்துக்கு போய் "பெமிஷன்" வாங்கிப் போக வேணுமாம்.

சுப்பர் : பூனைக்கு விளையாட்டு எலிக்கு சீவன் போகிற கதைதான் கண்டியோ.

சோமர் : இதுமட்டுமல்ல சுப்பர்! மன்னார் ஆஸ்பத்திரியிலும் போதியளவு மருந்துகள் இல்லையாம், யாழ்ப்பாணம் போவதற்காக மன்னாரில் தங்கியுள்ள ஆயிரக்கணக்கான மக்களும் மன்னார் ஆசுபத்திரியை நாடுவதால் போதியளவு மருந்துகள் அங்கு இல்லையாம்.

சுப்பர் : அண்ணை அமைதியான இடத்திலேயே உந்த கஷ்டம் எண்டால் மற்ற இடங்களைப் பற்றி சொல்ல வேண்டாம்.

சோமர் : கடைசியாக கிடச்ச ஒரு தகவலையும் சொல்லுறன் கேளும் "ஓசியானிக் சீ பிரிக்கேட்" எண்டொரு புதிய படை அமைச்சிருக்கினமாம் இராணுவத்தார்.

சுப்பர் : ஏனண்ணை இருக்கிற படையள் போதாதே?

சோமர் : ஒண்டும் பெரிசா இல்லை. கடற்கரையோரமாய் இருக்கிற தங்கட மீனவர்களை புலியளிடம் இருந்து காப்பாற்றத்தானாம் உந்தப்படை. உந்தப்படையில் சேருவோருக்கு மூன்றுமாத யுத்தப் பயிற்சியும் வழங்கப்படுமாம். நல்ல சம்பளம் வேறையாம்.

பத்தாயிரம் பேர் முதலில் எடுக்கவும் அரசாங்கம் திட்டம் போட்டிருக்காம்.

சுப்பர் : ஏனண்ணை இராணுவத்துக்கு ஆட்கள் பத்தாது எண்டு சொல்லாமல் சொல்லி ஆட்கள் எடுக்கினம் பார்த்தியளே?

சோமர் : எல்லாம் தமிழன் தலையில் ஏறி விளையாடத்தான் உந்த விளையாட்டாம்!

ஆர்-ஆர்

# எரிபொருட்களின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவும்

### யாழ். முன்னாள் ஆணையாளர் கோரிக்கை

யாழ். குடாநாட்டில் விற்பனை செய்யப்படும் பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெயின் விலைகளை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப் படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரும், யாழ். மாநகரசபையின் முன்னாள் ஆணையாளருமாகிய கந்தையா சிவஞானம் வடமாகாண புனர்வாழ்வு. புனரமைப்பு அதிகார சபையின் தலைவரான என்.ஏ. ஒபடேக்கு அனுப்பி வைத்து உள்ள பக்ஸ் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அச்செய்தியில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது: யாழ். குடாநாட்டில் அத்தியாவசியப் பொருட்களை கொழும்பு விலையில் அல்லது நியாயமான விலையில் மக்களுக்கு வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோது எரிபொருட்களை மிகக்கூடுதலான விலைகளில் விற்கப்பட்டு வருகிறது நியாயமிக்க செயல் என ஒத்துக் கொள்ள முடியாதுள்ளது.

#### யாழ்.கொழும்பிடை விலை வித்தியாசம்

கொழும்பில் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 50 ருபாவாக இருக்கும்போது யாழ்ப்பாணத்தில் 77 ருபாவுக்கு விற்கப்படுகிறது. இது 54 சதவீத உயர்ச்சியாகும். டீசல் கொழும்பில் 13 ருபா 20 சதமாகவிற்கப்படும்போது யாழ்ப்பாணத்தில்21 ருபா 55 சதமாக விற்கப்படுகின்றது. இது 4.5 சதவீத உயர்ச்சியாகும். மண்ணெண்ணெய் அங்கு 10 ருபா 40 சதமாக இருக்கின்றபோது இங்கே 13 ருபா 45 சதமாக விற்பனையாகின்றது. இது 30 சதவீத உயர்ச்சியாகும்.

எரிபொருளை கொழும்பு விலையில் இங்கு விற்பனை செய்யுமாறு நாம் கோரவில்லை. ஆனால் ஓரளவு நியாயமான விலை உயர்ச்சியில் விற்பனை செய்யப்படின் யாழ். குடாநாட்டு மக்களின் சுமைகள் சற்றுக் குறையக் கூடும்.

எனவே பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்ற அனைத்துத் தர மக்களதும் பெரும் நன்மையைக் கருத்தில் கொண்டு எரிபொருட்களின் விலையைக் குறைத்து நிர்ணயம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்

இக்கடிதத்தின் பிரதி யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனுக்கு அனுப்பட்டுள்ளது.

# வெம்பக்கோட்டை அகதிகள் முகாமில் "உயிர்ப்புப் பெருவிழா"

விருதுநகர் மாவட்டம், கண்டியாபுரம் இலங்கை அகதி முகாமில் மிகச் சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ள 'வேளாங்கன்னி' ஆலயத்தில் இம்முறை உயிர்ப்புத் திருநாள் பங்குத் தந்தை வண. வின்சி அடிகளார் மற்றும் வண. தந்தை அண்ணா அடிகளார் ஆகியோரின் தலைமையில் நடந்தது.

8-4-98 அன்று நடைபெற்ற கோயில் அறங்காவல் குழுவின் தேர்தலில் யேசுதாசன் (எ) பாஸ்கரன் (தலைவர்) எம். சேபஸ்ரியம்மா (செயலர்) திருமதி விரிகிதா (பொருளாளர்) சத்திய சீலன் (உபதலைவர்) அன்ரன் யோசப் (ஆலோசகர்) இம்மானுவேல், திருமதி எலிசபெத் மேரி, செல்வி மேரிமார்கரெட் (நிர்வாகக்குழு) ஆகியோர் கிறிஸ்தவ சபை உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்டனர்.

பெரிய வியாழன் அன்று பாதம் கழுவும் சடங்கு, நற்கருணைச் சடங்கு ஆகிய நிகழ்ச்சிகளை வண. தந்தை வின்சி அவர்கள் முன்னின்று நடத்தியதுடன், பெரிய வெள்ளியன்று முகாமைச் சுற்றி சிலுவைப் பாதை நிகழ்ச்சியும் நடத்தினார்.

அன்றைய தினம் இரவு வண. தந்தை ஜெயராஜ் அடிகளார் சிலுவை முத்தி, தேவ நற்கருணை விருந்து ஆகியன நடத்தப்பட்டன. அடுத்து இறுதி நாளாகிய உயிர்ப்பு ஞாயிறு அன்று தேவசபை போல் அலங்கரிக்கப்பட்ட ஆலயத்தில் இரவு வண. தந்தை தம்புராஜ் அவர்களின் தலைமையில் பெருந்திரளான மக்கள் கலந்து மகிழ்வுற திருப்பலி பூஜைகள் நடத்தப்பட்டன.

உலக பாவங்களுக்காக தன்னை அர்ப்பணித்த இறைமைந்தனின் தியாக வேள்வியில்சமய பேதங்களற்ற முறையில் பங்களிப்புகள் வழங்கிய முகாமின் அனைத்து பொது மக்கள், விழாவை சிறப்புற நடத்திய பங்குத் தந்தைகள், பார்வையாளராகக் கலந்து கொண்ட எம்.எம்.எஸ் எஸ்·எஸ். அகதிகள் முகாம் கல்வி இணைப்பாளர் கே.எஸ். காளிமுத்து, விழாவிற்கான அனுமதிகள் வழங்கிய அரசு அலுவலர்கள் அனைவருக்கும் அறங்காவல் குழு தலைவர் - செயலாளர் மற்றும் உறுப்பினர்களும், பாடல் குழுவினரும் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

## மலேரியா பரவுகிறது

தென்மராட்சி பகுதியில் கைதடி, வரணி, மந்துவில், கொடிகாமம், சரசாலை போன்ற பகுதிகளில் நூற்றுக் கணக்கானோர் மலேரியா நோயினால் பீடிக்கப் பட்டுள்ளனர்.

இப்பகுதிகளில் மலத்தியோன் விசிறும் பணி மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

அதேவேளை தென்மராட்சிப் பகுதியில் நுளம்பு உற்பத்தி அதிகமாவுள்ளதாகவும் அதிக வெள்ளம் தேங்கி நிற்கும் இடங்களை இனங்கண்டு அவற்றில் டிலாபபியா மீன் வளர்க்கும் பட்சத்தில் குடம்பியை அழிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் பொது சுகாதார பரிசோதகர் க. தெய்வேந்திரம் தெரிவித்தார்.

படிப்பகம்

## ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம்

# உயர்கல்வி கற்பதற்கான வாய்ப்புகள் தொடர்பான அறிவித்தல்

அன்புடையீர்,

தமிழ் நாட்டில் தங்கி உள்ள இலங்கை அகதி மாணவர்கள் உயர் கல்வி கற்பதற்கான வாய்ப்புகள் கீழே காணப் படுகின்றன.

இலங்கை அகதி மாணவர்கள் பல துறைகளில் உயர் கல்வி மற்றும் முறை சார்ந்த தொழிற் கல்வி கற்க வாய்ப்புகள் உண்டு.

### அ. பத்தாம் வகுப்பு தேர்வில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான வாய்ப்புகள்

பத்தாம் வகுப்பு தேர்வில் சித்தி பெற்ற மாணவர்கள் மறுபடியும் பள்ளியில் சேர்ந்து பன்னிரண்டாம் வகுப்புவரை படிப்பதே நல்லது. இல்லாத பட்சத்தில் அவர்கள் பாலிடெக்னிக்கிலும், அரசு தொழிற் பயிற்சிக் கூடங்களிலும் (ஐ.டி.ஐ.) படிக்க வாய்ப்பு உண்டு. இந்நிறுவனங்களில் இடம் கிடைப்பது நிச்சயமில்லாத காரணத்தைக் கொண்டு பதினோராம் வகுப்பில் படிப்பதற்கு பள்ளியில் சேர்ந்து இந்நிறுவனங்களில் படிக்க விண்ணப்பிப்பது பாதுகாப்பானது. அனுமதி பெற்றால் பள்ளியில் (ரி.சி.) பள்ளி மாற்றுச் சான்றிதழ் பெற்று அந்நிறுவனங்களில் சேரலாம்.

1. பாலிடெக்னிக் : பாலிடெக்னிக்கில் படிக்க இலங்கை அகதிமாணவர்களுக்கு 20 இடங்கள். பாலிடெக்னிக்கில் சேர்ந்து படிக்க விரும்புவோர் பத்தாம் வகுப்புத் தேர்வில் அறிவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் குறைந்தது 35 மதிப்பெண்களும், இவ்விரண்டின் தொகுப்பில் 45 மதிப்பெண்ணும் பெற்றிருக்க வேண்டும். அத்தகுதியைப் பெற்றோர் தொழில் கல்வி இயக்ககத்திலிருந்து வெளிவரும் பொது அறிவித்தலில் கொடுக்கப்படும் விதி முறைக்கமைய விண்ணப்பிக்க வேண்டும்.

2. தொழிற்பயிற்சி நிறுவனங்கள் (ஐ.டி.ஐ.): ஐ.டி.ஐ களில் சேர்ந்து படிக்க விரும்புவோர் அருகிலுள்ள இந்நிலையங்களை அணுகி சேர்வதற்கான முயற்சியினைச் செய்ய வேண்டும்.

குறிப்பு :- ஐ.டி.ஐ. என்ற பெயரில் இரண்டு விதமான பயிற்சி நிலையங்களை அணுகிச் சேர்வதற்கான முயற்சியினைச் செய்யவேண்டும்.

### 1. அரசுத் தொழில் நுட்பக் கல்லூரிகள்

இவை அரசினால் நடத்தப்படும் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள். இந்நிறுவனத்தில் சேர்ந்து படிப்போர் பத்தாம் வகுப்புச் சித்தி அடைந்தவர்களாக இருக்கவேண்டும். சான்றிதழ்-தொழிற் சான்றிதழ்

படிப்புக் காலம் : 1. பத்தாம் வகுப்பு முடித்தவர்களுக்கு மூன்றாண்டு காலம்.
2. பன்னிரண்டாம் வகுப்பு முடித்தவர்களுக்கு இரண்டு ஆண்டு காலம்.

ஒவ்வொரு அரசு தொழிற் பயிற்சி நிலையத்திலும் சில இடங்கள் இலங்கை அகதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

### 2. இந்திய தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள்

இந்நிலையங்கள் தனியாரால் நடத்தப்படும் முறையான அங்கீகாரம் பெறாதவை. அவற்றில் படிக்கக்கல்வித் தகமை இல்லை. இவற்றில் இட ஒதுக்கீடு இல்லை. இலங்கையில் இச்சான்றிதழுக்கு மதிப்புக் குறைவு.

3. தாதியர் பட்டயப் படிப்பு : பத்தாம் வகுப்புத் தேர்வில் சித்தி பெற்ற மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களினால் நடத்தப்படும் தாதியர் பட்டயப் படிப்பு படிக்கலாம். ஆனால் இந்நிறுவனங்கள் அங்கீகாரம் பெற்றவை என்பதை உறுதி செய்தபின் சேரவும்.

### ஆ. பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வில் சித்தி பெற்றோருக்கான வாய்ப்புகள்

பன்னிரண்டாம் வகுப்பு தேர்வில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பல வாய்ப்புகள் உள்ளன. அவையாவன-

1. மருத்துவப் பட்டப் படிப்பு, 2. பொறியியல் பட்டப் படிப்பு, 3. வேளாண்மைப் பட்டப்படிப்பு, 4. கலை, அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை, இளம் அறிவியல், இளம் வணிகவியல் பட்டப் படிப்பு, 5. சட்டப் பட்டப் படிப்பு, 6. தாதியர் பட்டப் படிப்பு, 7. அஞ்சல் வழிக்கல்வி மூலம் பட்டப் படிப்பு

இவ்வாய்ப்புகள் இருக்கும் போதிலும் மருத்துவம் பொறியியல் போன்ற தொழிற் சார்ந்த கல்வி கற்பதற்கு போட்டி அதிகமாக இருப்பதால் முதலில் கலை, அறிவியல் கல்லூரியொன்றில் இடம் எடுப்பது பாதுகாப்பானது.

1. மருத்துவம் : மருத்துவக் கல்லூரிகளில் சேர ஆர்வமிருப்போர் இயற்பியல், வேதியல் மற்றும், (உயிரியல் அல்லது விலங்கியல், தாவரவியல்) ஆகிய பாடங்களை பன்னிரண்டாம் வகுப்பில் படித்த குறைந்தது ஒவ்வொரு பாடத்திலும் 55% மதிப்பெண்களைப் பெறுவதுடன், மொத்த மதிப்பெண் தொகுப்பில் 60% மதிப்பெண்களை மேற்குறிப்பிட்ட பாடங்களிற்கான மதிப்பீட்டின் தொகுப்பில் பெற்று இருக்க வேண்டும். இத்தகுதிகளைப் பெற்றிருப்போர் பத்திரிகைகளில் வெளியாகும் பொது அறிவிப்புக்கமைய மருத்துவ இயக்குனரகத்தில் விண்ணப்பம் பெற்று அதிற் குறிப்பிடப்பட்டுள்ள விதி முறைகளுக்கேற்ப விண்ணப்பம் செய்யலாம்.

2. பொறியியல் : பொறியியல் கல்லூரிகளில் சேர ஆர்வம் கொண்டவர்கள் இயற்பியல், வேதியல், கணிதம் ஆகிய பாடங்களைப் பன்னிரண்டாம் வகுப்பில் படித்த குறைந்தது ஒவ்வொரு பாடத்திலும் 55% மதிப்பெண்களை பெற்று மொத்தமாக 60% மதிப்பெண்களை மேற்குறிப்பிட்ட பாடங்களிற்கான மதிப்பீட்டின் தொகுப்பில் பெற்றிருக்க வேண்டும். இத்தகுதிகளைப் பெற்றிருப்போர் தொழிற் கல்வி இயக்குனரகத்தினால் செய்தித் தாள் மூலம் வெளியிடப்படும் விளம்பரத்தைக் கவனித்து அவ்விளம்பரத்தில் குறிப்பிடப்படும் முறையில் தொழிற் கல்வி இயக்குனரகத்திற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்.

3. வேளாண்மைத்துறை : தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் வேளாண்மை பட்டப்படிப்பில் சேர்ந்து படிக்க விரும்புவோர் பன்னிரண்டாம் வகுப்பில் இயற்பியல், வேதியல் (உயிரியல் அல்லது விலங்கியல், தாவரவியல்) ஆகிய பாடங்கள் கற்று ஒவ்வொன்றிலும் குறைந்தது 55% மதிப்பெண்களையும், இப்பாடங்களின் மதிப்பெண்களின் தொகுப்பில் 60% மதிப்பெண்களையும் பெற்றிருக்க வேண்டும். இத்துறையில் படிக்கவிரும்புவோர் வேளாண்மைத் துறையால் செய்தித்தாள்களின் ஊடாக வெளியிடும் பொது விளம்பரத்தில் குறிக்கப்பட்டுள்ள முறைக்கேற்ப தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்.

4. கலை அறிவியற் கல்லூரிகள் : கலை அறிவியல் கல்லூரிகளில் பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம்., பி.பி.ஏ., ஆகிய பட்டப்படிப்புகளையும் பட்ட மேற்படிப்புகளையும், படிக்க ஆர்வமுள்ளவர்கள், அருகிலுள்ள கல்லூரிகளில் அனுமதி பெற மனுச்செய்ய வேண்டும். இலங்கை அகதி மாணவர்களை சேர்ப்பது இந்திய மாணவர்களுக்குப் பாதிப்பு அடையாத முறையில் ஒவ்வொரு துறையிலும் மேலதிக ஒதுக்கீடுகளைச் செய்யும்படி கல்விச் செயலர் ஆணை பிறப்பித்துள்ளார்.

5. சட்டப் பட்டப்படிப்பு : பன்னிரண்டாம் வகுப்பு தேர்வில் சித்தி பெற்ற மாணவர்கள் ஐந்தாண்டு சட்டப் படிப்பிற்கு சட்டக் கல்வி இயக்கத்திற்கு விண்ணப்பிக்கலாம். தமிழ் நாட்டில் உள்ள சென்னை, திருச்சி, மதுரை கோவை, திருநெல்வேலி சட்டக் கல்லூரிகளில் விண்ணப்பம் பெற்று விண்ணப்பிக்கலாம்.

6. தாதியர் பட்டப்படிப்பு : பன்னிரண்டாம் ஆண்டு தேர்வில் சித்தி பெற்ற மாணவர்கள் நான்காண்டு தாதியர் பட்டப்படிப்புக் கற்க வாய்ப்பு உண்டு. அங்கீகாரம் பெற்ற தனியார் கல்லூரிகளில் விண்ணப்பம் பெற்று விண்ணப்பிக்கலாம்.

7. அஞ்சல்வழிக் கல்வி : கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கு வாய்ப்புப் பெறாத மாணவர்கள் அஞ்சல் வழியில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, பட்டயப் படிப்பு மற்றும், சான்றிதழ் படிப்புப்படிக்க வாய்ப்பு உண்டு. தமிழ் நாட்டில் சென்னை, மதுரைகாமராஜர், சிதம்பரம் அண்ணாமலை, திருச்சி பாரதிதாசன், கோவை பாரதியார், பாண்டிச்சேரி ஆகிய பல்கலைக் கழகங்கள் தொலைக் கல்வி இயக்குனரகங்கள் மூலம் அஞ்சல் வழிக்கல்வித் திட்டங்களை நடத்தி வருகின்றன. மேலும், புதுதில்லி இந்திராகாந்தி பல்கலைக் கழகமும் இவ்விதக் கல்வித் திட்டங்களை நடத்தி வருகின்றது.

1. பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வில் சித்தி பெற்ற மாணவர்கள் பட்டப்படிப்பினை நேரடியாக மேற்கொள்ள வாய்ப்பு உண்டு.

2. பட்டம் பெற்ற மாணவர்கள் பட்ட, மேற்பட்டப் படிப்பு மற்றும், பட்ட மேற்பட்டயப் படிப்புப் பாடங்களில் சேர்ந்து படிக்க வாய்ப்பு உண்டு.

### முறைசாராக் கல்வி-திறந்த வெளிப் பல்கலைக் கழகத் திட்டம்

சென்னை, அண்ணாமலை, மதுரை காமராஜர், இந்திரா காந்தி ஆகிய பல்கலைக் கழகங்கள் திறந்தவெளிப் பல்கலைக் கழகத் திட்டங்களையும் அஞ்சல் வழியில் நடத்தி வருகின்றன. அடிப்படைக் கல்வித் தகுதி இல்லாத

(12-ம் பக்கம் பார்க்க)

## செய்திச்சரம்

**21-4-1998**

மட்டக்களப்பு மாவட்டம் காட்டங்குடி பகுதியில் நேற்று முன்தினம் புலிகளுக்கும் போலீஸாருக்குமிடையே நடந்த சண்டையில் 2 புலிகள் கொல்லப்பட்டனர், 5 போலீஸார் காயமடைந்தனர்.

(தினமணி)

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மாங்குளம்நகர் அருகே நேற்று புலிகளுக்கும், இராணுவத்தினருக்குமிடையே நடந்த சண்டையில் 25 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 240 பேர் காயமடைந்தனர்.

(தினகரன், தினத்தந்தி, கதிரவன், இந்து)

**22-4-1999**

வட இலங்கையில் நேற்று புலிகளுக்கும், இராணுவத்தினருக்குமிடையே நடந்தசண்டையில் 62 புலிகள், 41 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இரு தரப்பிலும் 300 பேர் காயமடைந்தனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(தினமணி, தினகரன், தினமலர், கதிரவன், இந்து)

**23-4-1998**

அம்பாறை மாவட்டம் கல்முனை மருத்துவமனையில் இருந்து நேற்று மருந்துகளை ஏற்றி வந்த போலீஸ் ஜீப் மீது புலிகள் தாக்குதல் நடத்தியதில் 7 போலீஸார் கொல்லப்பட்டனர் என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

(தினமணி, தினகரன், தினமலர்)

இலங்கையில் கடந்த இரண்டு வாரங்களாக பரவி வரும் விஷக்காய்ச்சலில் 15 குழந்தைகள் பலியாயின.

(தினமணி)

**24-4-1998**

புலிகளுக்கு எதிரான நடவடிக்கையின் போது அப்பாவித் தமிழர்களை ஒட்டு மொத்தமாகக் கைது செய்யக் கூடாது என்று இராணுவம் மற்றும் காவல் துறைக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது?

(தினமணி, தினகரன்)

இலங்கையில் கடந்த 2 நாட்களில் பல்வேறு பகுதிகளில் நடந்த சண்டையில் 10 இராணுவத்தினர், 11 புலிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

(தினகரன், இந்து)

**25-4-1998**

இலங்கை, மாங்குளம் அருகே உள்ள ஒலுமடு என்ற இடத்தை இராணுவம் கைப்பற்றி விட்டதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

(தினத்தந்தி)

படிப்பகம்

www.padippakam.com



## அறிவியல் பகுதி

# தகவல் தொடர்பு மற்றும் தலைமைத்துவப் பயிற்சி

## தலைமைத்துவக் கோட்பாடுகள்

மனித சமுதாயம் குழப்பமான, மாறுதலுக்குட்பட்ட காலம்ஒன்றை கடந்து கொண்டிருக்கிறது. எந்தவொரு நாடாக இருந்தாலும், அதன் வெற்றி, அந்நாட்டில் கிராம, நகர, மாவட்ட அளவில் நிலவும் தலைமையைப் பொறுத்தே அமையும். அண்மைக்காலத்திய சமூக அறிவியல் ஆய்வுகள் தலைமைக்குப் பொருள் காண்பதில் கணிசமான மாற்றம்ஏற்பட்டுள்ளதை எடுத்துக் காட்டி வருகின்றன.

### தலைமைத் தேற்றம் :

கடந்த முப்பதாண்டுகளாக சமூக அறிவியலாளர்கள் தலைமைத்துவத்துக்கான வரைமுறைகளை ஒன்றில் இருந்து மற்றொன்றுக்கு மாறிய வண்ணமாகவே இருந்து வருகிறார்கள். கடந்த மூன்றாண்டுகளில் இப்போக்கு மலிந்து காணப்படுகிறது. துவக்கத்தில் தலைமை என்பது மாமனிதர்' என்பதை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. தனித்தன்மைமிக்க உளவியல் மற்றும் உடல் ரீதியான வேறுபாடுகள், மற்றவர்களிடமிருந்து வேறுபட்ட கூறுகள் ஆகியவை தலைவனைத் தனித்துக் காட்டின. சிலர் ஒற்றைத் தலைமையையும் விழைவர். எனினும், ஆய்வுகளின்படி, அனைவருக்கும் பொருந்திய தலைமை என்ற நிலையை எட்ட முடியவில்லை.

தனிக்கூறு, தோற்றக்கூறு என்ற கோட்பாடு படுதோல்வி அடைந்ததையடுத்து,பொதுக் கூறுகளை உள்ளடக்கிய நிலைமைகளைக் கண்டறிய சமூக அறிவியலாளர்கள் துணிந்தார்கள். ஒரு சமுதாய உறுப்பினர்களிடையே உறவுகள் நிலவாத கட்டமைப்பு தலைமையின் முழுமைத் தன்மைக்கு உதவாது என்பதையும் கண்டறிந்தனர். தலைமைத் தேடலில் குழு உறுப்பினர்கள் பெரும் வேறுபாடுகளைக் காட்டுபவர்களாக இருந்தனர்.

### தலைமையும் கலாசார உள்ளடக்கமும் :

ஒரு பிரிவாக நோக்கினால் தனிக்கூறு அணுகுமுறை, நிலைமைக்கேற்ற அணுகுமுறை, மற்றும் குழு பின்பற்றுவோர் அணுகுமுறை ஆகியவற்றை தனித்தனியாக எடுத்துக்கொண்டுபார்த்தால் இவை ஒட்டு மொத்த அமைவின் தனித்தனிக் கூறுகளாகவே அமைவதைக் காணலாம். இவை மூன்றும் ஒன்றுபோன்றவையே எனவும் சமூக அறிவியலாளர்கள் துணிந்ததை அடுத்து, தலைமை ஆய்வுகளில் போதிய வரைமுறையினை முடிவு செய்ய இயலவில்லை.

உலகின் பல பாகங்களிலும் உள்ள ஊரக சமுதாயத்தினரிடையே மேற்கொள்ளப்பட்ட மனித இன ஆராய்ச்சி ஆய்வுகள், தலைமை அமைப்பில் மிகக்கூரிய வேறுபாடுகள் இருப்பதைஎடுத்துக்காட்டின. குறிப்பிட்ட சமூக அமைப்பு, சமூகச் சூழல், மதிப்பீட்டு முறை ஆகியவற்றைப் பொறுத்து தலைமை அமைந்ததை ஆய்வுகள் விளக்கின. எனவே மொத்த கலாசாரத்தின் தனித்தன்மையைக் கணக்கில் கொண்டுதான் தலைமை குறித்த ஒரு இறுதியான முடிவுக்கு வர முடியும் என்பது தெளிவாயிற்று.

### தலைமையின பங்கு :

தலைமைத்துவக்கொள்கை குறித்த சுருக்கமான வரலாற்று மீளாய்வுகளில், காலத்துக்குக் காலம் இதன் வரைமுறைகள் மாறுபட்டே வந்து இருக்கின்றன என்பதை நாம் உணர முடிகின்றது. ஒரு குழுவின் உறுப்பினர் என்ற முறையில் சாதாரணமாகக் கிட்டாத செல்வாக்கு, கவுரவம், ஆணைய உரிமை அந்தஸ்து ஆகியவை ஒரு கூட்டத்தின் தலைவனுக்கு இருந்து வந்ததை வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

தலைமையை ஏற்று நடத்துவோர் பல்வேறுபட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது, கொள்கை வகுத்து; திட்டமிடுபவர் என்ற முறையில் தலைவர் நிலவும் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, தன்னைச் சார்ந்த கூட்டத்தின் எதிர்காலத்தினை நுணுகி ஆராய்ந்து திட்டமிட வேண்டியிருக்கிறது. நிர்வாகி என்ற முறையில் கூட்டத்துக்கான கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லுதல், கல்வியாளர் என்ற முறையில் பல்வேறு பிரச்சினைகளுக்கு மாற்றை, மாற்றுத் தீர்வுகளை கூட்டத்தினர் முன் எடுத்து வைத்து, ஒருமித்த கருத்தினை உருவாக்கிடப் பாடுபடுதல், அதிகாரப்பூர்வ பேச்சாளர், இதரகுழுக் கூட்டத்தினருடன் தொடர்பு எனும் தான் கூட்டத்தின் பிரதிநிதியாக செயல்படும் தன்மை; நிபுணர் என்ற முறையில் அநுபவத்தினையும் அறிவையும் கொணர்ந்து தருதல்; பாதுகாவலர் என்ற முறையில் தன்னைச் சார்ந்திருக்கும் கூட்டத்தாருக்கு காவல் அரணாக நிற்பது; ஒத்துப்போக வேண்டிய சூழ்நிலைகளில் நேர்படுத்தும் பங்குபணி; ஒத்திசைவின் மூலம் தனது கூட்டத்தினரிடையே உடன்படுதலைக் கொண்டு வருதல் என்று பல்வேறுபட்ட தன்மைகளைக் கொண்டவனாகத் தலைவன் ஒருவன் திகழ வேண்டியுள்ளது.

மேற்சொன்ன பல்வேறு வகைப்பட்ட பணிகளை தொடர்ந்து ஒருதனிப்பட்டவர் பல்வேறு சூழ்நிலைகளில் மேற்கொள்வது அரிது. ஒரு நேரத்தில் ஒன்றையும் மற்றொரு நேரத்தில் மற்றொன்றையும் தலைவன் மேற்கொள்கிறான். தலை சிறந்த தன்மைகள் வாய்ந்த ஒருவர். அடிக்கடி இத்தகைய பணிகளை மேற்கொள்ள அழைக்கப்படுவது இயற்கையானதே. பல்திறப்பட்ட தனித்தன்மைகள் பெறாத ஒருவர் இக்கட்டான சூழ்நிலைகளில் புறந்தள்ளப்படுகிறார். குழுவின் தன்மை, அதன் வரலாறு-மரபுகள், பணியின் தன்மை ஆகியவற்றை பொறுத்தே தலைமைப் பங்கீடு என்பது நடைபெறுகின்றது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

### தலைமைப் பாங்கு

நிலைநிறுத்தப்பட்ட தலைமைப் பாங்கினைப் பொறுத்தே தலைமை ஏற்க அழைக்கப்படுவது இருக்கும். நிறுவன ரீதியான தலைமை நிலைமைக்கேற்ற தலைமை, சர்வாதிகார எதேச்சாதிகாரத் தலைமை போன்றவை. இவை எப்படியிருந்தாலும், தான் தலைமை வகிக்கும் கூட்டத்தின் ஒப்புதல், பின்பற்றுதல் ஆகியவை கிட்டாத போது தோல்வியினைத் தழுவுவதை நாம் கண்கூடாகக் காணமுடியும்.

ஜனநாயக ரீதியான தலைமை இதர குழு உறுப்பினர்கள் கூட பொறுப்புடன் செயல்படக் கூடிய வகையில் பங்காற்றவும் குழுவினரிடையே ஆட்களுக்கிடையே உறவுகளுக்கும் உதவுவதாக அமைந்துள்ளது. உறுப்பினர்களிடையே புத்தாக்கம் விடுவிப்பு; ஒத்திசைவுக்கு ஊக்கம் ஆகியவற்றுக்கான வழிகளையும் ஜனநாயகத் தலைமை பயன்படுத்திக்கொள்கிறது.

மேற்சொன்ன தலைமை வகைகளில், தற்போதைய உலகில் எந்த ஒன்றுமே அதனதன் உண்மைவடிவில் நிலவவில்லை. நிறுவன ரீதியான தலைமை பல்வேறு தலைமைகளின் தன்மைகளையும் கொண்ட-தாகவே திகழ்கிறது. ஜனநாயக ரீதியான சர்வாதிகாரம் தொடர்ந்து நிலவி வருகிறது. ஜனநாயக தலைமையைப் பொறுத்தவரையில், எல்லாச் சந்தர்ப்பங்களிலும், தனிமனிததிறமைகள், தேவைகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டதாகக் கிடையாது. ஒரு குழுவின் ஏற்பு, ஒன்றையொன்று சகித்துக் கொள்ளும் தன்மை, போன்றவை சம்பந்தப்பட்ட குழுவின் முதிர்ச்சியைப் பொறுத்து மாறுபடுகிறது. ஒரு குறிப்பிட்ட குழு அல்லது கூட்டத்தின்கலாசார அடக்கத்தினைப் பொறுத்து தலைமையின் தன்மை. அது எப்படிப்பட்டதாக இருந்தாலும், அமைகிறது. வெவ்வேறான தலைமைகள், பல்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு விளைவுகளைச் சம்பந்தப்பட்ட குழுவின் முதிர்ச்சியைப் பொறுத்து மாறுபடுகிறது. ஒரு குறிப்பிட்ட குழு அல்லது கூட்டத்தின் கலாசார அடக்கத்தினை பொறுத்து தலைமையின் தன்மை, அது எப்படிப்பட்டதாக இருந்தாலும், அமைகிறது. வெவ்வேறான தலைமைகள், பல்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு விளைவுகளைத் தருகின்றன என்பதை நாம் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

### ஆற்றல்மிக்க தலைமை :

அனைத்து விதமான தலைமைகளும் லட்சிய நோக்கு கொண்டவை. தலைமை என்ற ஒன்றுசெயல்படும்போது, அதன் செயல் ஆக்கத் தன்மை குறித்துக் கேள்விகள் எழுவது இயற்கை. தலைமைத்துவம் என்பது பரந்த ஊடாடல்களின் பயன் எனும்போது, ஆற்றல் மிக்க தலைமை எனும்போது, துடிப்புமிக்க செயல்பாடு அதன் எதிர்காலத்தினை நிர்ணயிக்கின்றது. குழு, கூட்டத்தில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்களின் தனித்துவமும் தலைமையின் பயன்மிக்க நிலையை வெளிப்படுத்துகின்றது தலைமையின் வகையைப் பொறுத்தும்; மிகவும் நெருக்கமிக்கதாக' அத்தலைமையின் ஆற்றல அமைகிறது மரபு, தோற்றம், சட்ட சம்மதமான தாக்கங்களும் தொடர்ந்து தலைமையினைச் சோதனைக்கு ஆளாக்குகின்றன. நிலைமைகளின் பல்வேறுபட்ட தன்மை தலைமையைப் பாதித்து- சிறப்புமிக்க செயல்பாட்டினை கடினமான பணியாக்குகின்றன. மாறக்கூடிய அதே நேரம் துடிப்புமிக்க தன்மையும் தலைமை குறித்த மதிப்பீடுகளைக்கடுமையாக்குகின்றது.

எந்த வகையான தலைமையாக இருந்தாலும், லட்சியத்தினை அடைவதைப் பொறுத்தே அதன் ஆற்றல் நிர்ணயிக்கப் படுகின்றதென்று சமூக அறிவியலாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர். குழு கூட்டத்தின் ஒட்டு மொத்த நலனை முன்வைத்துகுழுவின் கூட்டு முயற்சியோ, தலைமையின் தனியொரு முயற்சியோ வெற்றிகாணும் போது தலைமை ஆற்றல் வாய்ந்ததாகக் கணிக்கப்படுகின்றது. குழு-கூட்டத்தினரிடையே நல்லதகவல்-தொடர்பு, உறுப்பினர்களின் திருப்தித் தன்மையை அதிகரித்தல், பொதுவாக உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், நன்னடத்தைக்கு வகை செய்தல், லட்சியத்தை நோக்கி குழு/கூட்டத்தாரை முன்னெடுத்துச் செல்லுதல், குழு உறுப்பினர்களிடையே பிணக்குகளைத் தவிர்த்தல் ஆகிய அனைத்தும் ஆற்றல்மிக்க, செயலாக்கம் மிகுந்த தலைமையாக நிர்ணயிக்கப்படுகின்றன. விசேடத் திறமைகள், ஆளுமை வளம், அறிவு ஆகியவற்றை ஒருங்கே கொண்ட தலைவனின் தேவையை வலியுறுத்தும் அதே நேரத்தில், குழு உறுப்பினர் ஒவ்வொருவரின் பங்களிப்பும் கூடத் தலைமையின் ஆற்றலுக்குத் துணை செய்கின்றது.

(10ம் பக்கம் பார்க்க)

## ஆங்கிலப்பாடம் - ஈழசுதந்திரனில்

## அரிய வாய்ப்பு! நழுவ விடாதீர்!

'நீங்களும் ஆங்கிலம் கற்கலாம்' என்ற தலைப்பில் 'ஈழசுதந்திரனில்' விரைவில் ஆங்கிலப்பாடம் ஆரம்பமாக உள்ளது. லண்டன் பல்கலைக் கழகப் பட்டதாரியும், முதுகலைமானியுமான ஒருவர், அதை அடிப்படை ஆங்கிலத்தில் தொடங்கி, ஆங்கிலத்தில் சரளமாக எழுதப் பேச உதவும் வகையில் ஒவ்வொரு மாதமும் எழுத உள்ளார்.

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த மாவட்டத் தொண்டர்கள், ஆசிரியர்கள், நலப்பணியாளர்கள் முதலியோர் தங்கள் ஆங்கில அறிவை மேலும் வளர்த்துக் கொள்ளும் முறையிலும், மாணவர்களுக்கு உதவும் வகையிலும் அமையும் அந்த ஆங்கிலப்பாடத்தைப் படிக்கத் தவறாதீர். சேர்த்துப் பாதுகாக்க மறவாதீர்!

—ஆசிரியர்

படிப்பகம்

# ஈழத் தமிழர் வரலாறு

## (கி. பி. 1000 வரைக்கானது)

கலாநிதி சி. க. சிற்றம்பலம்
(வரலாற்றுத்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

### 4. சிங்களத்-தமிழ் இனங்களின் தோற்றம்

பௌத்தத்தின் வருகையோடு ஈழத்தின் பழைய திராவிடக் கலாசாரம் பௌத்த மதத்தினைச் சார்ந்தோர், சாராதோர், என்ற இருபெரும் பிரிவுகளாக வளர்ச்சி பெற்றாலும் இப்பிரிவுகளுக்கிடையே காணப்பட்ட வேறுபாடுகள் காலப்போக்கில் தான் கூர்மையடைந்தன. இவ்வாறு கூர்மையடைவதற்கான சூழலும் வாய்ப்பும் உள்நாட்டு நிகழ்ச்சிகளால் மட்டுமின்றி வெளிநாட்டு நிகழ்ச்சிகளாலும் ஏற்பட்டது. இக்காலத்தின்தான் ஈழத்தில் சிங்கள-தமிழ்மொழி பேசியோர் மத்தியில் இவ்வாறு இன சமய உணர்வுகள் கூர்மையடையத் தொடங்கியதை பேராசிரியர் கிங்ஸ். லீ டி. சில்வா பின்வருமாறு கூறுகின்றார்.37

'பல்லவரின் தாக்கத்தில் இருந்து எழுந்த முக்கிய விளைவு என்னவென்றால் ஈழத்திலிருந்த தமிழர் தமது இனத்துவம் பற்றிக் கூடுதலாகப் பிரக்ஞை கொள்ளத் தொடங்கினர். இந்த இனத்துவ உணர்வை பண்பாட்டு ரீதியாகவும் சமய ரீதியாகவும் அவர்கள் நிலைநாட்ட முனைந்தனர். இது தான் திராவிட, தமிழ், இந்து என்ற வழக்காகும். அத்துடன் ஈழத் தமிழ்க் குடியேற்றங்கள் தென்னிந்தியப் படையெடுப்பாளருக்கு ஆதரவு வழங்கும் தளங்களாகவும்விளங்கின.'

வரலாற்றுக் காலத்தின் ஆரம்பத்தில் நாட்டின் பிரதான தலைநகராக அநுராதபுரம் விளங்கியது எனப் பாளி நூல்கள் கூறுகின்றன கி.பி. 993 இல் சோழரால் கைப்பற்றப் படும்வரை இதனை மையமாகக் கொண்ட வரலாற்றையே பாளி நூல்கள் படைத்தாலும் இவ் அநுராதபுர அரசின் வரலாற்றில் கூட இரு பெரும் பிரிவுகள் உண்டு. முதலாவது முற்பட்ட அநுராதபுரக்காலமாகும். தமிழகத்தின் சங்க காலமும் அதனைத் தொடர்ந்துள்ள காலமும் இப் பிரிவில் அடங்கும். தமிழ் மக்களின் வட-கிழக்குப் பிராந்தியங்களைப்பொறுத்தமட்டில் இக்காலத்தினைத் தனியான தமிழ் அரசுகளின் காலம் எனவும் அழைக்கலாம்.

இரண்டாவது பிரிவு பிற்பட்ட அநுராதபுர காலமாகும். கி.பி. 6ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 10ம் நூற்றாண்டு வரைக்குரிய காலப்பகுதியே இஃதாகும். இக்காலம் தான் தமிழ் சிற்றரசுகள் மேன்மை பெற்ற காலமாகும். தமிழகத்தில் பல்லவர் காலத்திலேற்பட்ட தமிழ், இந்து சமய மறுமலர்ச்சியின் தாக்கம் ஈழத்திலும் இக்காலத்தில் ஏற்பட்டது இதனால் ஈழத்திலும் பௌத்தர், பௌத்தரல்லாதோர் ஆகியோருக்கிடையே இருந்த வேறுபாடுகள் இக்காலம் தொடக்கம் கூர்மையடையத் தொடங்கியதோடு மொழிகளுக்குள் இனத்துவ உணர்வுகளும் கலக்கத் தொடங்கியது

### 5. முற்பட்ட அநுராதபுரகாலம்

(தமிழ்ச்சிற்றரசுகள் காலம்)

ஈழத்தின் வரலாற்றுக் காலம் தேவநம்பியதீசனின் ஆட்சியோடு ஆரம்பமாகின்றது எனக் கண்டோம். பாளி நூல்கள் அநுராதபுரத்தினைத் தலைநகராகக் கொண்டு ஒற்றையாட்சி அமைப்பில் இம்மன்னனின் காலம்தொடக்கம் ஈழம் முழுவதும் ஒரே ஆட்சியின் கீழ் ஆளப்பட்டது எனக் கூறினாலும் கூட அநுராதபுர அரசு நிலைத்த காலத்தில் ஈழத்தின் பலபகுதிகளிலும் பல சிற்றரசுகள் நிலைத்திருந்ததையும் அநுராதபுர அரசின் வலிமையைப் பொறுத்தே இவ்வரசுகள் மீது அவர்களின் ஆணை பரந்தது என்பதையும் பிராமிக் கல்வெட்டுகளிலிருந்து அறிய முடிகின்றது. இதே பாளி நூல்கள் வரலாற்றுக் காலம் தொடங்கு முன்னரே இராஜரட்டை என அழைக்கப்பட்ட வடபகுதியில் காணப்பட்ட நாக அரசு பற்றிக் கூறுகின்றன.38 இவ்வரசு கி.மு. 6ம் நூற்றாண்டில் காணப்பட்டது. இவை கூறும் நாகதீப அரசையே தமிழ் நூல்கள் 'நாகநாடு', 'மணிபல்லவம்' என்ற பெயரால் அழைக்கின்றன 39 இவைகளுக்கும் வடமேற்கே களனிப் பள்ளத்தாக்கிலிருந்த இன்னோர் நாக அரசிற்கும் இடையேநெருங்கிய தொடர்பு காணப்பட்டது.

தேவநம்பியதீசன் காலத்திற் களனிப்பகுதியிற் காணப்பட்ட அரசு பற்றிய சான்றுகள் காணப்படுகின்றன. இவ்வரசை இக்காலத்தில் உருவாக்கியவனாக 'உதிய' என்பவன் குறிக்கப்படுகின்றான்40 இவன் தேவநம்பிய தீசனின் சகோதரர்களில் ஒருவன் என பரணவித்தான இனங் கண்டு கொண்டுள்ளார். உதி, உதியன் போன்ற தமிழ்ப் பெயர்களைச் சங்க காலத்திற்சேர மன்னர்கள் சூடியிருந்ததை சங்க நூல்கள் கூறுகின்றன.41 இவ்வாறே தசப்பனுக்குப்பின் மகன்அரசு கட்டிலேறுவதற்கு பதிலாக, தசப்பனின் பின் அவனின் தம்பி அரசுகட்டிலேறுவது பழைய சிங்கள மரபாகும். இத்தகைய மரபு பழைய சேர நாட்டிற் காணப்பட்டதை நோக்கும்போது பண்டைய ஈழத்தில் தமிழ்க் கலாசாரம் கொண்டிருந்த தாக்கம் புலனாகின்றது. இதே காலத்தில் உரோகணைப் பகுதியில் (தென்கிழக்குப் பகுதியில்) இரு சிற்றரசுகள் காணப்பட்டன. இவை கதிர்காமம், சண்டனாகம ஆகிய இடங்களிற் காணப்பட்டன.42 இவற்றை ஆட்சி செய்தோரை மகாவம்சம், சத்திரிய வம்சத்தவர் என அழைக்கின்றது. இவ்வரசர்கள் பௌத்தமதம் ஈழத்திற்கு வந்தபோது அநுராதபுரத்தில் இதன் சின்னமாகிய அரச மரக்கிளை நாட்டப்பட்ட வைபவத்தின்போது பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டவர்கள் ஆகும். பின்னர் இவர்களின் இடங்களிலும் அரச மரக்கிளை நாட்டப்பட்ட நிகழ்ச்சியானதுஇவர்கள் பௌத்தர்களாக மாறியதை எடுத்துக்காட்டுகின்றது எனலாம். இப்பகுதியில் கிடைக்கும் கல்வெட்டுக்களையும் மகாவம்சம், தாதுவம்சம் ஆகிய பாளி நூல்களின் சான்றுகளையும் மையமாக வைத்து பரணவித்தான கதிர்காமத்தில் ஆட்சி செய்த இச் சத்திரிய வம்சத்தினை தேவநம்பிய தீசனின் இன்னோர் தம்பியாகிய மகாநாக என்பவன் அழித்து இவ்விடத்தில் தனது ஆட்சியை பரப்பினான் என்று கூறியுள்ளார்,43 ஆனால் இப்பிராமிக் கல்வெட்டுக்கள் இப்பகுதியிற் தொடர்ந்து வாழ்ந்த கதிர்காமச் சண்டனாகமச்சத்திரியரின் சந்ததியைத்தான் கூறுகின்றன என்பது இனங் காணப்பட்டுள்ளதால் பரணவித்தானாவின் கூற்று தவறானதென நிரூபிக்கப்பட்டுள்ளது. 44

மகாவம்சம் கூறும் கதிர்காமம், சண்டனாகம ஆகிய பகுதிகள் முறையே கதிர்காமம், கல்லோயா ஆகிய பகுதிகளைக் குறித்திருக்கலாம். இப்பகுதியிற் கிடைத்துள்ள கதிர்காமச் சத்திரியர்களின் கல்வெட்டுக்கள் தெற்கே கதிர்காமம் தொட்டு வடக்கே மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏறாவூர் வரை காணப்படுகின்றன. இவ்வம்சத்தினைத் தோற்றுவித்தவனாகக் 'காமினி' என்பவன் கூறப்படுகின்றான். இவனின் பிள்ளைகளாகப் பத்துச் சகோதரர்கள் குறிக்கப்படுகின்றனர். இக்கல்வெட்டுகளை நோக்கும் போது, 'பத்துச் சகோதரர்' கூட்டாட்சி இப்பகுதியில் காணப்பட்டது புரிகின்றது. இவர்களில் மூத்தவனதும், அவனுக்கு அடுத்தவனதும் சந்ததியினரின் கல்வெட்டுக்கள் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள கொற்றட முகல, அம்பாறை மாவட்டத்திலுள்ள போவத்தகல ஆகிய இடங்களில் உள. 45 இவை கும்புக்கன் ஓயாவின் வடகிழக்குப் பகுதியில் உள இவ்வம்சத்தவரில் ஒருவன் 'உதி' என்ற பெயரைச் சூடியிருந்தது அவதானிக்கத்தக்கது. அம்பாறை மாவட்டத்திலுள்ள மொட்டய கல்வெட்டு இவ்வம்சத்தின் இளையோனாகிய 'நாக' பற்றிக் கூறுகின்றது. 46 இதே மாவட்டத்திலுள்ள கொன்னேகல, கல்உதுப்பொத்தானா ஆகிய இடங்களிலுள்ள கல்வெட்டுகளும், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏறாவூரிலுள்ள குசலகந்தக் கல்வெட்டும் இவ்வம்சம் பற்றிய பல தகவல்களைத் தருவதோடு துட்டகைமுனுவும் இவ்வம்சத்தவனே எனக் கூறுகின்றன 47 துட்டகைமுனுவின் வம்சத்தின் முதல்வன் நாகவாகும். இவனின் மகன் கோதபய ஆவான்; கோதபயனின் மகனான காக்கவன்னதீஸனின் மகனே துட்டகைமுனுவாகும். இவ்வம்சத்தவர்கள்சூடியிருந்த கோத்த (குட்டன்) காக்கவன்ன (கறுப்பன்) துட்ட (குறும்பன்) போன்ற அடைமொழிகள் மட்டுமின்றி துட்டகைமுனுவின் தாயின் (இயற் பெயரின்றிப்) பட்டப் பெயராகிய 'விகாரமாதேவி' போன்றனவும் இவர்களின் தனித்துவத்தினை எடுத்தியம்புகின்றன. இவ்விகாரமாதேவி கூட ஒருவகையில் களனிம் பகுதியிலாண்ட உதி என்ற அரசனின் வழியில் வந்தவளே கல்லோயாப்பகுதியில் (தீகவாபியில்) துட்டகைமுனுவின் தம்பியாகிய சட்ட தீஸனதும், அவனின் மக்களதும் ஆட்சியானது இவ்வம்சம் மட்டக்களப்புத் தமிழகத்தோடு கொண்டிருந்த தொடர்பினை விளக்குகின்றது எனலாம்.

ஒட்டுமொத்தமாக நோக்கும் போது 'ஆய்' வம்சத்தவரின் இக்கல்வெட்டுக்கள் இவர்களின் தமிழகத் தொடர்பினை எடுத்துக்காட்டுவது அவதானிக்கத்தக்கது. சகோதரர் கூட்டாட்சி தமிழகத்தில் பாண்டிய அரசிற் காணப்பட்டதொன்றாகும். இக்கல்வெட்டுக்களிற் காணப்படும் ஒற்றை மீன் சின்னம் சங்க காலப் பாண்டியர் நாணயங்களிற் காணப்படுகிறது. பாண்டியவரைக் குறிக்கும் 'மீனவன்' என்ற தமிழ்ப்பதம் இக்கல்வெட்டுக்களில் ஓரிடத்தில் 'மஜ்ஜி மகாராஜ' என்று மொழி பெயர்க்கப்பட்டுக் காணப்படுகின்றது. 48 அத்துடன் 'ஆய்' வம்சமும் பாண்டிய நாட்டின் தென்பகுதியிற் காணப்பட்டமை ஈண்டு அவதானிக்கத்தக்கது இதனால் தமிழ் வம்சம் தான் பௌத்த மதக் கலாசாரத்தின் செல்வாக்கால் சிங்கள வம்சமாக உருமாறியது போலத் தெரிகின்றது இதேபோன்ற நிகழ்வுகள் பலவற்றைப் பிற்கால ஈழத்து வரலாற்றிலும் கண்டு கொள்ளலாம். மேற்கூறியவாறு பிராமிக் கல்வெட்டுச் சான்றுகள் ஈழத்தின் பலபகுதிகளில் காணப்பட்ட சிற்றரசுகள் பற்றிக் கூறுகின்றன. இச் சிற்றரசுகள் ஆய், வேள் போன்ற தமிழ்க் குறுநில மன்னர்களால் ஆளப்பட்டன. எனினும் பௌத்த கலாசாரச் செல்வாக்கால் இவர்கள் (ரஜு) ராஜ, (கமனி) காமினி அப்பபோன்ற பெயர்களைச் சூடிப் பௌத்த மதத்தினை ஆதரித்ததையும் இவை எடுத்தியம்புகின்றன. நாளடைவில் இவர்களின் பழைய பெயர்கள் மறையப் புதிய பெயர்களே செல்வாக்குற்றன. வவுனியா மாவட்டத்தில் உள்ள பெரிய குளக்கல்வெட்டு இப்பகுதியில் ஆண்ட சிற்றரசன் 'உதி' பற்றிக் கூறுகின்றது. 49 திருகோணமலை மாவட்டத்தில் உள்ள நாச்சியார்மலைக் கல்வெட்டும் இப்பகுதியிலாண்ட 'உதி' என்ற சிற்றரசனைக் குறிக்கின்றது.50

இவ்வாறே திருகோணமலை மாவட்டத்திற் காணப்பட்ட சிற்றரசுகள் பற்றி தாதுவம்சமும் குறிப்பிடுகின்றது. சேருவில, சோம ஆகிய இடங்களிற் காணப்பட்ட இவை சிவ, அபய என்போரால் நிர்வகிக்கப்பட்டன 51 இம்மாவட்டத்திலுள்ள சேருவில, குச்சவெளி ஆகியன கிறிஸ்தாப்த காலத்தில் முக்கியம் பெற்று விளங்கியதைத் தொல்லியற் சான்றுகளும் எடுத்துக்காட்டியுள்ளன 52 பாளி நூல்கள் மகிந்தன் குழுவினரால் ஆகாய மார்க்கமாகவே ஈழத்திற்குப் பௌத்தம் புகுந்தது எனக் கூறினாலும் கூட தமிழகத்தினூடாக, அதுவும் ஈழத்தின் வடபகுதியில் இக்காலத்திற் சிறப்புப் பெற்றிருந்த ஜம்புகோள பட்டினத்தினூடாகவே இத்தகைய சம்பவம் நடைபெற்றிருந்திருக்கலாம் என்று ஊகிக்க வாய்ப்புண்டு. ஏனெனில் தமிழகத்தோடு மகிந்தன் குழுவினரைத் தொடர்பு படுத்தும் ஜாதீகங்கள் பல காணப்படுகின்றன. இவ்வாறே மகிந்தனின் சகோதரியாகிய சங்கமித்தையும் வடபகுதித் துறைமுகமாகிய ஜம்புகோள பட்டினத்தில் தான் பௌத்தமதத்தின் புனிதச் சின்னமாகிய அரச மரக்கிளையுடன் வந்து இறங்கிப் பதினான்கு நாட்களில் அநுராதபுரத்தினை அடைந்தாள் என்று கூறப்படுகின்றது. இக்காலப்பகுதியிற்றான் வடபகுதித் தமிழ் மக்களாகிய இந்துக்களின்

(9-ம் பக்கம் பார்க்க)

## ரேடியோ விமர்சகர் நினைவாய்...

பிரபல பத்திரிகையாளரும், ரேடியோ விமர்சகருமான M. போர்ட்டன் அறுபதாவது பிறந்த தின விழாவைச் சிறப்பிக்கும் வகையில், 1962 ஆம் வருடம் ''பிரான்ஸ்'' நாடு, நினைவு ஸ்டாம்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

தகவல் D. சுப்பையா

www.padippakam.com



# டாக்டர் (திருமதி) ஜெயஸ்ரீ அவர்களின் ஊட்டச்சத்துத் திட்ட மீளாய்வுப் பணி

முகாம்களில் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஊட்டச்சத்துத் திட்டத்தின் பயன்பாடு குறித்து ஆய்வு செய்ய டாக்டர் ஜெயசிறீ முக்கர்ஜி 1998 ஏப்ரல் மாதம் தமிழகத்திற்கு வருகை தந்தார். இவர் தனது ஆய்வுக்காக இங்கு தங்கியிருந்த போது முகாம்களுக்குச் சென்று நேரடியாக மக்களை, குறிப்பாக பெண்களைச் சந்தித்து கலந்துரையாடினார். திருச்சி. நெல்லை மண்டலங்களைச் சேர்ந்த முகாம்களுக்குசென்ற ஆய்வுக்குழுவில் கழகச் செயலாளரும் மருத்துவப் பிரிவினரும் அடங்கியிருந்தனர். முகாம்களில் ஆய்வு செய்து கண்டறிந்த விடயங்களையும் அவை தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் சென்னையில் கழகத் தொண்டர்கள், உயர்கல்வி மாணவர்கள் ஆகியோருக்கு செயல்முறைக் கருத்தரங்கு நடாத்தி விளக்கினார். டாக்டர் ஜெயசிறீ அவர்களின் ஆய்வு முடிவுகளின் சாராம்சம் பின்வருமாறு:

## 1. ஊட்டச்சத்து விழிப்புணர்வு

1. முகாம் மக்களிடையே ஊட்டச்சத்துப்பற்றிய விழிப்புணர்வு குறைவாகவே உள்ளது 2. தமது குழந்தைகளின் எடையை மாதா மாதம் எடுத்து எடை அதிகரிப்பும் வளர்ச்சியும் உள்ளதா என்பதை அக்கறையுடன் கவனிப்பதில்லை. 3. மக்கள் தமக்குத் தேவையான ஊட்டச்சத்து உணவை மலிவாகத் தாமே தயாரித்துக் கொள்ளலாம். இது பற்றிய அறிவை கழக நலப்பணியாளர்கள், ஆசிரியர்கள்தொண்டர்கள் மூலம் வழங்கிடவேண்டும்.

வியாபார நிறுவனங்களால் விளம்பரப்படுத்தும் செயற்கை உணவுகளை ஊக்குவிக்கும் நிலை உள்ளது. இதனால் செலவினம் அதிகரித்து, குடும்பப் பொருளாதாரம் கடனில் மூழ்கிவிடும்.

## 2. உணவுத் தன்னிறைவு (food security)

முகாம்களில் வாழும் பெரும் பான்மையான மக்கள் நீண்ட காலமாக (சுமார் எட்டு வருடங்களாக) தமிழகத்தில் தங்கியுள்ளனர். இவ்வளவு நீண்ட காலமாக வாழும் மக்கள் இனிமேலும் அரச உதவிகள், தொண்டு உதவிகள் ஆகியவற்றை மட்டுமே நம்பியிருக்கக்கூடாது. தமது முகாம் மட்டத்தில் தமது பொருளாதாரத் தேவை, உடல் நலப் பிரச்சினைகள், ஊட்டச்சத்து ஆகியவற்றிற்கான செயற்பாடுகளை தாமாகவேமுன்வந்து செய்யவேண்டும்.

முகாம் மக்கள் பிறரில் தங்கியிருக்காது தமது சொந்தக் காலில் நிற்பதற்கு தாங்கள் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும்.

குடும்பப் பொருளாதாரத்தை நல்ல முறையில் நிர்வகிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக ஆடம்பரச் செலவினங்கள் விலை, கூடிய உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்தல், மதுப் பழக்கம் போன்றவை குடும்பப் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் முக்கிய காரணங்களாய் உள்ளன.

குடும்பங்களின் பொருளாதார முன்னேற்றத்தில் பெண்களின் பங்களிப்பே முக்கியமானது. ஆகவே மாதர் சங்கத்தினை திறம்பட நடாத்த வேண்டும். முகாமிலுள்ள மாதர் சங்கங்கள் வெறுமனே உதவிகளைப் பெறுவதை மட்டும் நோக்கமாக கொள்ளக் கூடாது. மாதர் மன்றத்தினர் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் ஆகியோரைத் திரட்டி அவர்களுக்கு ஊட்டச்சத்து, நோய்த் தடுப்பு முறைகள் பற்றிய விளக்கக் கூட்டங்களை நடத்திட வேண்டும்.

வருவாய் ஊக்குவிப்புத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்த மாதர்களே கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். ஒரு தனி நபர் மாத்திரம் பயன் பெறுவதையே பலர் பயன்பெறக்கூடிய தொழில்களாக மாதர் மன்றத்தினர் இனம் காணவேண்டும்.

முகாம்களில் கடன் வழங்குபவர்கள் பல இடங்களில் 200/- வீதத்திற்கும் அதிகமான வட்டி அறவிடுவது கண்டறியப்பட்டது. குடும்பச் செலவினங்களைச் சரியாக திட்டமிடாத காரணத்தால் தான் கடன்பட நேரிடுகிறது.

இவ்வாறான நிலைகளைத்தடுக்க மக்களிடம் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். மாதர்கள் தாங்களே கூட்டுறவுச் சேமிப்புச் சங்கங்களை உருவாக்க வேண்டும்

அத்துடன் சரியான நோய்தடுப்பு முறைகளைக் கடைப்பிடித்தால் மருத்துவச் சிகிச்சைக்கான செலவினத்தைப் பெருமளவு குறைக்கலாம். உதாரணமாக வயிற்றோட்டத்தைக் கட்டுப்படுத்த உப்பு சக்கரைக் கரைசலை முறையாகப் பயன்படுத்தினால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் செலவினத்தைப் பெருமளவு குறைக்கலாம். முகாம்களில் ஏற்பட்டுள்ள பல நோய்கள் (தொற்று நோய்கள்) முன் கூட்டியே தடுக்கக் கூடியவை.

கழகத் தொண்டர்கள் யாவரும் வளர்ச்சியின் அளவீடுகளைத் தீர்மானிக்க வேண்டும். முகாம்களிற்குச் செல்லும் தொண்டர்கள் ஊட்டச்சத்து நிலை, சுகாதாரம் போன்றவற்றில் குறிப்பிட்ட அளவீடுகள் எட்டப்பட்டுள்ளதா?எனக் கண்காணிக்க வேண்டும்.

இந்தக் கருத்துக்களை உள்ளடக்கிய பயிற்சிக் கருத்தரங்கு 12, 13 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது. இதில் கலந்து கொண்டோர் யாவரும் முழு ஈடுபாடுடன் பங்களிக்கும் வகையில் பயிற்சி நடத்தப்பட்டது. இறுதி நாள் நிகழ்ச்சியில், கிராமக்கல்வி நிறுவனத்தை (VEDS) சேர்ந்தவர்கள் வருகை தந்து தமது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

# ஈழத்தமிழர் வரலாறு...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பகுதியினர் பௌத்தத்தினை அனுஷ்டித்திருக்கலாம் கந்தரோடையிற் கிடைத்த கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்குரிய மட்பாண்ட ஓட்டில் 'ததஹபத' அதாவது தத்தனுடைய பாத்திரம் என்ற வாசகம் காணப்படுகின்றது. இது பௌத்த பிக்குவினது பிச்சாபாத்திரம் எனக் கூறப்படுகின்றது. 53 இவ்வாறே வவுனியா மாவட்டத்திலுள்ள பிராமிக் கல்வெட்டுக்கள் யாவும் பௌத்த மதகுருமாருக்கு வழங்கப்பட்ட தானங்களைக் குறித்தாலும் கூட இவற்றுட் காணப்படும் தமிழ் பிராமிக்குரிய எழுத்துகள் மட்டுமின்றி, வேள், பருமக, பருமகள் போன்ற பழந்தமிழ் வடிவங்களும் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் பௌத்த மதத்தினை அனுஷ்டித்ததையே எடுத்துக் காட்டுகின்றன.

இத்தகைய சான்றினைத் தான் வல்லிபுரப் பொற்சாசனமும் தருகின்றது. 55 இப்பொற்சாசனத்தில் வஹ (வசப்) மகாராசன் காலத்தில் அவனின் அமைச்சனாகிய 'இஸிரெய' (இஸிகிராய) நாகதீபத்தினை நிருவகிக்கும்போது படகர அத்தானவில்கட்டப்பட்ட பியகுகதீஸ என்ற விகாரை கட்டப்பட்டது எனக் குறிப்பிடுகிறது அழிந்த விகாரையில் அத்திவாரத்தில் கண்டெடுக்கப்பட்ட இச்சாசனம் மக்களின் பார்வைக்கு வைக்கப்படுவதற்குப் பதிலாக இந் நிகழ்ச்சியைப் பதிவு செய்யும் ஒரு எச்சமாகவே கருதப்பட்டது. தற்போதைய விஷ்ணு ஆலயச் சூழலிற்றான் இவ் விகாரையும் அமைந்திருந்தது. இதனைப் பதிப்பித்த பரணவித்தான போன்றோர் இதிற் கூறப்படும் 'வஹ' மன்னனை அநுராதபுரத்தில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் (கி. பி. 67 111) ஆட்சி செய்த வசப மன்னனாகக் கொண்டு இது இக்காலத்தில் வடபகுதியிற் சிங்கள பௌத்தர்கள் வாழ்ந்ததை எடுத்துக் காட்டுகின்றது எனக் கூறினாலும் இதிலுள்ள நாகதீபத்தின் அதிபதியாகிய 'இஸிகிரய' என்பதற்கு அவரால் சிங்கள மூலத்தில் இருந்து கருத்தைப் பெறமுடியவில்லை. இவ்வாறு அநுராதபுரத்திலாண்ட வசபனோடு 'இவ்வஹ' மன்னனைப் பரணவித்தான போன்றோர் இணைப்பதற்கு இன்னோர் காரணமும் இருந்தது. அதாவது லம்பகண்ண வம்சத்தினைச் சேர்ந்த அநுராதபுரத்திலரசாண்ட வசபனின் முன்னோர் வடபகுதியில் காணப்பட்டனர் என்பதாகும்.

ஆனால் இதன் வரிவடிவத்தினை ஆராய்ந்த தானி, வேலுப்பிள்ளை ஆகியோர் இது கி.பி. நான்காம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் உள்ள ஆந்திர நாட்டில் வழக்கிலிருந்த வரிவடிவத்தினை ஒத்துக் காணப்படுகின்றது எனக் கூறியுள்ளனர். 56 இதனால் இச்சாசனத்தினை அநுராதபுர மன்னனான வசபனுடையதே என்று எண்ணுவது தவறாகிறது. இதனையே இச்சாசனத்திலுள்ள 'வஹ' என்ற பெயரும் உறுதி செய்கிறது அநுராதபுரத்தினை ஆட்சி செய்த வசப மன்னனின் சாசனங்களில் அவன் 'வசப' என விளிக்கப்படுவதால் வட பகுதிக்குரிய இப் பொற்சாசனம் அவனுக்குரியதாக இருப்பது சந்தேகத்திற்குரியதாகின்றது அத்துடன் பரணவித்தான கூறுவதுபோல் இதனை வடபகுதியிற் காணப்பட்ட சிங்கள பௌத்தரின் எச்சமாகக் கொள்ளமுடியாது. காரணம் இக்காலத்தில் தமிழ் நாட்டிலும் தமிழ் இந்துக்களில் ஒரு பகுதியினர் பௌத்த மதத்தினைத் தழுவியதை மணிமேகலை போன்ற நூல்கள் மட்டுமின்றி அங்கு கிடைத்துள்ள தொல்லியற் சான்றுகளும் எடுத்துக் காட்டியுள்ளன. ஈழத்தில் கந்தரோடையைப் போன்று வல்லிபுரத்திலும் வாழ்ந்த தமிழ் மக்களின் ஒரு பகுதியினர் பௌத்த மதத்தினை அநுசரித்ததையே இச்சாசனத்திற் காணப்படும் பழந்தமிழ் வடிவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

முதலாவதாக இச்சாசனத்தினை எழுதப் பயன்படுத்திய மொழி பௌத்த மதத்தின் மதமொழியாகிய பாளிப் பிராகிருதமாக அமைந்துள்ளது. இம்மொழியிற்றான் திராவிடரின் தாயகமாகிய தென்னிந்தியாவிலும் பௌத்தமதத்திற்குரிய சாசனங்கள் எழுதப்பட்டன. இருந்தும், இச்சாசனத்திற்குரியவர்கள் பழந்தமிழரே என்பதை உறுதி செய்வதாக தமிழ் வல்லின எழுத்துக்களான 'க' போன்ற எழுத்துக்கள் இதனை எழுதுவதில் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது இத்தகைய கருத்தினையே இதிற் காணப்படும பல பழந்தமிழ் வடிவங்களும் எடுத்துக்காட்டுகின்றன இச்சாசனம் இவ்விகாரை அமைந்த இடமாக 'படகர' 'அத்தான' வைக் குறிப்பிடுகிறது. உண்மையிலே படகர என்பது தமிழ் வடகரையின் பாளி வடிவமே. அத்தானவை இடத்தினைக் குறிக்கும் 'அஸ்தான' என்ற வடமொழியின் திரிபு எனக் கொண்டாலும இதனை இப்பகுதிக்குரிய ஒரு இடப் பெயராகவும் அதே இவ்வாறு அத்தான என இதில் அழைக்கப்பட்டுள்ளது எனவும் கொள்ளலாம். இப் பகுதியிற் காணப்படும் 'குடத்தனை' போன்ற இடப்பெயர்கள் இதற்கு நல்ல உதாரணமாகும்.

இவை எல்லாவற்றையும் விட முக்கியம் பெறுவது இப் பகுதியான நாகதீபத்தினை ஆட்சி செய்த 'இஸிகிரய' என்ற பெயராகும். இப்பெயருக்குச் சிங்கள மொழியில மூலத்தினைப் பரணவித்தானவினாற் கண்டுபிடிக்க முடியவில்லை. இதில் இரு கூறுகள் உண்டு. ஒன்று இஸி மற்றது ரய, ராய என்ற வடிவம் தான் இச்சாசனத்தில் 'ரய' என இடம் பெற்றுள்ளது பிற்காலச் சான்றுகளில் ராய (ராயர்) என்பது ஒரு குழுவின் பெயரோடுஇணைந்து காணப்படுவதை நோக்கும் போது 'இஸி' என்பதும் ஒரு குழுவுக்குரிய பெயராக இருக்கலாம். ஏனெனில் சங்க இலக்கியங்களில் 'இளையர்' என்ற குழு பற்றிய குறிப்புண்டு. 57 இவ் விளையரே இவ்வாறு, 'இஸி' என இதில் இடம் பெற்றிருக்கலாம். 'ரய' என்பதை வடமொழி 'ராஜ' என்பதன் திரிபு என்று கொள்வதற்குப் பதிலாக அதனை ஒத்த பழந்தமிழ் வடிவமே இஃதெனலாம் தலைவரைக் குறிக்கும் 'அரையர்' என்ற பதத்திற்கும் இதற்கும் தொடர்புண்டு. சங்க காலப் புலவர்களில் ஒருவரின் பெயர் முரஞ்சியூர் முடி நாகராயர் ஆகும். இவர் அரச வம்சத்தினைச் சார்ந்தவராவார். நாக+அரையர் தான் நாகராயர் என வழங்கலாயிற்று. பாண்டி நாட்டில் மாவட்டத் தளபதிகளாக விளங்கியோர் நாடாள்வார், மழவராயர், சக்கரவர்த்தி போன்ற பெயர்களைச் சூடியிருந்தது பற்றிய சான்றுகள் காணப்படுகின்றன.58 இவை யாவும் ஒரு பொருட் சொற்களே. இதிற் காணப்படும 'மழவராயர்' என்பது 'மழவர்' (குழுவின் தலைவன்) எனப் பொருட்படும். இவ்வாறே நாகதீபத்தினை ஆண்ட 'இஸி' 'கிரய' என்பது இஸி எனப்பட்ட குழுவின் தலைவன் எனப் பொருள்படும். இதனால் வல்லிபுரப் பொற்சாசனம் இப் பகுதியில் பாரம்பரியமாகத் தமிழ் மக்கள் வாழ்ந்ததையும் அவர்களில் ஒரு பகுதியினர் பௌத்தத்தினை அனுஷ்டித்ததையுமே எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

படிப்பகம்

www.padippakam.com



# தலைமைத்துவப் பயிற்சி . . .

(7ம் பக்கத் தொடர்ச்சி)

## ஊரகப் (கிராமப்) பகுதிகளில் தலைமை :

வட இந்தியாவைப் பொறுத்தவரை, ஊரக/சமுதாயம் என்பது கிராம மட்டத்தில் சாதிக் குழுக்கள்/சாதிப் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது. சாதீய அடிப்படையை கொள்கையாகக் கொண்ட பாரம்பரிய தலைமை கூம்பு வடிவத்தினை அமைப்பாகக் கொண்டுள்ளது. தீண்டத்தகாதார் என்ற பெரும்பான்மையினர் அடித்தளத்திலும், படிப்படியாக இதர சாதியினரும், உச்சியில் சிறுபான்மை அறிவுஜீவிகள் என ஊரக சமுதாயம்/சமுதாய கட்டமைப்பு இன்றும் வழங்குகிறது. இந்திய ஊரக சமுதாயத்தில் இரண்டு வகையான தலைமைகள் இருப்பதை நாம் காணலாம். சாதி, செல்வம், கல்வி, குடும்ப அந்தஸ்து போன்ற பாரம்பரிய பெருமைகளைக் கொண்டதாக ஒருவகைத் தலைமையும், (இவை 'வம்பர்தார்', 'முக்கிய', 'சர்பஞ்ச்', 'பிரதான்' என அழைக்கப்படுகின்றன); மற்றொரு தலைமை தோற்ற அடிப்படையிலானது குறிப்பிடத்தக்க- அசாதாரணமான புனிதத் தன்மையால் கவரப்படுகிறது; இந்த முறைசாராத் தலைவர்களைத் தங்கு தடையின்றி பலரும் பின்பற்றுகின்றனர். தோற்றம் காரணமான அதனுடைய உண்மையான தன்மையைக் சொண்டதாக இன்று இல்லை. ஊரக சமுதாயத்தில் மனித உறவுகளில் பல்வேறு மட்டங்களில் இன்றளவும் இந்தக் கவர்ச்சித் தோற்றத் தலைமைகள் நிலவியே வருகின்றன.

ஆனால், ஊரகப் பகுதிகளில் நிலவும், இரண்டுவகைத் தலைமைகளையும் சாதியே நிர்ணயிக்கின்றது. லட்சியத்தினை அடைய எதேச்சாதிகாரமான வழிமுறைகளையே இந்த சாதி-சமூக அமைப்பு வலியுறுத்துகிறது. இத்தகைய போக்குகளின் விளைவாக, கிராமங்களில் பெரும்பாலும் இல்லையென்றே சொல்லலாம் இன்றளவும், கிராம மட்டத்திலுள்ள தலைமை சாதிக் குழுக்களுடன் நெருக்கமான தொடர்புடையதாக, ஏதாவதொரு வகையில் சாதி அபிமானத்தைக் காட்டுவதாகவே நிலவி வருவது கண்கூடு.

நவீன போக்குவரத்து வசதிகள், தொழில்நுட்பம், தொழில் மயம், இயந்திரமயம், மேற்கத்திய பாணிக் கல்வி போன்ற கடந்த நாற்பதாண்டுகளாக நிலவி வரும் சூழ்நிலை, ஊரகப்பகுதிகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டுவந்து இருக்கிறது; சாதியெனும் மூடுமந்திர சமூக அமைப்பு, அரசின் மதச்சார்பற்ற கொள்கைகளாலும், வெளிப்படையான சமுதாயம் என்ற நிலைப்பாடுகளாலும் சிறிது அசைக்கப்பட்டே வந்திருக்கிறது. தொழில்நுட்ப ரீதியான மாற்றங்கள் பாரம்பரியத் தலைமைகளில் சமூக மாற்றத்தினை இப்போதிப் போதுதான் துவக்கியிருக்கின்றன. பொதுவாக பலவீனம் அடைந்து வரும் பாரம்பரிய சாதியத் தலைமைக்கு மாற்றாக, பரந்த சமுதாய அடிப்படையிலான புதிய தலைமை முகிழ்த்து வருகின்றது. அதே நேரத்தில் வளர்ச்சித் திட்டங்கள் தனிப்பட்டவர்களுக்கு, சாதிய வேறுபாடுகளைக் களைத்து ஏராளமான வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தந்து கொண்டிருக்கின்றன. சமுதாய வளர்ச்சி என்பது மக்கள் இயக்கமாக மாறக்கூடிய வாய்ப்புகள் மலிந்து வருகின்றன. ஜனநாயக ரீதியான, அதிகாரப் பரவல் முயற்சிகளை வெற்றி பெறச் செய்து, ஊரக சமுதாயத்தின் எதிர்காலத்தினை வடிவமைக்கின்ற பொறுப்புமத்திய-மாநில குடிமைச் சேவை அலுவலர்களின் கையில்தான் இருக்கிறது என்பதை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

## நகர்ப்புற அறிவாளிகள் :

ஊரக சமுதாயமாக இருந்தாலும், நகர்ப்புற பகுதியாக இருந்தாலும், பொதுக் கொள்கைகளை அரசியல் தலைவர்களும், பெரிய அரசியல் கட்சிகளும், தொழில் ரீதியான ஆட்சிப் பணி அலுவலர்களும் அடங்கிய அறிவாளிகள் தான் நிர்ணயிக்கின்றனர் என்பது கண்கூடு. எண்ணிக்கையை மட்டும் வைத்துக் கொண்டே, அரசின்அனைத்து மட்ட அலுவலர்களும் முக்கியத்துவம் வாய்ந்த சக்தியாக தம்மை ஆக்கிக்கொண்டு தேசியப் பொதுக் கொள்கைகளை வகுப்பதிலும், செயல்படுத்துவதிலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். தங்களை வெகுவாகப் பாதிக்கும் முடிவுகளை எடுக்கும்போது, ஏதும் செய்ய இயலாதவர்களாக பெரும்பான்மை மக்கள் கையறு நிலையிலேயே இருந்து வருகிறார்கள். தேசிய மாநில, உள்ளூர் மட்டங்களில் மேற்கொள்ளப்படும் அரசியல் ரீதியான நடவடிக்கைகளில், தொழில்-வணிகம்-சமூக நலம் போன்ற செல்வாக்குமிக்க பிரிவினரையும் அரவணைத்துக் கொண்டு போகின்ற முயற்சிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக மேற்கொள்ளப்பட்டு வருவதையும் காண்கிறோம்.

எது எப்படியிருந்தாலும், பொது மக்களைப் பாதிக்கின்ற கொள்கை முடிவுகளை அமல் நடத்தக் கூடிய வசதி வாய்ப்பு அரசாங்க அமைப்பில் இடம் பெற்றவர்களுக்கு மட்டுமே உண்டு என்பது மறுக்க/மறைக்க இயலாதது. மத்தியில் தேசியத் திட்டமிடல் கமிசனும், மாநிலங்கள் அளவில் மாநிலத் திட்டமிடல் கமிசன்களும் இது தொடர்பான மிகச் சிறந்த எடுத்துக்காட்டுக்கள். மேலும் ஒவ்வொரு மாநிலத்திலும் பெரு நகரங்களில் விசேட வாரியங்கள், வளர்ச்சி ஆணையங்கள் போன்றவைஏற்படுத்தப்பட்டு நகர்ப்புறங்களில் எழும் பிரச்சினைகளைச் சமாளிக்க பொறுப்புத் தரப்படுகின்றது. அரசு சாராத அமைப்புக்களுக்கு அங்குமிங்குமாக பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருந்தாலும், நடைமுறையில், அரச அலுவலர்கள் மட்டுமே கொள்கை முடிவுகளை எடுப்பதிலும், அவற்றை அமல் நடத்துவதிலும், ஏன், நாளாந்தச் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவதிலும் ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

மக்கள் பிரதிநிதித்துவ மன்றங்களுக்கு போட்டியிட கல்வித் தகுதி ஏதும் நிர்ணயிக்கப்படாத போதிலும், பொதுவாக பள்ளிப் படிப்பை முடித்தவர்களே இப்பதவிக்கு போட்டியிடுகின்றனர். கணிசமானோர் கல்லூரி பட்டங்களைப் பெற்றவராகவும் இருக்கின்றனர். மறு புறத்தில், மத்திய-மாநில அரசுப் பணி இரண்டிலும் பட்டம் பெற்றவர்களே நீக்கமற இடம் பெற்றுள்ளனர். அரசு அதிகாரிகள் பல்வேறு மட்டங்களில் அரசியல் அழுத்தங்களுக்கு ஆளாகின்றனர் என்பது உண்மையே. தொழில் ரீதியான ஆட்சிப் பணியாளர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி இருவருமே மேற்கத்திய சமூக பொருளாதார, அரசியல் தத்துவ நெறிகளின் தாக்கம் பெற்றே செயல்படுகிறார்கள். பார்க்கப்போனால், பின்னவரை விட முன்னவர் மேற்கத்திய கல்வ்யின் உற்பத்திப் பொருளாகவே இருக்கிறார். இந்த அடிப்படையில்தான் உள்நாட்டு சிந்தனையின் தேவை அவசர அவசியமாகிறது.

அதிகரித்துவரும் தொழில் மயமும், நகர் மயமும் அரசு அலுவலர்களின் எண்ணிக்கையை வீங்கிப் போகும் அளவுக்கு உயர்த்தியிருக்கின்றன. தொழிற்சங்கமயமாதலும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய மற்றுமொரு கோணமாகும். தொழிற்சாலைப் பணியாளர்கள் தொழிற்சங்கங்களில்தங்களை இணைத்துப் பிணைத்துக் கொண்டதை அடுத்து, பணிச்சூழல், கூலி, சலுகைகள், வீட்டு வசதி ஆகிய அம்சங்கள் பொதுக் கொள்கைகளில் தாக்கம் ஏற்படுத்தியவண்ணம் இருக்கின்றன. வர்த்தக-தொழிற்சாலை அமைப்புகள் தொடர்ந்து வலுவீச்சும் தாக்கமும் ஏற்படுத்தி, சோசலிச சமுதாயத்தினைச் சமைத்திட பொதுப் பிரகடனங்களை பொருளற்றதாக்கிக் கொண்டிருக்கின்றன, தலைமையிலும், அதிகாரக்கட்டமைப்பிலும் செல்வாக்குப் பெற்றுள்ள பல்வேறு கூறுகளும்இருக்கவே செய்கின்றன. அரசியல் கட்சிகள், அரசு, பகுதி-அரசு வாரியங்கள் மற்றும் அரசாங்க அதிகாரவர்க்கம் அனைத்திலும் நிரந்தரமான, வல்லமை மிக்க படிநிலையாக அமைந்த புரோகிதர் அமைப்பு நிர்வாகத்தின் அனைத்து மட்டங்களிலும் நீக்கமற நிறைந்து இருப்பதைக் காணலாம்.

## சமூக ஆய்வின் அவசியம்

கடந்த முப்பதாண்டுகளில் ஏற்பட்டிருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்கள் முரட்டுத்தனமான சமூக அமைப்பை குறிப்பிடத்தக்க அளவுக்குத் தளர்த்தியுள்ளன; சாதிவேறுபாடுகளைக் கடந்த தலைமை உருவாவது அதிகரித்துவருகின்றது. தலைமை யாருக்கு என்பதை முடிவு செய்யும் காரணிகளான செல்வம், குடும்ப அந்தஸ்து, வயது மூப்பு ஆகிய தகுதிகளை புதிய சக்திகள் கணிசமாகக் குறைத்துவிட்டன. கல்வியின் முக்கியத்துவம் பெருகி வருகிறது. ஆளும் கட்சியுடன் தன்னை இனங்காட்டிக்கொள்வதும் மேலுயர்ந்தோங்குகிறது ஐயத்துக்கு இடமின்றி, இந்தியக் கிராமங்களில் சமூக-பொருளாதார மாற்றம் ஏற்பட்டு வருகின்றது; புதிய புதிய அறிவுப் பலகணிகள் திறந்து விடப்பட்டு பாரம்பரிய முறைகள் நீங்கி, வேறு சில முறைகள் நடைமுறைக்கு வந்துள்ளன என்பதைக் கள ஆய்வுகள் தெரியப்படுத்துகின்றன. எனினும், நகர்ப்புற உள்ளாட்சிகளின் செயல்பாடு ஆகியவை குறித்து நமது அறிவு போதியதாக இல்லை, மனிதவியலாளர்கள் நகர்ப்புற வாழ்க்கை குறித்து கண்ணாடி கொண்டு ஆய்வு நடத்த வேண்டிய தருணம் வந்தேவிட்டது. நாட்டிலுள்ள சமூக அமைப்பு இடத்துக்கு இடம் மாறுபடுவதால் பாரம்பரியமான-புதிய தலைமைகள் குறித்து விரிவான கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மாவட்ட நிர்வாகம் தொடர்ந்தும் முக்கியத்துவம் வாய்ந்த அமைப்பாக இருப்பதால், முறையான பரிசோதனைக்கு இவையும் உள்ளாக்கப்பட வேண்டும். மிகக் குறைந்த அளவிலான எழுத்தறிவு அடிப்படை வாழ்க்கை வசதிகளுக்கென நடைபெறும் தொடர் போராட்டம் ஆகிய இரண்டும் பொது மக்களை அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்கு பெறுவதையும், சமூக-பொருளாதார வளர்ச்சிக்கான பரந்த அளவிலான திட்டங்களில் பங்கு - பணியாற்றுவதையும் தடைசெய்து வருகின்றன. எனவே, இப்போது இருக்கும் மாவட்ட அளவிலான நிர்வாக அமைப்பு, நகர்ப்புற-ஊராக சமுதாயத்தினர் இருவருக்கும் பயன்படும் சக்தியாக நிலவுகிறது. முறைசாராக்கட்டமைப்புகளும் அங்கங்கே முறைப்படியான வலைப்பின்னல் மீது தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

இந்த முறைசாராக் கட்டமைப்புகள் குறித்து நாம் மேன்மேலும் அறிய வேண்டியிருக்கிறது. இத்தகைய ஆய்வுகளிலிருந்து பெறும் அறிவு நமது திட்டமிடலாளர்களுக்கு வளமிக்க தலைமையை இனம் காண உதவும். சமூக நலத் திட்டங்கள் (குடும்பக்கட்டுப்பாடு உள்ளிட்டவை), வகுப்புகளிடையே நல்லிணக்க மேம்பாடு ஆகியவற்றை நனவாக்கிட இந்தத் தலைமைகள் உற்றுழி உதவும். பாரம்பரிய சமூக வாழ்க்கை, நகர்மய தொழில்மயத் தாக்கம் ஆகியவை குறித்து போதிய அறிவு பெறாமல், சமுதாயத்தில் திட்டமிட்ட மாற்றங்களை அறிமுகப்படுத்தவோ, வளர்ச்சித் திட்டங்களை சுயச்சார்பு நடவடிக்கைகளாக மாற்றத்துக்கு ஆளாக்குவதோ நடவாது.

தொகுப்பு: இரவீந்திரராசா

(தொடரும்)

## கோடையில் சோடை போகாதிருக்க!...

✻ கோடையில் 50 வயதைத் தாண்டியவர்களுக்கு வெப்பத் தளர்வு ('ஹீட் எக்சாஷன்') வெப்பத்தாக்கம் ('ஹீட் ஸ்ட்ரோக்') ஆகியவை ஏற்பட வாய்ப்பு உண்டு.

✻ வீட்டுக்குள் இருந்தாலும் உடல் வெப்ப நிலை அதிகரிக்காமல் இருக்க ஈரத்துணியால் உடலை அவ்வப்போது துடைத்துக் கொள்வது நல்லது.

✻ ஹீட் ஸ்ட்ரோக் பாதிப்பு ஏற்பட்டவருக்கு வியர்வை முற்றிலும் நின்று உடல் அனலாகக் கொதிக்கும். மயக்க நிலைக்குத் தள்ளப்படுவார். மயக்கம் அடைந்தவரை முதலில் நிழல் உள்ள இடத்துக்குக் கொண்டு சென்று உடலின் மீது குளிர்ந்த நீரை ஊற்ற வேண்டும். நினைவு வந்தவுடன் குடிப்பதற்கு மோர் கொடுக்க வேண்டும்.

✻ சூரிய ஒளி முகத்தில் படும்படி நடக்கவோ, பயணம் செய்யவோ கூடாது. கருப்புத்துணி வெகு வேகமாக வெப்பத்தைத் உள்வாங்கிக் கொள்ளும் என்பதால் கோடையில் கருப்புக்குடையை பயன்படுத்தவே கூடாது. வெள்ளை நிறத்தொப்பி அணிந்து கொள்ளலாம்.

✻ டெரிக்காட்டன், நைலான் ஆடைகளைத்தவிர்த்து பருத்தி துணிகளையே அணிய வேண்டும்.

## கண் எரிச்சலா?

'அப்பா காலையில் எழுந்து படிக்கிறேன். கண்ணெல்லாம் எரிகிறது.' என தேர்வுக்குப் படிக்கும் மாணவர்கள் சொல்வது வழக்கம்.

ஒரு சிறிய துணியை குளிர்ந்த நீரில் அல்லது சாதாரண தண்ணீரில் நனைத்து கண்களில் பட்டியாகப் போட்டுக் கொண்டு 10நிமிடம் கண்களை மூடிக்கொண்டால் போதும் கண் எரிச்சல் சரியாகும். மீண்டும் மூன்று மணி நேரம் படிக்கும் அளவுக்குக் கண்களுக்கு உற்சாகம் கிடைக்கும். தூக்கம் வருவதைத் தவிர்க்க முடியும்.

# நல்லதொரு வாய்ப்பை நழுவவிடாமல் பார்ப்பது ஈழத்தவரின் கடமை

-கேயாரி-

இந்திய அரசாங்கத்தாலும், இலங்கை அரசாங்கத்தாலும், அமெரிக்க அரசாங்கத்தாலும் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீண்டும் ஒரு சமாதான உடன்பாட்டுக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை சூசகமாக சிலஅமைப்புகள் மேற்கொண்டுவருவதாக பத்திரிகைச் செய்திகள் மூலம் தெரிய வருகிறது.

இதன் முதற்கட்டம் அரசியல் தீர்வொன்றைக் கண்டு அறிவதற்காகத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கே அரசாங்கம் விரும்புகிறது. புலிகள் மீதான தடை இதற்கு குந்தகமாக இருக்கமாட்டாது என ஐ.நா. வில் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியான தூதுவர் எச்.எம்.ஜி.எஸ். பள்ளிஹாரா ஜெனிவாவில் நடந்த மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னிலையில் பேசுகையில் கூறியுள்ளார்.

அவர்மேலும் கூறியதாவது: அரசியல் தீர்வொன்றை அடைவதற்காகப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவே அரசாங்கம் விரும்புகிறது. புலிகள் இயக்கம் பயங்கரவாதத்தைக் கைவிட்டு, தீவிரமாக, உண்மையாக ஜனநாயக வழிக்குத் திரும்பத் தயாரானால் அரசாங்கமும் அதனுடன் பேசுவதற்குத்தயாராக இருக்கின்றது. புலிகள் மீதான தடை பேச்சுவார்த்தைமூலமான இலக்கை அடைவதற்கு தடையாக இராது என்றார்.

இதன் இரண்டாம் கட்டம்: இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பாக புதிய இந்திய அரசின் அணுகுமுறை என்னவாகவிருக்கும் என்பது,பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பேயின் இலங்கை விஜயத்தின் முன்னர் திட்டவட்டமாக தெரிந்துவிடும் என இலங்கை அரசு எதிர்பார்க்கிறது. இதன் மூன்றாம் கட்டம். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தினை முதலில் அமுல்படுத்தி அதனை அடிப்படையாகக் கொண்டு மேலதிக அதிகாரங்களை சிறுபான்மையினருக்கு வழங்க வேண்டும் என்பதே இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகப் புதிய இந்திய அரசின் அணுகுமுறையாக உள்ளது எனவும் இந்திய அரசு வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

இதன் நான்காம் கட்டம்: ஐக்கிய முன்னணி அரசும் எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சியும் ஒரு பொது உடன்பாட்டுக்கு வந்து அதனைத் தமிழீழவிடுதலைப்புலிகள்முன் சமர்ப்பிக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து இந்த முத்தரப்பினரும் நம்பகத் தன்மையுடன் ஏற்றுக் கொள்ளக் கூடியதும் கௌரவிக்கத்தக்கதுமான மத்தியஸ்த நாடொன்றுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும்.

ஜூலை மாதம் இலங்கையில் நடைபெறவிருக்கும் சார்க் உச்சி மாநாட்டிற்கு முன் ஈழத்தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்ற துடிப்பில் பல அரசியல் கட்சிகளும், தமிழர் அமைப்புகளும் தங்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளன. ஆக மொத்தத்தில் மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை நாடகம் இலங்கையில் அரங்கேறப்போகிறது.

இதே வேளை ''ஆப்பெடுத்த குரங்கு வால்'' கதை மாதிரி வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை தரை வழிப் பாதை திறக்கிறோம் எனக் கூறிய படையினர் ''ஜயசிக்குறு'' இராணுவ நடவடிக்கையைத் தொடங்கினர். எதிர்பார்த்த வெற்றியைவிட எதிர்பாராத தோல்விகளையும் இழப்புகளையும் படையினர் சந்தித்துள்ளனர். இதன் மூலம் அரசாங்கத்திற்கு கோடிக்கணக்கான இழப்புகள் ஏற்பட்டிருப்பதும் இழப்புகளை வெளியே சொல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் இலங்கை அரசு சார்க் உச்சி மாநாட்டின் மூலம் இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணலாம் என்ற இழுபறித் திட்டத்துடன்''ஜயசிக்குறு'' நடவடிக்கையை மீள் புனருத்தாரணம் செய்யவிருக்கிறது என்பதும் ஓரளவு உண்மை என்று நினைக்கலாம்.

மீண்டும் ஒரு இதய சுத்தியற்ற பேச்சுவார்த்தையைத் தொடரலாம். அதன் மூலம் கிடைக்கும் இடைவெளி காலத்தில் இராணுவம் தங்களைப் பலப்படுத்திக் கொள்ளலாம் என்றும் அதன் பிற்பாடு மீண்டும் ஒரு போர் நடவடிக்கையைத் தொடரலாம் என்றும் இலங்கை அரசு பழைய காலக் கனவுகளை மீண்டும் நினைவு கடர்ந்து உள்ளது.

இலங்கை அரசின் இத்தகைய கபட நாடகத்துக்கு இந்திய அரசு துணை போகுமாஅல்லது நில்...கவனி...செல் என்றகோஷத்துடன் செல்லுமா என்பது கவனத்திற்கொள்ளப்படவேண்டிய விடயமாகும். எதிர்காலத்து ஈழத்து அரசியல் திட்டம்நோக்கிப்பிரச்சினைகள் பேசப்பட வேண்டும். கடந்த கால நிகழ்வுகளைக் காரணங்காட்டி தமிழர் அமைப்புகளை அலட்சியம் செய்வதோ விடுதலைப் புலிகளை அலட்சியம் செய்வதோ எட்டப்படும் முடிவுகளைச் செயல்படுத்துவதில் தாமதங்ககளை ஏற்படுத்தலாம், அல்லது செயல்படுத்த முடியாமல் கூட போகலாம்.

பேசப்படும் விடயங்கள் மக்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும். (சில விடயங்கள் அந்தரங்கமாக இருக்க வேண்டும் என்பது ஒருபுறம்.) உண்மைகளை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். நல்லதொரு சந்தர்ப்பம் நழுவ விடாமல் பார்த்துக் கொள்வது ''ஈழம்'' சம்பந்தப்பட்ட அனைவரதும் கடமையுமாகும்.

## யாழ். மருத்துவ பீடம்: 10 வைத்தியர்கள் மட்டுமே சேவை

யாழ். பல்கலைக் கழகத்தின் மருத்துவபீடம் கடந்த 18 ஆண்டுகளில் 460 வைத்தியர்களை உருவாக்கியுள்ளது. இத்தொகையில் சுமார் 10 வைத்தியர்கள் வரையில்தான் இப்போதும் யாழ். மாவட்டத்தில் சேவையாற்றி வருகின்றனர்.

ஏனையோர் தென்பகுதிக்கும் வெளிநாடுகளுக்கும் சென்றுள்ளனர் என மருத்துவபீட வட்டாரங்களில் இருந்து அறியப்படுகின்றது.

# கொழும்பில் வெளித்தமிழர்கள்தங்க அரசே விடுதிகட்டுவது சாத்தியமா?

## தமிழ்க் கட்சிகள் எழுப்பும் சந்தேகம்

கொழும்பு நகரத்திற்கு வெளியிருந்து வந்த தமிழர்கள் தங்கும் விடுதிகள் சுகாதாரக் குறைபாடு கொண்டவையாக இருக்கின்றன என்றும் இதனைப் போக்க அரசே சுகாதாரமான விடுதிகளைக் கட்டி அங்கே தமிழ்ப் பயணிகளைத் தங்க வைக்கப் போவதாகவும் கூறியுள்ளது. இந்தத் திட்டம் பற்றித் தங்களுடைய கருத்து என்ன என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் டக்லஸ் தேவானந்த அவர்களைக் கேட்டபோது-

அதில் இரண்டு காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. முதலாவது காரணம் அந்த மக்களுக்கு சுகாதார வசதிகளோடு அமைப்பிட வசதியில்லாதபடியால் நாங்கள், அரசாங்கம் அதை அமைத்து கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருந்தோம். அந்தக் காரணத்தைப் பொறுத்தவரையில் நன்றாக இருக்கின்றது. ஆனால் இதற்கொரு இரகசிய நோக்கம் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. அதாவது மக்களுடைய சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதற்கான முயற்சியாக இருக்குமென்று நினைக்க வேண்டியிருக்கிறது, அதே நேரத்தில் இன்னொன்றும் சொல்லப்படுகிறது. மக்களுக்கு இங்கே விடுதிகளில் தங்குவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. அந்த அனும்தி என்பது போலிஸாரால் தான் வழங்கப்படுகிறது. மறுப்பதும் வழங்குவதும் போலிஸாரால் செய்யப்படுவதினால் போலிசுக்கு வெளியிருந்து கொண்டு வேறு யாராவது மறுக்கிறது மாதிரிநிகழ்வுகள் இங்கு நடைபெறவில்லை. ஆனபடியினால் இதில் உள்நோக்கம் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

என்ன உள்நோக்கம் இருக்கக்கூடும்?-

உள்நோக்கம் என்று சொல்லும் போது வவுனியாவில் இருக்கின்ற முகாம்கள் மாதிரி தடுப்பு முகாம் மாதிரியான சூழல்களில் இந்த மக்களைக் கொண்டு செல்வதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன. ஆகவே இது சம்பந்தமாகநாங்கள் அரசாங்கத்திடம் ஆட்சேபம் தெரிவிக்க இருக்கின்றோம்.

### திரு. ஆனந்த சங்கரி

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின்தலைவர் இதே விசயம் பற்றி தம் கருத்தை விளக்கியபோது-

இது சம்பந்தமாக மூதன் முதலாக இன்றையபத்திரிகைகளில் தான் செய்தி வந்திருக்கிறது.

இதில் ஏதோ உள்நோக்கம் இருக்குமென்று சந்தேகம் ஏற்படத்தான் செய்கிறது. ஏனெனில் அரசாங்கம் உண்மையிலேயே தமிழர்கள் மீது இரக்கம் கொண்டு அல்லது அனுதாபம் கொண்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சிக்கின்றது என்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இப்போது தமிழர்கள் தங்கும் விடுதிகள் எல்லாம் அவ்வளவு சுகாதாரமாக இல்லை என்று சொல்கிறார்களே! அது பற்றி தங்கள் கருத்து என்ன?-

### அனுமதிக்குத் தவம்

அது ஓரளவுக்கு உண்மை தான். ஏனென்றால் 276 விடுதிகள் இருக்கின்றன என்பதைப் பத்திரிகைகளின்வாயிலாக அறிகின்றோம். பல விடுதிகளிலே சுகாதாரக் குறைவு உண்டு. வசதிகள் மிகவும் குறைந்ததாகத்தான் இருக்கின்றன. அதை மறைக்க முடியாது. ஒரு அறையை சரிபாதியாக பிரித்து, அதில் பலர் தங்கியிருக்கிறார்கள். ஆனால் இப்படி மக்கள் கஷ்டப்படுகின்ற காரணத்தினால்தான் அரசாங்கம் விடுதிகள் அமைக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏனென்றால் வடகிழக்கில், வவுனியாவில் தேவையான வீடுகளைக்கட்டி முடிக்க வேண்டிய நிலைமை பல வருடங்களாக இருந்தாலும் செய்யப்படவில்லை. அப்படியிருக்க இதில் ஏதோ உள் நோக்கம் இருக்கும் என்று தான் தெரிகிறது. அந்தக் காலத்திலே சில சந்தர்ப்பங்களில் சில போலிஸ் அதிகாரிகள் தம்முடைய பகுதியில் உள்ளகுறிப்பிட்டசிலலாட்ஜுகளைப் பூட்டி விட்டு 24 மணி நேரம் அல்லது 12 மணிநேரம் யாரும் வெளிவர வேண்டாம் என்று சொல்லிக்கட்டளை பிறப்பித்தார்கள். அப்படி பல சந்தர்ப்பங்களிலே பலர் வெளியிலேயே நிற்க வேண்டிய நிலை ஏற்பட்ட சம்பவம் உண்டு. ஆகவே அரசாங்கம் இந்த லாட்ஜுகளை பதிவு செய்வதில் நியாயம் இருக்கின்றது. பதிவு செய்து அதில் சில கட்டுப்பாடுகளை விதிக்கலாம். அது வரவேற்கக் கூடியதாக இருக்கும். ஆனால் தாங்களே கட்டி நிர்வகிக்கக் கூடியது என்று வரும் போது இப்போது யாழ்ப்பாணத்தில், கிளிநொச்சியில் இருப்பதைப் போல மாதக்கணக்கில்காவல் நின்று அல்லது நாள் கணக்கிலே வரிசையாக் நின்றுதான் எந்த லாட்ஜுலேயும் இடம் பிடிக்க வேண்டியிருக்கும்.

இவ்வாறு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் ஆனந்த சங்கிரி பதிலளித்தார்.

-பி.பி.சி. (27-4-98)

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# சமாதானத்துக்குவெளிமத்தியஸ்தம்தேவை கொழும்பில் நிலவும் பரவலான கருத்து

## பி.பி.சி. தரும் சித்திரம்

இலங்கையின் சமாதான முயற்சி எந்தவித நடவடிக்கையுமே இல்லாமல் ஸ்தம்பித்து நிற்கின்றது. இப்போது மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கு பூர்வீகமான உந்துதல் சக்தி அவசியம் தேவைப்படுகிறது. அரசாங்கம் அறிவித்திருந்த திட்டம் எந்தவிதமான முன்னேற்றத்தையும் காணவில்லை. வெளிநாட்டு உதவியைக் கோருவதற்குத் தருணம் வந்து விட்டது என்று இப்பொழுது கொழும்பில் பலரும் கருதுகிறார்கள். ஆனாலும் இலங்கைக்கு வரும் முக்கியமான விருந்தினர்களில் எவரும் இது பற்றி இன்னமும் எதுவுமே குறிப்பிடவில்லை.

நெருக்கடியைத் தீர்க்க உதவுவதற்கு அனைத்துலக மத்தியஸ்தம் வேண்டுமென்று புலிப்படையினர் மீண்டும் குரல் எழுப்பி வருவதாகத் தமிழ்ச் செய்திப் பத்திரிகை ஒன்று அண்மையில் எழுதியிருந்தது. ஆனாலும் இலங்கை அரசாங்கமே பிரான்ஸ் நாட்டு உதவியைச் சில வருஷங்களுக்கு முன் பெற்றுக் கொண்டாலும், இந்தப் போர் உள்நாட்டு விசயம் என்றுதான் இப்பொழுது வலியுறுத்தி வருகிறது.

புலிப்படையினரோடு எதிர் காலத்தில் சமாதானப் பேச்சுகள் நடத்தப்படும் பட்சத்தில் பொதுவானகொள்கை ஒன்றைக் கடைப்பிடிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் முகமாக இலங்கையின் அரசு தரப்பினரையும், எதிர்க்கட்சியாளரையும் பிரிட்டிஷ் அரசாங்க அதிகாரிகள் கடந்தஆண்டில் ஒன்றுபடுத்தி ஒருமித்த கண்ணோட்டத்தில் வைத்திருந்தது தெரிந்ததே. சமாதானப் பேச்சு விரைவில் ஆரம்பிக்கப்படலாம் என்ற நம்பிக்கைகளை இது அதிகரித்தது. ஆனால் ஒன்றுமே நடக்கவில்லை.

இப்போது கனடா, அவுஸ்ரேலியா, பிரிட்டன் உட்பட பல நாடுகள் இந்தப் பிரச்சினையில்மத்தியஸ்தம் வகிக்க முன் வந்திருக்கின்றன. வட அயர்லாந்தில் அண்மையில குறிப்பிட்ட சமாதான உடன்படிக்கைகள் பற்றிய செய்திகள் இலங்கையில் கொழும்பு பத்திரிகைகளில் விரிவாக வெளியிடப்பட்டிருந்தன. இதனைப் பார்த்து விட்டு (படித்து விட்டு) இதே போன்று சமாதான நடவடிக்கை ஒன்று இலங்கையிலும் ஏற்படுத்தப் படலாமே என்று பலரும் நம்பிக்கை தெரிவித்திருந்தார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு பி.பி.சி வானொலி செய்திக் கண்ணோட்டத்தில் கூறியுள்ளது

"ஈழ சுதந்திரன்"

மாத இதழ் சந்தா விபரம்

ஓராண்டு சந்தா இந்தியாவில் ரூ. 30-00

வெளிநாடுகளில் அமெரிக்க டொலர் 10

அல்லது பிரிட்டிஷ் பவுண்ட் 6

ஈழ சுதந்திரனுக்கு வெளிநாடுகளில் சந்தா சேர்த்தனுப்ப முன்வருவோர் தொடர்பு கொள்ளலாம்.

நிர்வாகி
ஈழசுதந்திரன்
14, சேட் காலனி முதல் தெரு,
மூன்றாம் மாடி
எழும்பூர், சென்னை-8.

# இந்தியாவைக் கண்டித்து புத்த பிக்குகள் கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டம்

## இந்திய தூதரகத்தில் மனுவும் தந்தனர்

இலங்கையில் நடைபெறும் இனச் சண்டை பற்றி இந்தியாவில் பி.ஜெ.பி. கட்சி வெளியுறவு விவகார குழுவுக்கு தலைமை வகிக்கும் நாகேந்திர நாத்ஷா தெரிவித்ததாகக் கூறப்படும் சில கருத்துக்களை கண்டித்து கொழும்பு நகரில் புத்தபிக்குகள் உள்ளிட்ட பலர் 29-4-98 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளார்கள்.

கொழும்பு நகரில் புத்த பிக்குகள்உள்ளிட்ட பலஆர்ப்பாட்டக்காரர்கள் இலங்கையில் நடக்கும் இனச்சண்டை பற்றி இந்தியத் தலைவர் ஒருவரின் கருத்துக்கெதிராக இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டம் பாரதிய ஜனதா கட்சியின் வெளியுறவு விவகார குழுவிற்கு தலைமை வகிக்கும் நாகேந்திரநாத்ஷா தெரிவித்த கருத்துக்களுக்கு எதிராகவே நடத்தப்பட்டதாகும்.

டெல்லியில் 28.1-98 அன்று நடந்த யெய்தியாளர் கூட்டம் ஒன்றில் பேசிய ஷா, தங்கள் அரசு தற்போது அண்டை நாடுகளோடுஉள்ள தடைகளை உடைக்கும் சில திட்டங்களைப் பரிசீலித்து வருவதாகவும், இது இந்தியாவின் நட்பு ரீதியான அக்கறையைக் காண்பிப்பதற்காகவும் இருக்கும் என்று கூறினார். இந்தத் திட்டங்கள் திடமானவை, ஏற்றுக் கொள்ளக் கூடியவை மற்றும் உடனடியாக அமுல் படுத்தக் கூடியவை என்றும் கூறினார்.

இதைக் கண்டித்து சுமார் 400 ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழும்பில் கூடி வெளிநாடு தலையிட்டதற்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர். அவர்கள் இந்தியத் தூதரகத்திற்குச் சென்று ஒரு விண்ணப்பத்தையும் சமர்பித்தனர்.

—பி.பி.சி. 29 4-98

# பேராசிரியர் கிள்ளிவளவன் இல்லத் திருமணம்

தமிழக ராஜீவ் காங்கிரஸ் கட்சிப் பிரமுகரும், ஈழத் தமிழர் பிரச்சினையில் என்றும் உறுதுணையாக இருந்து வருபவருமான பேராசிரியர் தி.சு. கிள்ளிவளவன் அவர்களின் ஐந்தாவது மகள்செல்வி பூங்கொடி மணவாட்டிக்கும், முருக்கம்பட்டு பலராம் அவர்களின் மகன் செல்வன் பிரகாஷ் மணவாளருக்கும் 15-4-98 அன்று சென்னை இராயப்பேட்டை 'நல்வாழ்வு' திருமண மண்டபத்தில் புலவர் இராம. வேங்கடேசன் தமிழ் முறைப்படி நடத்திவைக்க இனிதே நடைபெற்றது.

இந்திய மத்திய பெட்ரோலியத் துறையமைச்சர் வாழப்பாடி இராமமூர்த்தி, திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி, பெரியார் திராவிடர் கழகத் தலைவர் ஆனூர் செகதீசன், இராசனார்த்தனம் மற்றும் பல்வேறு தமிழக அமைப்புகளின் தலைவர்களுடன், ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் சார்பில் சா.செ. சந்திரகாசன், அரு. கோபாலன் ஆகியோரும் கலந்து கொண்டனர். வாழ்க மணமக்கள்!

# மீன் பிடித் தொழில் முடக்கம் யாழ்.மீனவர்கள் திண்டாட்டம்

யாழ் மாவட்டம் இன்று தனது மீன் பிடித்துறையில் சுய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத சூழ்நிலையில் உள்ளது. இதற்குக் காரணம் தற்போது கடல் வலையம் தடைகள் காரணமாகவே இந்த நிலைகள் ஏற்பட்டுள்ளது. ஆனால் ஒரு காலத்தில் இலங்கையின் முழு தேவையில் மூன்றில் ஒரு பகுதியினை யாழ்குடா நாட்டிலிருந்தே பெற்றுக் கொண்டிருந்தார்கள். தற்போது யாழ் கடல் நீர் ஏரியில் இடுப்பளவு தண்ணீரிலும் தீவுப் பகுதியில் மார்பளவு தண்ணீரிலும் நின்று மீனவர்கள் மீன் பிடிக்கின்றார்கள். இதே வேளையில் சில பகுதிகளில் இராணுவ அதிகாரிகளின் சம்மதத்துடன் மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

தற்போது இருக்கும் கட்டுப்பாடு நீக்கப்பட வேண்டும் என்று சொல்லிப் பல தமிழ் கட்சிகளிடமும், படைத்துறை அதிகாரிகளிடமும் அரசாங்கத்திடமும் மீனவர் சங்கங்கள் பல கோரிக்கைகளை முன் வைத்த போதும், எந்தப் பிரயோசனமும் இல்லை. தொடர்ந்து அதே தடைதான் காணக் கூடியதாக உள்ளது.

அண்மையில் ஜனாதிபதியின் செயலாளர் அவர்களுடன் மீன் பிடித் தடைகள் அகற்றுவது குறித்து தமிழ் கட்சிகள் பேச்சுகள் நடத்திய போதும் எந்த ஒரு தடையும் அகற்றப்பட்டதாகத் தெரியவில்லை. சில தடைகள் தவிர்க்கப்படும் என ஜனாதிபதியின் செயலாளர் உறுதிமொழி அளித்தார். ஆனால் எந்தப் பயனும் இது வரை கிடைக்கவில்லை.

# செய்திச்சரம்

27-4-1998

இலங்கையில் இராணுவமும், புலிகளும் போரை கைவிட்டு அமைதிப் பேச்சில் ஈடுபட வேண்டும் என்று இந்திய அமைதி காப்பு படையின் முன்னாள் தலைவர் கல்கத் கோரிக்கை விடுத்தார்கள்.

(தினகரன், கதிரவன்)

28-4-1998

திருகோணமலை அருகே முட்டூர் என்ற இடத்தில் நேற்று புலிகள் பயணிகளின் படகு ஒன்றை தகர்த்தனர் என்றுபாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

(தினமணி, தினகரன்)

29-4-1998

இலங்கை களுத்துறை நகரில் உள்ள தொலைபேசி இணைப்பகத்தில் நேற்று குண்டு வெடித்ததில் ஆயிரக் கணக்கான இணைப்புகள் பாதிப்படைந்துள்ளன.

(தினகரன், தினமலர், கதிரவன், இந்து)

யாழ்ப்பாணம் மாங்குளம், அருகில் புலிகளுக்கும், இராணுவத்துக்குமிடையே நடந்த சண்டையில் 20 புலிகள் சொல்லப்பட்டனர் என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

(தினத்தந்தி)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பட்டப்படிப்பினையும், பட்ட மேற்படிப்பையும் படிக்க வாய்ப்பு உண்டு. பட்டப் படிப்பினை மேற்கொள்ள 18 வயதினை நிறைவு செய்து இருக்க வேண்டும். பட்ட மேற்படிப்பிற்கு 25 வயதினை நிறைவு செய்திருக்க வேண்டும். மேலும், இந்திரா காந்தி பல்கலைக்கழகம் பல சான்றிதழ் பயிற்சிகளையும் நடத்தி வருகின்றது. இதற்குத் தேவையான சான்றிதழ் பிறப்புத் திகதி அத்தாட்சி.

ஈழ அகதி மாணவர்கள் அனைவரும் உயர்கல்வி கற்க இவ்வரிய வாய்ப்புகளைப்பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

### கழகத்தில் பெயர் பதிவு செய்தல்

உயர் கல்வி கற்க விரும்பும் ஈழ அகதி மாணவர் உயர் கல்வி அனுமதி விபரப்படிவத்தினைப்பூர்த்தி செய்து கழகத்தில் தம் பெயரை பதிவு செய்தால், உயர் கல்வி நிறுவனங்களில் கற்பது தொடர்பான விபரங்கள் அவர்களுக்குத் தெரியப்படுத்தப்படும். இப்படிவம் கழக பாவனைக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. தம் விபரங்களை எமக்கு அறியத் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு 1. ஈழ அகதி மக்களுக்காக வழங்கப்படும் இட ஒதுக்கீடு தமிழ்நாடு அரசினால் வழங்கப்படுகின்றது. இவ்வொதுக்கீட்டில் தனிநபர்களுக்கோ நிறுவனங்களுக்கோ எந்தச் சம்பந்தமும் இல்லை.

குறிப்பு 2. கழகத்தில் பெயர் பதிவு செய்வதால் கல்லூரிகளில் அனுமதி கிடைக்கும் என்பது உறுதியல்ல.

படிப்பகம்

www.padippakam.com



# கவிதைச் சரம்

## மகத்துவமாக்குவோம்

மனிதனே!
அரக்கப் போர்வைக்குள்
நீ நடத்தும்
ஆணவப்போரை நிறுத்து
இரக்கப் பார்வையை
உன் தாய் நாட்டின் மீது
இறக்கி வை
நாமின்னும் இம்மண்ணில்
இருக்கப்போவதோ சிலகாலம்
அதற்குள் ஏன்
போர்க்கோலம்? -இனி
தாங்காது புவிக்கோளம்!
சாதி மதப்போர்வைக்குள்
ஒளிந்து கிடக்கும்
உன்றனைத் தெளிவுபடுத்து
குண்டுகளால் நாம்
மாண்டு விழ்வதை தடுத்து
நாம் நம்மை
புரிந்துணர்ந்து வாழ்வோம்
சகோதரத்துவத்தை
நமது சத்தியக் கொள்கை
யாக்குவோம்
இன்றே விழித்தெழுவோம்
நாளையை நமதாக்கி
நமது மனித வரலாற்றை
மகத்துவமாக்குவோம்!

''கவிசுரபி''
சுப. சந்திரசேகரன்

## தேடினேன்! தேடுகிறேன்!

இருட்டில் தேடினேன்
ஒளியை அல்ல!

கடலில் தேடினேன்
கடல் முத்தை அல்ல!

கணவில் தேடினேன்
கற்பனையை அல்ல!

காட்டில் தேடினேன்
கலை மானை அல்ல!

நிலவில் தேடினேன்
நித்திரையை அல்ல!

பூவில் தேடினேன்
புதையலை அல்ல!

தேடித் தேடி அலைந்தேன்
எங்கள் ஈழ நாடு
சுதந்திரம் அடையப்போகும்
நாளை?

T. செல்வி
குடியாத்தம் |
வேலூர் மாவட்டம்

## இலட்சியம்

நேற்று! போனது
போனதுதான்!
நாளை நடப்பதை
யார் அறிவார்?
இன்று என்பது
நிச்சயம்! இதை
இனிதாய் ஆக்குவதே
இலட்சியம்!

-தமிழ்நம்பி

## கவியோகி சுத்தானந்த பாரதி

**கவிமாமணி. மரு. ச. ஆறுமுகநாதர்**

(கவியோகி சுத்தானந்த பாரதியின் நூற்றாண்டு நிறைவு விழா, இன்று தமிழ்கூறு நல்லுலகமெங்கனும் கொண்டாடப்படுகிறது. 11-5-1998 அன்று சென்னை சங்கீத சபை மண்டபத்தில் பெருவிழாவாக நடைபெற்றது. அப்போது அனைவருக்கும் வழங்கப்பட்ட பாடல். இது இயற்றப்பட்டது கவியோகி சுத்தானந்த பாரதி 1949 ல் இலங்கைக்கு வருகை தந்த போதாகும். அப்போது கவிஞர் ஆறுமுகநாதரும் இலங்கையில் வாழ்ந்து வந்தார்.)

அன்பொளிரும் திருமுகத்து அண்ணலினைக் கண்டேன்
அருளிதயத் திருவடியின் அறிஞரினைக் கண்டேன்
பொன்னொளிரும் பொலிவுமிகு புலவரினைக் கண்டேன்
புத்தமுனி கருணைபொழி போதகனைக் கண்டேன்
இன்னலுற்ற மக்களுக்காய் சிலுவையிலே மாண்ட
ஏசுபிரான் இதயத்தின் எதிரொலியைக் கண்டேன்
தன்னுயிரை அடிமைக்காய் பிணையிட்ட பெருமான்
தவக்கொழுந்தாம் நபிகள்திருத் தத்துவத்தைக் கண்டேன்

சித்தாந்த வேதாந்தச் சிறப்பதனைக் கண்டேன்
தீந்தமிழ்த்தாய் அறவுரையின் செழுமையினைக் கண்டேன்
முத்தான மணித்தமிழின் முற்றமிழ்தம் கண்டேன்
முன்னேற்ற வேங்கையின் முழக்கத்தைக் கேட்டேன்
சுத்தானந்தக் கதிரின் சுடரொளியைக் கண்டேன்
துறவுகொண்ட விஞ்ஞானத் தோன்றலினைக் கண்டேன்
நித்யானந்தக் கதிரின் நேசவொளி கண்டேன்
நீதிபொழி மெய்ஞ்ஞானச் சோதியினைக் கண்டேன்

தமிழ்க்கடலில் குளித்தெழுந்த தவமுனியைக் கண்டேன்
சமதர்மப் பேராற்றின் சக்தியினைக் கண்டேன்
அமுதான தமிழகத்து அடிகளாரைக் கண்டேன்
அனைத்துயிரும் தம்முயிராய் நினைப்பவரைக் கண்டேன்
சமயங்கள் அனைத்தினையும் சமமாக எண்ணும்
தமிழ்க்கனலாய் எழுந்துவரும் தவச்சுடரைக் கண்டேன்
அமைதியுடன் உலகெல்லாம் ஒற்றுமையாய் வாழ
அன்பென்னும் அமுதூட்டும் அன்னையினைக் கண்டேன்

வள்ளலாரின் வழிவந்த வள்ளலினைக் கண்டேன்
வளமான பன்மொழிநூல் வடித்தவரைக் கண்டேன்
தெள்ளுதமிழ் பாரதியின் தெளிவுதனைக் கண்டேன்
செக்கிழுத்த சிதம்பரனார் தியாகத்தைக் கண்டேன்
துள்ளிவரும் பாடல்களின் சுவையதனைக் கண்டேன்
தூயமாந்த நேயத்தின் தூதுவரைக் கண்டேன்
விள்ளுதமிழ்ச் சங்கநூற்கள் விளக்கங்கள் கேட்டேன்
விரிவானாய்ச் சுத்தானந்த வியப்பதனைக் கண்டேன்

## வேற்றுமையும் ஒற்றுமையும்

**தே. சுமங்கலா**

இங்கே காற்றுவாங்க
மொட்டைமாடி கட்டுகிறார்கள்
அங்கோ பழிவாங்கப்
பலமாடிகளை இடிக்கிறார்கள்

மதுவருந்த இங்கே அலைகிறார்கள்
உயிர் குடிக்க அங்கே அலைகிறார்கள்

இங்கே மக்கள் பலர் இறக்க
மழை வெள்ளம் காரணம்
அங்கோ குருதிவெள்ளம் புரண்டோட
குண்டு மழை காரணம்

இந்தியாவுக்கும் இலங்கைக்கும்
இதுவன்றோ வேற்றுமை
இதைக் கண்டும் தமிழர்கள் ஏன்
இன்னும் அடையவில்லை ஒற்றுமை?

(ஆசிரியரால் திருத்தி வெளியிடப்பட்டது.)

## தலை வணங்காத தமிழன்

சாவுக்குச் சாதனை படைப்பவன்
ஈழத் தமிழனடா
சுட்டு எரிக்கும் தீயில்
சுதிநயமோடு வாழ்பவன் ஈழத் தமிழனடா!
சத்திரியின் கையில் சாவு இருக்கும் போது,
நெஞ்சில் சஞ்சலம் இன்றி
மண்ணில் மடிபவன் ஈழத் தமிழனடா!

அராஜகம் செய்யும் அன்னியனுக்கு
அகர உகர எழுத்துக் கற்றுகொடுப்பவன்
ஈழத் தமிழனடா!

முத்தமிழ் தவழும் மண்ணில்
மூச்சு உள்ளவரை முன் நிற்பவன் ஈழத்தமிழனடா!
நெஞ்சில் குண்டு மழை பொழிந்தாலும்
ஈழமே எனது சொர்க்கம் என்று
கண் மூடுபவன் ஈழத் தமிழனடா!

தாய் பாடிய தாலாட்டுக் கேட்டும்
தமிழ் மண்ணில் ஒப்பாரி கேட்காமல்
இறக்க இறுமாப்போடு
போபவன் ஈழத் தமிழனடா!

விண்ணில் விளையாடுவது விமானங்களாய்
இருந்தும், மண்ணில் வாழ்ந்திடும்
எம் மக்களைக் கண் உறங்காமல்
காத்திருப்பவன் ஈழத் தமிழனடா!

க.ந. மதிமோகன்
இ.அ. முகாம்,
கிருஷ்ணகிரி வட்டம்,
தருமபுரி மாவட்டம்.

## கலையாவிலும் நிலையுயர்த்தும் தலைமைத்துவக் கல்வி!

**எஸ். சுரேசு**
இ.அ. முகாம், ஒக்கூர்

தலைமைத்துவக் கல்வி அது—வெறும்
தத்துவ ஏட்டுக் கல்வியல்ல
விழிப்புணர்வுடன் கூடிய—சமூக
விடியல் கல்வி அது
சாமானியனையும் தலைவனாகச்
சமைக்கும் கல்வியது
தரணியிலே சச்சரவுகளைத்
தவிர்க்கும் கல்வியது
குறிக்கோளை அறிவிக்கும்
குற்றமற்ற வழிகாட்டும்
பொறிபுலனைக் கூராக்கும்
பொற்காலம் உருவாக்கும்
எங்கே போகின்றோம் நாம்
என்பதனைத் தெளிவாக்கும்
எங்கேயும் வெற்றிபெறும்
இயல்பூக்கம் உண்டாக்கும்
நேரத்தை நிர்ணயிக்கும்
நினைத்ததை எய்துவிக்கும்
ஞாலத்தை வென்றுயரும்
ஞானத்தை உருவாக்கும்

(ஆசிரியரால் திருத்தி வெளியிடப்பட்டது)

## குடாநாட்டில் நாய், பூனை மூலம் பரவும் சரும நோய்

நாய், பூனை ஆகிய வீட்டு வளர்ப்பு மிருகங்கள் மூலம் ஒருவித சருமத் தொற்றுநோய் யாழ். குடாநாட்டில் பரவிவருகிறது. இந்நோய்க்குள்ளான சுமார் பத்து பேர் யாழ் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

நோய் பரவுவது பற்றி யாழ். போதனா வைத்திய சாலை டாக்டர் திருமதி குகதாசன் எச்சரிக்கை செய்துள்ளார். வீட்டு செல்லப்பிராணிகளான நாய், பூனை என்பனவற்றின் மலம் மூலம் பரவும் ஒரு வித சரும தொற்றுநோயினால் யாழ்ப்பாணத்தில் சிலர் பாதிக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. நாய், பூனை வளர்ப்பவர்கள் அவற்றுடன் அண்டிப்பழகுவது, அணைத்துக்கொள்வது, அவை புழங்கும் இடங்களில் பழகுவது போன்ற விடயங்களில் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும். நாய், பூனைகளின் மலத்தில் இருக்கும் அன்சிலோஸம் ரொமிகனினம் அன்சிலோஸம்ரொமிப்ரஸிலியென் என்னும் புழுக்களினாலேயே நோய் ஏற்படுவதாகதெரிவிக்கப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



## வாசகர் நெஞ்சம்

அன்புள்ள ஆசிரியரே!

இலங்கையில் இப்பொழுது நடைபெற்று வரும் போர் நிறுத்தப்படுவதற்கு, இந்திய மற்றும் தமிழக அரசுகளின் நடவடிக்கைகளையே உலகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என்ற முதல் பக்கக் கட்டுரை உண்மை நிலையைத் தெளிவு படுத்தும் உயிர்ப்புக் கொண்டதாகும்.

கோ. தியானேஸ்வரன், தஞ்சை-7.

இன்றைய இந்தியப் பிரதமர் வாஜ்பாய் முன்பு ஈழத் தமிழர் ஆதரவு மாநாட்டில் கலந்து கொண்டதை எடுத்துக் காட்டி, அவருடைய ஆட்சியிலே ஈழத்தமிழர் எதிர்பார்ப்பு நிறைவேறுமா? என்று வினாக்குறி எழுப்பியிருப்பது அனைத்து இலங்கைத் தமிழ் மக்களின் இதய தாகத்தை எதிரொலிப்பதாகும்.

கு.மு. கணேசன், திருத்தணி,

உலகமெங்கும் வாழும் இந்திய வம்சாவளி மக்களின் வாழ்வு வளமாவதற்கு, ''இந்தியத் தாய்த்திருநாட்டின் நிலைப்புத் தழைக்கட்டும்'' என்ற ஆசிரியத் தலையங்கம் அருமையான முத்தாய்ப்பு. ஆனால், இந்தியாவில் நிலையான ஆட்சி இருந்த காலத்தில் அது கடல் கடந்த இந்திய வம்சாவளி மக்களுக்காக என்ன செய்தது என்பது பெரிய கேள்விக்குறியன்றோ!

S.N. முஸ்தபா, சென்னை-1.

''சுமைகள் சுகமாகின்றன!'' சித்திராவின் சிறுகதையில் கதையம்சம் இல்லை என்றாலும், ஒரு ஈழத் தமிழ் மகளின் இதயத்தை நன்கு எதிரொலித்துள்ளார்.

முகவை முனியாண்டி,
ஆசிரியர் 'கல்வெட்டு', சென்னை-89.

அறிவியல் பகுதியில் 'தகவல் தொடர்பு கோட்பாடுகள் பற்றிய விளக்கம் பாராட்டத்தக்கது. 'சின்னச் சின்னத் துளிகள்' நல்ல தொகுப்பு.

மா. இறையடியான், மேலூர்.

''கி.பி. 1000 வரைக்கான ஈழத் தமிழர் வரலாறு'' தொடக்கமே சிறப்பாக இருந்தது. முதலில் தமிழ் பேசுவோராகவே இருந்து, பிறகு மொழிமாறித் தெலுங்கராக, கன்னடராக, மலையாளிகளாக மாறிய தென்னிந்தியரைப் போலவே, இலங்கையில் சிங்களரும் முதலில் தமிழ் பேசுவோராக இருந்து, பின்னர் மொழி மாற்றத்தாலும் மத மாற்றத்தாலும் சிங்களவராயினர் என்பதே உண்மை. கங்கைக் கரையிலிருந்து வந்த நம்பூதிரிகளின் கலப்பு சேரநாட்டு மக்களை மலையாளிகளாய் மாற்றியதைப் போல லாலா தேசத்திலிருந்து கள்ளத் தோணியில் வந்த விஜயன் கூட்டத்தாரின் கலப்பு ஈழ நாட்டவரை சிங்களவராக மாற்றியிருக்கிறது.

புலவர் வே. கந்தசாமி, செங்கோட்டை.

கவிதைச் சரத்தில் ''புறப்படுவீர் நங்கையரே புத்துலகு படைத்திட'' என்ற செல்வி கிருமாலினியின் கவிதை, பாரதியாரின் 'புதுமைப்பெண்' கவிதையை நினைவூட்டுகிறது. 'இந்தியத் தாய்க்கோர் விண்ணப்பம்' எமது எண்ணங்களின் பிரதிபலிப்பாக இருந்தன.

அ. கதிர்காமத்தம்பி, திருச்சி-3.

'சந்தியில் சந்திக்கிறார்கள்' புதிய பகுதி நலம்; ஆனால் 'சுப்பையர் பேசுகிறார்' பகுதியின் பரிணாம வளர்ச்சியாகவே உள்ளது.

என். கோணேஸ்வரன், சென்னை-90.

சுப்பையா தந்த தபால்தலை செய்திகள் சிறப்பாக உள்ளன. 'ஆபர்' பணிகள் பற்றிய செய்திகள் சென்ற இதழில் நிறைய உள்ளன, இவ்வளவு செய்திகளை வைத்துக் கொண்டு இதுவரை ஏன் வெளியிடாதிருந்தீர்கள்? ஒவ்வொரு தொண்டு நிறுவனமும் தன் செய்திகளை வெளியிடப் பத்திரிகை இல்லாவிட்டாலும் கூட துண்டறிக்கைகளாக அச்சிட்டு விநியோகிக்கின்றன. நீங்கள் என்னவென்றால் ஈழசுதந்திரனை வைத்துக்கொண்டு இதுவரை அக்கறையில்லாமல் இருந்திருக்கிறீர்களே!

ஏ.பி. தாமஸ், திருச்சி-1.

தந்தை செல்வா வாழ்க்கை வரலாற்றுத் தொடர் நெஞ்சை உருக்குவதாக உள்ளது. ''ஈழத் தமிழர் பிரச்சினையை இந்தியா-இலங்கை மறுபடியும் எவ்வாறு கையாளப் போகின்றன?'' என்ற கேயாரின் கட்டுரை கண்டேன். கைப்புண்ணுக்கு கண்ணாடியா வேண்டும்? திரும்பவும் வழ வழாகொழகொழாதான்!

சிறீசபாநாயகம், புதுவை-1.

### கைதுகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமாயின்

# விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்துவதே சரியான தீர்வாகும்

### ஜனாதிபதிக்கு யாழ். எம்.பி. கடிதம்

தலைநகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தமிழ்மக்கள் வகை தொகையின்றிக் கைது செய்யப்படுவது தொடர்பாக பலமுறைபாராளுமன்ற உறுப்பினர்கள், பிரமுகர்கள் மற்றும் பலதரப்பட்டவர்களாலும் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டபோதும் இக்கைது விடயமாக அரசினால் சரியான தீர்வு காண முடியாமலுள்ளது. இதற்குக் காரணம் யுத்தமே. யுத்தம் தொடரு மட்டும் மக்களும் அரசும் இந்த நிலையில் இருந்து மீள முடியாது எனக் கருதுகின்றோம், எனவே உடனடியாக யுத்த நிறுத்தமும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையுமே சரியான தீர்வாகும்.

இவ்வாறு யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நா. இ. இராமேஸ்வரன் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

#### கவன ஈர்ப்புக் கடிதம்

தமிழர்களின் கைதுகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தமிழ் மக்களின் அவலநிலை சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன் அவர்கள் பெரும் பீதியும் மனவிரக்தியும் அடைந்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்நாட்டின் ஜனாதிபதி என்ற முறையில் அனைத்து மக்களின் துயரைத் தீர்த்து வைக்கும் பாரிய பங்கு உங்கள் கையிலேயே தங்கியுள்ளது. இந்நாட்டு மக்களின் பிரச்சினைகளை நன்கு உணர்ந்தவர் என்ற ரீதியிலும் சமாதானத்தில் பெரும் அக்கறையும் நம்பிக்கையும் உள்ளவர் என்ற ரீதியிலும் உங்கள் சமாதான முயற்சிக்கு இந் நடைமுறைகள் பாதகமாகவே அமையும் என்பதை நாம் உணருகிறோம். ஆகவே உங்களின் சமாதான முயற்சி கைகூட உடனடியாக யுத்த நிறுத்தமும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையுமே சரியான தீர்வாகும்.

எம்மால் இயன்றவரை சமாதானத்திற்கான பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் நாங்கள் வழங்குவோம்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் கடந்த நாட்களில் நடைபெற்ற குண்டுத் தாக்குதல் காரணமாகவே இந்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பதுடன் குண்டுத் தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்கள் அனைத்து ஆதாரங்களும் வைத்திருந்தார்கள் என்பதையும் குறிப்பிட்டார். மேலும் இவ்விடயமாக பாதுகாப்பு கவுன்ஸிலில் முடிவு எடுக்கப்படும் என்றும் மாற்று நடவடிக்கையை தாம் எடுக்க முனைவதாகவும் கூறினார். அத்துடன் ஒவ்வொரு பகுதிகளிலும் பிரஜைகள் குழு அமைத்து கைதுசெய்யப்படுபவர்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு எம்.பி.க்கள் அமைச்சரிடம் கேட்டுள்ளனர்.

# விமானக் குண்டு வீச்சு ஷெல் தாக்குதலை கண்டித்து தர்மபுரத்தில் ஆர்ப்பாட்டம்

வன்னிப்பகுதியில் இடம் பெறும் விமானக் குண்டுத் தாக்குதல்கள், ஷெல் வீச்சுக்கள் ஆகியனவற்றைக் கண்டித்து வன்னிப் பகுதியிலுள்ள தர்மபுரத்தில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது.

இப்பேரணியில் மாணவர்கள், வியாபாரிகள், பொது மக்கள் பெருமளவில் கலந்து கொண்டதாக வவுனியாவுக்கு கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தர்மபுரம் வைத்தியசாலை இருந்து ஒரு அணியும், விசுவமடு சுண்டிக்குளம் சந்தியில் இருந்து ஒரு அணியுமாக இரு அணிகள் புறப்பட்டு தர்மபுரம் முருகானந்த வித்தியாலயத்தை சென்றடைந்தன. அங்கு பொதுகூட்டம் ஒன்றும் இடம்பெற்றது.

குண்டுத் தாக்குதல்களால் ஏற்பட்டுள்ள அழிவுகளைச் சித்திரிக்கும் ஊர்திகளும் பேரணியில் இடம்பெற்றிருந்தன.

பேரணியில் சென்றோர் பதாதைகளையும் தாங்கிச் சென்றனர். ''குண்டுவீசி மக்களின் குடியிருப்புகளை அழிக்காதே'', ''விமானிகளின் பயிற்சிக்களம் மக்கள் குடியிருப்புக்களா'', ''சர்வதேசமே இலங்கையில் இடம் பெறும் கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்களை தடுத்து நிறுத்து'' போன்றவாசகங்கள் காணப்பட்டன.

முருகானந்தா வித்தியாலயத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் குண்டுத் தாக்குதல்களை கண்டித்து பலரும் உரையாற்றினர்.

## பட்டிருப்பு தொகுதியில் இருநூறு வீடுகள்

பட்டிருப்பு தேர்தல் தொகுதியில் மானிய அடிப்படையில் மேலும் 200 வீடுகள் கட்டப்படவுள்ளன.

புனர்வாழ்வு புனரமைப்பு துறைமுகங்கள் கப்பல் துறை அமைச்சர் எம்.எச்,எம். அஷ்ரஃபிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்து இதற்கான நிதியை வழங்குமாறு அவர் றேப்பியா தலைவரைப் பணித்துள்ளதாக மன்ற உறுப்பினர் பொ. செல்வராசா தெரிவித்தார்.

25 ஆயிரம் ரூபா மானிய அடிப்படையில் பாலையவட்டை, மாவடி, முன்மாரி, குறுமண்வெளி, கோடைமேடு ஆகிய இடங்களில் தலா 50 வீடுகள் வீதம் மேற்படி 200 வீடுகளும் அமைக்கப் படவுள்ளன.

## நீதி, நேர்மை கடைப்பிடிக்க விளையாட்டு ஒரு வழிகாட்டி

மனித வாழ்க்கையில் நீதி நேர்மை ஆகியவற்றைகடைப் பிடிக்க பள்ளிக்கூடப் பருவத்தில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள் சிறந்த வழிகாட்டியாகும். விளையாட்டுப் போட்டிகள் மூலம் கட்டுப்பாடு, ஒழுக்கம், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, வெற்றியையும் தோல்வியையும் சமமாக மதித்துக்கொள்ளும் சகிப்புத்தன்மை போன்றவைகளையும் இளமைப் பருவத்திலே பெற்றுக்கொள்ள முடியும் என அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிபதி எஸ். சுரேந்திரன் கூறினார்.

அக்கரைப்பற்று இராமகிருஷ்ணா தேசியக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இவர் உரையாற்றினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், அப்பர், சம்பந்தர், சுந்தரர் போன்ற நாயன்மார்களை பிரதிபலிக்கும் நாமத்துடன் மூன்று இல்லங்களுக்குமிடையில் நடைபெற்ற போட்டிகளைக் கவனிக்கும் போது மாணவர்கள் மத்தியில் உள்ள கட்டுப்பாடுகளை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. மாணவர்களுக்கு கல்வி எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்கு விளையாட்டும் முக்கியமான அம்சமாகும்.

வித்தியாலய அதிபர் கே. இரத்தினவேல் வரவேற்புரை நிகழ்த்தினார்.

படிப்பகம்

www.padippakam.com



# தந்தை செல்வா



த. சபாரத்தினம்

## அங்கம்-4

ஏப்பிரல் 27. யாழ்ப்பாண மணிக் கூட்டுக் கோபுரத்தில் இருந்த கடிகாரம் 'டாண், டாண், டாண்' என பன்னிரண்டு தடவைகள் ஒலித்தது.

மணிக்கூட்டுக் கோபுரத்தின் உச்சியிலும் ஒரு கறுப்புக் கொடி.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, வடக்கிலும் கிழக்கிலுமுள்ள நகரங்களிலும், கிராமங்களிலும், குக்கிராமங்களிலும், வீடுகளிலும் கறுப்பு அல்லது வெள்ளைக் கொடிகள்.

ஒவ்வொரு தமிழ் பேசும் சீவனின் உள்ளத்திலும்தான்'

'தமிழ் பேசும் மக்கள் வதியும் பகுதிகளில் எல்லாம் இருள்படர்ந்து விட்டது. என்று எழுதினார் யாழ்ப்பாணத்திலிருந்து டெயிலி நியூஸ் சிறப்பு நிருபர்.

யாழ்குடா நாட்டில் சிறப்பு ஏற்பாடுகள்.

தோரணம்,
மாவிலை,
வாழை,
இறுதி ஊர்வலம் சென்ற பாதைகள் எல்லாம்.

தந்தை கட்டி எழுப்பிய தமிழர் விடுதலைக் கூட்டணியிடம்...

தந்தை தன் உயிரைக் கொடுத்திருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பரிணாம வளர்ச்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியிடம்...

யாழ். பெரியாஸ்பத்திரியிலிருந்து பொறுப்பேற்ற தந்தையின் பூதவுடலைச் சந்திரகாசன் கையளித்தார்.

சிவசிதம்பரம், அமிர்தலிங்கம், தர்மலிங்கம், சம்பந்தன், ராஜதுரை,கே வி.இரத்தினம், செல்லத்தம்பு,ஆலாலசுந்தரம், வி. என். நவரத்தினம், ஆனந்தசங்கரி, துரைரத்தினம் உட்பட கூட்டணித் தலைவர்கள் தந்தையின் பூதவுடலைக் கையேற்று யாழ்ப்பாண மெயின் வீதியிலிருந்த தமது அலுவலகத்துக்குக் கொண்டு சென்றனர். அங்கே கட்சி உறுப்பினர்களும் தொண்டர்களும் அஞ்சலி செய்தனர்.

### பிரதமர் அஞ்சலி

மாலை ஆறு மணி.

தந்தையின் பூதவுடல் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

சாரை சாரையாக மக்கள் யாழ்குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலுமிருந்து வந்து குவிந்தனர்.

எங்கும் உணர்ச்சி வெள்ளம்.

''தந்தையே! எங்களைத் தவிக்கவிட்டுட்டுப் போய்விட்டாயே''

நரைத்த தலை மாது ஒருவர் புலம்பினார்.

அவரைக் கைப்பிடியாய்க் கூட்டிச்சென்ற பேரப் பிள்ளையும் அழுது விட்டார்.

''கியூ'' வளர்ந்து கொண்டு போனது.

28 காலையில் முக்கால் மைலுக்குமேல் வளைந்து வளைந்து சென்றது.

காலை 9.40 மணிக்கு கொழும்பிலிருந்து விசேட விமான மூலம் வந்த தலைவர்கள்வீரசிங்கம் மண்டபத்துக்கு வந்தனர்.

வெள்ளைச் சேலையணிந்த பிரதம மந்திரி ஸ்ரீமாமோ பண்டாரநாயக்கா.

சபாநாயகர் ஸ்டான்லி திலகரத்தின.

அமைச்சர்கள் மைத்திரிபால சேனநாயக்க, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க, பதியுத்தீன் மஹ்மூத், ரி. பி. இலங்கரத்தின, செல்லையா குமாரசூரியர், கே. பீ. இரத்னாயக்க.

கைகூப்பி, தலை குனிந்து அஞ்சலி செய்தார் ஸ்ரீமா.

பின்பு தந்தை செல்வாவின் மனைவியிடம் போனார் தனது அனுதாபத்தை தெரிவித்தார்.

''அரசாங்கம் எல்லா உதவிகளையும் செய்யும்'' என்று சொன்னார்.

### அணியணியாக மக்கள்

30 மாலை 6 மணிவரை அணிஅணியாகச் சென்று அஞ்சலி செலுத்தினர் மக்கள்.

ஆறு மணிக்கு தந்தையின் பூதவுடலை கறுப்புநிற சவவண்டியில் ஏற்றியபோது

முற்றவெளியில் குழுமி நின்ற ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கதறி அழுதனர்.

உருக்குத் தொப்பியணிந்த பொலிஸார் மோட்டார் சைக்கிள்களில் முன்னும் பின்னும் இரு பக்கங்களிலும் செல்ல நீண்ட 25 மைல் பாதை வழியே மோட்டார் பவனி ஊர்ந்து சென்றது.

தெருவின் இரு கரைகளிலும் மக்கள்.

பூக்கள் தூவினர் சிலர்.

கண்ணீர் உகுத்தனர்பலர்

தமது குடும்பத்தவரைப் பிரிந்த உணர்வு எல்லோருக்கும்.

நான்கு மணித்தியாலங்களாக நீண்டுவிட்ட ஊர்வலம்

தெல்லிப்பளை இல்லத்தை அடைந்தபோது இரவு 10மணி

அங்கேஉணர்ச்சிக்காட்சிகள்.

'ஐயா! நாங்கள் உங்களை இனிமேல் எப்படி இங்கே வந்து பார்ப்பது?''

இரவு முழுவதும் இதே உணர்ச்சிப் பிரவாகம்.

காலையில் மதச் சடங்குகள்.



தந்தை செல்வா கொழும்பில்
பாராளுமன்றம் செல்லும்போது எடுத்தபடம்

தந்தை வழக்கமாகப் போகும் தெல்லிப்பளை சி.எஸ்.ஐ. (சேர்ச் ஒப் சவுத் இந்தியா) தேவாலயத்தில்

அந்தச் சின்னத் தேவாலயத்திற்குள் முண்டியடித்துக் கொண்டு குடும்பத்தினர், உறவினர், பிரமுகர்கள்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் தோத்திரப் பாடல்கள் பாடப்பட்டன.

சி. எஸ். ஐ. மிஷனின் யாழ்ப்பாண பிஷப் வண.பிதா எஸ். அம்பலவாணர் நல்லடக்க ஆராதனை நடத்தினார்.

யாழ்ப்பாண முன்னாள் பிஷப் ஜி. குலேந்திரன் உதவினார்.

தெல்லிப்பளைச் சந்தியில் இருந்து இறுதிஊர்வலம் ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

யாழ் குடா நாட்டின் பல பகுதிகளிலிருந்து சிறுசிறு ஊர்வலங்கள் அங்குவந்து சங்கமித்தன.

யாழ் குடாநாட்டிற்கு வெளியேயிருந்தும் பல ஊர்வலங்கள்.

ஆனந்த சங்கரியின் தலைமையில் கிளிநொச்சியிலிருந்து வந்து சேர்ந்த ஊர்வலம் அவற்றில் குறிப்பிடத்தக்கது.

பதினைந்து அடி உயர வெள்ளி ரதத்தை இழுத்து வந்து சந்தியில் நிறுத்தினார்கள். முப்பதாயிரம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டது அது.

தேவாலயத்திலிருந்து பூதவுடலை இளைஞர் பேரவையினர் பொறுப்பேற்றனர்.

மாவை சேனாதிராசா, உமாமகேஸ்வரன், ஈழவேந்தன், சித்தார்த்தன், கோவை மகேசன் உட்படப் பலர் பூதவுடலைத் தாங்கிச்சென்றனர்.

ஊர்வலம் புறப்பட்டது.

தெருவின் குறுக்கே போன மின்கம்பிகளை தொண்டர்கள் கொக்கைத் தடியால் உயர்த்த...

உயர்த்த முடியாதவற்றை கழற்றி வழி ஏற்படுத்திக் கொடுக்க...

வழி நெடுகிலும் குழுமி நின்ற மக்கள் 'ஐயோ! ஐயா! எந்தத் தடைக்குமே அஞ்சாதவர்கள் நீங்கள்' என்று கதறியழுதனர்.

வழிநெடுகிலும் உணர்ச்சிக் கொந்தளிப்புக்கள்.

ஓர் இளம் பெண் மயங்கி விழுந்து விட்டார்.

'விலகுங்கள். வழி விடுங்கள். இப்பவே லேற்'

ஊர்வலப்பாதை பதினொரு மைல்கள்.

யாழ். துரையப்பா மைதானத்துக்கு முன்னாலுள்ள முக்கோண வடிவிலான மைதானத்தை மாலை 6 மணிக்கு அடைவதாகத் திட்டம்.

ஆறு மணிக்கு முன்பே அங்கு பிரமுகர்கள் கூடிவிட்டனர்.

டாக்டர் என். எம். பெரேரா,
ஆர். பிரேமதாசா
செல்லையா குமாரசூரியர்
ஏ. அஜீஸ்
எம். எஸ். செல்லச்சாமி
வி. பொன்னம்பலம்
இரா. நெடுஞ்செழியன்
நாஞ்சில் மனோகரன்

இரவு பத்து மணிக்கு ஊர்வலம் வந்து சேர்ந்தது.

இறுதி யாத்திரையை 'கவர் பண்ண' (செய்தி எழுத) யாழ்ப்பாணம் போன 'தினகரன்' அலுவலக எழுத்தாளர் பொன். பாலசுந்தரம் எழுதினார். யாழ்ப்பாணம் இதுவரை கண்டிராத ஜன சமுத்திரம் திரண்டிருந்தது. கர்ம வீரரை இறுதிவழியனுப்பி வைத்த காட்சி கல்நெஞ்சையும் கரையச் செய்து விட்டது.

அஞ்சலி உரைகள் சுருக்கமாகத் தான் இருந்தன. தமிழ் பேசும் மக்களை ஒற்றுமைப் படுத்தியவர் தந்தை. சமாதானப் பாதையிலும் சத்தியாக்கிரகத்திலும் அசையா நம்பிக்கையுடையவர். தமிழ் மக்களின் விடிவுக்காகத் தன்னை தியாகம் செய்தவர் என்பவை தான் அவ்வுரைகளின் பொழிப்பு.

பிரதான எதிர்க்கட்சியாக விருந்தயு என்.பி.யின் சார்பில் உரையாற்றிய ஆர். பிரேமதாசா சொன்னார்: மூதறிஞர் செல்வநாயகத்தைப் போன்றவர்கள் இவ்வுலகில் மிகஅரிது. சிறந்த அரசியல்வாதியான இவர் உயர்ந்த குணமும் உன்னத பண்பும் உள்ளவர். இந் நாட்டில் வாழும் மற்ற மக்களின் உரிமைகளுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் தமிழ் மக்களின்உரிமைகளை வென்றெடுப்பதற்காகப் போராடினார்கள். எல்லோராலும் மதிக்கப்படும் மனித சமுதாயத்தை ஏற்படுத்துவதே நாம் அவருக்குச் செய்யக் கூடிய இறுதி அஞ்சலி''.

### சிறுபான்மையினரின் குரல்

டாக்டர் என். எம். பெரேரா சொன்னார்:''அமரர் செல்வநாயகம் தனி மனிதனாக மட்டும் காட்சியளிக்கவிலலை இச்சகாப்தத்தில் புதுயுகம் ஒன்றை உருவாக்கிய பெரியவர் அவர். இவர் தமிழ

(16ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



## ஒரு குறளை உணர்வோம்

# திருவள்ளுவர் கூறும் இருமை எவை?

- 'அருகோ' -

''இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு''

திருக்குறள் : 23

பரிமேலழகர் : இருமை வகை தெரிந்து - பிறப்பு வீடு என்னும் இரண்டினது துன்ப இன்பக் கூறுபாடுகளை ஆராய்ந்து அறிந்து; ஈண்டு அறம் பூண்டார் பெருமை— அப்பிறப்பு அறுத்தற்கு இப்பிறப்பின் கண் துறவறத்தைப் பூண்டார் பெருமையே; உலகு பிறங்கிற்று—உலகின் கண் உயர்ந்தது என்றவாறு.

''தெரிமான் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்'' என்புழிப்போல, 'இருமை' ஈண்டு எண்ணின்கண் நின்றது. பிரிநிலை ஏகாரம் விகாரத்தால் தொக்கது. இதனால் திகிரியுருட்டி உலகம் முழுதாண்ட அரசர் முதலாயினார் பெருமை பிரிக்கப்பட்டது.

மணக்குடவர் : பிறப்பும் வீடும் என்னும் இரண்டினது கூறுபாட்டை ஆராய்ந்து, இவ்விடத்தே துறவறத்தை மேற் கொண்டவரது பெருமை உலகத்தில் மிக்கது என்றவாறு.

இஃது எல்லாராலும் போற்றப்படும் என்றது.

பரிதியார் : புண்ணிய பாவத்தின் வழியறிந்து தன்மத்தின் வழிநின்றார் பெருமையினால் உலகம் விளங்கும் என்றவாறு.

காளிங்கர் : கீழ்ச்சொன்ன பரிசே இம்மை மறுமை இரண்டினது குற்றத் தன்மையைத் தெரிந்து, மிக்கிருந்துள்ள அறப்பயனாகிய வீட்டின்பத்தை மேவியுள்ளாரது பெருந்தன்மையையே மிகுத்துக் கூறியது இவ்வுலகம் என்றவாறு.

டாக்டர் மு.வ. : பிறப்பு வீடு என்பனபோல் இரண்டிரண்டாக உள்ளவைகளின் கூறுபாடுகளை ஆராய்ந்து அறிந்து அறத்தை மேற்கொண்டவரின் பெருமையே உலகத்தில் உயர்ந்தது.

இக்குறட்பாவில் 'இருமை' என்பதற்கு பிறப்பு வீடு என்று பரிமேலழகரும், புண்ணியம் பாவம் என்று பரிதியாரும் பொருள்கூற, அந்த இரண்டையுமே தழுவி ''பிறப்பு வீடு என்பன போல் இரண்டிரண்டாக உள்ளவைகளின் கூறுபாடுகள்'' என டாக்டர் மு.வ. பொருள் கொண்டு உரை எழுதியுள்ளனர்.

ஆனால், 'இருமை' என்று வள்ளுவர் இக்குறட்பாவில் குறிப்பிடுவது அகம் புறம் என்னும் மாந்தவாழ்வின் இரு கூறுபாடுகளையே ஆகும். அதுதானே தமிழர் கண்ட பண்டையவாழ்வுநெறி. ஏனெனில்சிலர் அகவாழ்வில்அறத்தையே கடைப்பிடிப்பார்கள். புறவாழ்வில் மனம்போனபடி நடந்து கொள்வார்கள். அதைப்போலவே புறவாழ்வில் நல்லவராக நடந்து கொள்ளும் பலர் அகவாழ்வில் கொடுமைகளின் கொள்கலமாக இருப்பார்கள். அவர்களின் ஒரு பக்கத்தை மட்டுமே பார்த்து, மறுபக்கத்தைப் பார்க்காதிருக்கும் வரை அவர்களை உயர்ந்தவர்கள் என்று முதலில் கொண்டாடும் உலகம், அந்த மறுபக்கமும் தெரிய வருகிறபோது அவர்களைத் துரும்பிலும் கேவலமாகப் புறக்கணித்துவிடும்.

எனவே, ''அகம் புறம் என்னும் இரண்டினது தன்மைகளையும் ஆராய்ந்து தெளிந்து, அவ்விரண்டிலும் அறவழியிலேயே வாழ்ந்து சிறப்போராலேயே இவ்வுலகம் சிறக்கும்; அவர்களையே உயர்ந்தவர்கள் என்று இவ்வுலகம் நிலையாகக் கொண்டாடும்'' என்பதே இக்குறட்பாவின் உண்மையான பொருளாகும்.

# தந்தை செல்வா... (15ம் பக்கத் தொடர்ச்சி)

இனத்துக்கு மட்டும் தலைவரல்லர். இலங்கை அரசியல் வானில் சுடர்விட்டுப்பிரகாசிக்கும் விளக்காக அவரை நான் மதிக்கிறேன்.''

மு. சிதம்பரம் சொன்னார் ''தந்தை செல்வா தமிழ் மக்களின் ஒற்றுமைக்காக வடக்கு-கிழக்கு, மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற வித்தியாசம் இல்லாமல் எல்லாரையும் ஓர் அணியில் சேர்த்து வழிநடத்தியவர்''.

குருநாகல் பிஷப் வண. பிதா லக்ஷ்மன் விக்கிரமசிங்க சொன்னார்: ''செல்வநாயகம் மனிததத்துவத்தின் ஓர் அங்கம். அவர் ஒரு சந்தர்ப்பவாதியோ, சூத்திரதாரியோ அல்லர். அவர் ஒரு சமாதானப் பிரியர். எல்லாரையும் சமத்துவமாக நடத்தினார். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர் ஒரே மாதிரியாகவே நடந்து கொண்டார்''.

''பண்பு, அன்பு, நேர்மை தமிழ் மக்கள் மீது ஆழ்ந்த பற்று என்பவை எஸ்.ஜே.வி.யின் சிறப்பம்சங்கள்'', என்று கூறிய குமாரசூரியர் தந்தையின் பண்பை விளக்க ஒரு சம்பவத்தைக் கூறினார்.

''ஒரு நாள் அறிஞர் செல்வா என்னை எனது ஐந்தாவது மாடியில் பார்க்க வந்தார். லிப்ட் பழுதடைந்திருந்ததால் ஒவ்வொரு படியாகஏறி வந்து கொண்டிருந்தார். அதைக் கேள்விப்பட்டதும் நான் இறங்கிப் போய் அவரை வழியில் சந்தித்தேன். ''நீங்கள் டெலிபோன் செய்திருந்தால்நானேவந்துகொடுத்திருப்பேனே'' என்றேன். அதற்கு அவர் சொன்ன பதில்,''உதவி கேட்பவன்தான் உதவி செய்பவனிடம் போக வேண்டும். நேரே வந்தால் உடனடியாக முடிந்து விடும்''.

பிரதமமந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்க அனுதாபச் செய்தியை அனுப்பிவைத்தார் அதில் அவர் சொன்னது: ''செல்வநாயகம் எப்பொழுதும் நியாயமாக நடந்து கொள்பவர். மற்றவர்களின் கருத்துக்களுக்கும் மதிப்பளிப்பவர்... அரசுக்கெதிராக எதிர்க்கட்சியினர் கண்டனத் தீர்மானங்களைத் தயாரிக்கும் போது கடினமான வார்த்தைகளை உபயோகித்தால் அவற்றை நீக்கிவிடுமாறு கூறிவிடுவார்''.

பீட்டர் கெனமன் தனது அனுதாபச் செய்தியில் சொன்னார்: ''அவர் பாராளுமன்றத்தில் பேசும் போது, சத்தமே இருக்காது. அவர் சொல்பவற்றை மிகவும் மரியாதையுடன் கேட்போம். தேசிய சிறுபான்மையினரின் குரலாக அவர் மதிக்கப்பட்டார்''.

இரவு பத்து மணி.

மூன்று இலட்சத்துக்கும் அதிக மக்கள் அமைதியாக நின்று கொண்டிருந்தனர்.

வெள்ளி ரதம் ஊர்ந்து ஊர்ந்து வந்து சேர்ந்தது.

ரதத்திலிருந்து பாய்ந்து இறங்கினார் வடிவேற்கரசன், அமிர்தலிங்கம், மாவை சேனாதிராஜா, உமா மகேஸ்வரன் உட்படப் பலரும் பாய்ந்து போய் உதயசூரியன் கொடியால் போர்த்தப்பட்ட பேழையைத் தூக்கிச் சுமந்தனர்.

சந்தனக் கட்டை அடுக்கிய சிதையில் வைத்ததும் பிஷப் அம்பலவாணர் சிதைக்குக் கொள்ளி வைத்தார்.

''ஐயா! ஐயா! ஐயா!''

ஓவென்ற அழுகைக்குரல்

புகை கிளம்பியது.

தீச் சுவாலை பாய்ந்து எழுந்தது.

''நீங்கள் இறக்கவில்லை ஐயா! எங்களுடன் வாழ்கிறீர்கள்''.

எல்லா உள்ளங்களையும் உலுக்கியது அந்த அசரீரிக் குரல்.

அது கண்டு இயற்கையே அன்று அழுதது.

மனநோய் மருத்துவம்:

# டாக்டர் சற்குணநாயகம் ஆற்றிச் சென்ற சீரிய பணி

பிரபல மனநல மருத்துவ நிபுணர் டாக்டர் சற்குணநாயகம் லண்டனிலிருந்து 31-8-98 அன்று ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்திற்கு வருகை தந்தார். இவர் கழகத் தொண்டர்களுடன் மூன்று வாரகாலம் தங்கியிருப்பதற்கு இசைவு தெரிவித்தார். இக்கால கட்டத்தில் மண்டலங்களுக்கு விஜயம் செய்து மன நோய்கள் பற்றியும், அவற்றுக்கான சிகிச்சை முறைகள் பற்றியும் விரிவுரைகள் ஆற்றியும் அவை தொடர்பான கலந்துரையாடல்களில் பங்கு கொண்டும் தம் பொழுதைச் செலவிட்டார்.

மேலும் எமது ஈழ அகதிகள் வதியும் முகாம்களுக்கு விஜயம் செய்து நலப்பணியாளர்களின் உதவியுடன் முகாம்களில் உள்ள மன நோய்களினால் பாதிக்கப்பட்டு அல்லல் உறும் மன நோயாளிகளை தினம் கண்டு அவர்களுடனும், அவர்கள் குடும்பத்துடனும் கலந்துரையாடி நோயாளிகளின் மன நோயின் தன்மையையறிந்து, இம் மனநோய்க்கு அவர் எப்படி ஆளானார்? அதன் அடிப்படைக் காரணங்கள் என்ன? என்பதை அறிவதற்கான வழிமுறைகளையும், மருத்துவ நுணுக்கங்களையும் தெளிவாக எடுத்துக் கூறியதுடன், நோயாளிக்கு எப்படிச் சிகிச்சை செய்து குணப்படுத்தலாம் என்ற விளக்கங்களையும் எடுத்துக் கூறினார்.

*நிபுணத்துவம்*

மனநோய் என்பது ஒருவருக்குப் பலதரப்பட்ட காரணங்களினால் ஏற்படுவது, மனநோயால் பாதிக்கப்பட்டவரை அவருடையநடைமுறைகளிலிருந்தும், செய்கை அறிகுறிகளிலிருந்தும் மன நோயாளி என்று ஓர்அளவுக்கு நம்மால் அடையாளம் காண முடிகிறது. ஆனால் எக்காரணத்தினால் இவருக்கு இப்பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை எளிதில் எம்மால் அறிய முடியாது. மிகச் சுலபமான மருத்துவ வழிமுறைகளைக் கையாண்டு மன நோயாளிகளை இனம் கண்டு அவர்களுக்குத் தகுந்த சிகிச்சைகளைக் கொடுத்து. நோய்களைக் குணப்படுத்துவதற்கான சிறந்த மருத்துவ அறிவுரைகளையும், கருத்துக்களையும் வழங்குவதற்காக இத்துறையில் திறமை பெற்ற வல்லுனர், நிபுணர் டாக்டர். சற்குணநாயகம், எம்மத்தியில் உழைத்தார்.

*வரப்பிரசாதம்*

டாக்டர் சற்குணநாயகம் அவர்கள் மன நோயாளிகளை இனம் காண்பதிலும். அவர்களுக்குச் சிறந்த சிகிச்சை வழங்குவதிலும் நிபுணத்துவம் பெற்றுள்ளார். ஒரு மன நோயாளியை எப்படி அணுக வேண்டும்? எத்தகைய மன வியாதியினால் அவர் பாதிக்க பட்டுள்ளார்? ஒவ்வொருவகைபட்ட மன நோய்களுக்கும் எப்படிச் சிகிச்சை அளிக்கவேண்டும்? என்ற மருத்துவ அறிவுரைகளையும், கருத்துக்களையும் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறினார். முகாம் வாழ் மக்களுக்கு டாக்டர் சற்குணநாயகத்தின் வரவு ஒரு வரப்பிரசாதமாக இருந்தது எனக் கூறலாம்.

மருத்துவப் பிரிவு
ஈ.ஏ.ம.க.
சென்னை-8.

Edited Printed, Published and Owned by ARUNACHALAM GOPALAN, No. 14, Salt Colony 1st Street, Egmore, Chennai-600008
Printed at Kuralneri Achagam, 4/77, Subethar Garden, Choolaimedu, Chennai-94

ரன நாயகம்-சமதர்மம்-சமய சார்பின்மை-நமது பாதை.

படிப்பகம்